இலவச வெளியீடு: GERMANY , ENGLAND
தை.Jan. 2016
Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy
மணி 66
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A






## தமிழ் மக்கள் பேரவை தேசிய இயக்கமா?

## புதிய அரசியல் யாப்பு யாருக்கு?





T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
விபரம் பக்கம் 09

கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740
விபரம் பக்கம் 24

டோட்மூண்ட் நகரில் எட்டாவது ஆண்டில் எமது சேவை!
Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
மேலதிக விபரம் 11ம் பக்கம்

Frankfurt:Tel:069 97 693 374
SARAVANAA BHAVAN

asiamarkt24.com
Online Supermarket - 0231 330 46 798

Lucky Fly
0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex
Tel.: 0231/8602696



மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




Tel.: 0201/236925

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN


# அதைச் சாப்பிடாதைங்கோ! இதைச் சாப்பிடாதைங்கோ! அப்போ! எதைத்தான் சாப்பிடுவது!!!

சிவஜெனனி



## நல்லது என்று உண்ணும் சில உணவும் புற்றுநோய் வரக் காரணமாகிறது.

அதைச்சாப்பிடாதைங்கோ "இதைச் சாப்பிடுங்கோ! அதைச் சாப்பிடுங்கோ அப்போ தான் மூளையும் உடலும் ஆரோக்கியமாக வளரும்"! இதனை எத்தனை வீட்டில் கேட்டிருப்போம். ஆனால் நாம் பலதும் தெரிந்தது போல் பிள்ளைகளுக்கு சொல்வது எல்லாம் உண்மையா?

மதுபானம் அளவுக்கு மிஞ்சினால் ஈரலைத்தாக்கும் புகைப்பிடித்தால் புற்றுநோய்வரும் இது எல்லாம் சொல்லிச் சொல்லியே விற்கவும் வேண்டும், தெரிந்து தெரிந்தே வாங்கவும் வேண்டும்.இதனால் வரும் ஆபத்துக்கள் அவா் அவா் தாமாக வாங்கிக்கொள்வதே.

ஆனால் சில நமக்குத்தெரியாத ஆனால் கெட்டது என்று எண்ணத் தோன்றாத சில உணவுகள் கூட ஆபத்தைக் கொண்டுவரும்.நாம் சாப்பிடுவதில் சில புற்றுநோய் வருவதற்கு காரணமாக இருக்கிறது. எமது அன்றாட வாழ்கையில் நாம் உண்ணுவதில் சிலவற்றை பார்ப்போம்.

## Microwave popcorn




பொப்கோர்ன் என்றதுமே நினைவுக்கு வருவது தியேட்டர் தான். கையில் ஒரு பெரிய பொப்கோன் பாக்கும் ஒரு கையில் கோலாவும் இன்றி யாரும் தியேட்டருள் நுழைவதில்லை. அந்த அளவிற்கு பொப்கோனுக்கும் பொழுதுபோக்கிற்கும் சம்மந்தம் அதிகம். ஆனால் இங்கு அலச வருவது எப்படியான பொப்கோன் கெடுதியைக் கொண்டு வரும் என்பதே ஆகும்.

மைக்ரோவேவில் வைத்து பொப்கோர்ன் சாப்பிடுவது என்பது சுலபமான விடயம் தான் ஆனால் அது ஒன்று தான் microwave popcorn னில் உள்ள ஒரே ஒரு நன்மையாகும். இந்தப் பக்கேற்றில் வரும் பொப் கோர்ன்களின் பக்கறின் உள் lining perflu -orooctanoic acid (PFOA) எனும் இரசாயணம் கலந்திருக்கிறது. இது Teflon னிலும் இருக்கும் இரு நச்சுத் தண்மையாகும். இது கருவுறுவதைத பாதிக்கும் அதனால் மகப்பேறு கிடைப்பதைத் தடுக்கும் என்று Univeristy of California ஒரு ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடித்துள்ளது!



PFOA யின் தாக்கம் kidney, bladder, livr, pamcreas மற்றும் testicular cancer காணப்படுகிறது.


உள்ளிருக்கும் corn னிற்கு preservatives propyl gallate பாவிக்கப் படுகிறது. இதனால் வயித்திற்குள் வியாதி மற்றும் தோல் வியாதிகள் வருவதுண்டு.

## சோடா பானங்கள்

சோடாக்கள் யாவும் அதிக sugar கலக்கப்பட்டவையே, இது யாவரும் அறிந்தவையே! இதனால் உடல் நிறை அதிகரிக்கும் என்பது சொல்லித் தெரியத் தேவையில்லை. இதனால் பலவிதமான வருத்தங்கள் வருவது எமக்குத் தெரிந்தவை தான். Stroke முக்கியமாக குறிப்பிடத் தக்கவொன்று! அத்தோடு stomach ulcers. இந்தச் சோடாக்களில் உள்ள கலறிங்சாலும் இரசாயணங் களாலும் (4-mrthylimidazole) ஆகியவற்றை புற்றுநோய் வருவதற்கான காரணங்கள் (potential carcinogens)

## Canned Tomatoes
### (ரின் தக்காளி)

ரின் வகைகள் என்றாலே அதன் lining இராசாயனங்கள் பூசப்படு வது தான் பெரிதும் எமக்கு கூடாது. இந்த ரின்னுக்குள் பூசப்படும் bisphenol-A அல்லது BPA என்னும் இராசாயணம் எலிகளின் மூளைக்குள் இருக்கும் மரபணுக்கள் செயற்பாடுகளில் கோளாறுகள் பலதைக் கொண்டு வருகின்றன என்று.....




தொடர்ச்சி 8ம் பக்கம்


வட்டிகளின் சுமைகள் இனி உங்களுக்கு வேண்டாம்.

நீங்கள் 50.000€ வை 1.99வீத வட்டிக்கு எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

அதாவது 1000€ வுக்கு மாத வட்டி 1.65€ ஆகும்

மேலும் விரிவான விவரங்களுக்கு இலவசமாக எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்!



SEFA24
Tel.: 0231 223 907 34
info@sefa24.de
Rheinische Str. 85
44137 Dortmund




330 High Street / North-Eastham
E12 6PH / Tel:0208 470 7844
e.mail:ganeshajewels@hotmail.co.uk

தரம் நிரந்தரம்



கணேசா நகையகம்

Finest 22ct Gold Diamond White Gold jewellery and Repair


பொன்னுருக்குதல் இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.
வைரத்தாலிக்கொடி நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
திருத்தல் வேலைகள் உடனுக்குடன் செய்து தரப்படும்.
பழைய நகைகளை மாற்றி, புதிய சிங்கப்பூர் நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

330 High Street North-Eastham/E12 6PH-Tel:0208 470 7844 e.mail:ganeshajewels@hotmail.co.uk

## வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 232



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

“ஓவியக்கலைவேள்”

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:

Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com

Company No: 8876276


**“வெற்றிமணிமொழி”**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Vettimaniy Ltd

Sanje:07824 61 83 83

vai g (U.K) 00 44 7788 195962


# தமிழ் மக்கள் பேரவை தேசிய இயக்கமா? புதிய அரசியல் யாப்பு யாருக்கு?

தமிழ் மக்கள் பேரவை தேசிய இயக்கமா? புதிய அரசியல் யாப்பு யாருக்கு?

**இலங்கையில் இருந்து -அ.நிக்ஸன்-**

**புதிய அரசியல் யாப்பில் இனப்பிரச்சினை தீர்வு உள்ளிட்ட விடயங்ளும் உள்ளடங்க வேண்டும் என்று அமெரிக்காவும் இந்தியாவும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதாகவும் தை மாதம் ஒன்பதாம் திகதி நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றி புதிய யாப்பு குறித்து பேசப்படும் என்றும் சம்பந்தன் கூறியிருக்கின்றார்.**
**அ.நிக்ஸன்**

புதிய அரசியல் யாப்பு தொடர்பாக தற்போது பேசப்படுகின்றது. ஆனால் இனப்பிரச்சினை தீர்வு அது குறித்த பேச்சுக்கள் என்று எதவுமே இல்லாமல் புதிய அரசியல் யாப்பு பற்றிய கதைகள் உலாவுகின்றன. அதுவும் இந்திய மத்திய அரசின் அனுமதியுடன் அல்லது இந்திய கொள்கை வகுப்பாளர்கள் தீர்மானம் எடுப்பவர்கள் என பலரும் இலங்கையின் புதிய அரசியல் யாப்பு விடயத்தில் தீவிரமாக ஈடுபடுவதாக அறிய முடிகின்றது.

ஆனால் 60 ஆண்டுகால அரசியல் போராட்டத்தை சந்தித்த தமிழச் சமூகத்துடன் புதிய யாப்பு தொடர்பாக பேசப்பட்டதா அல்லது அவர்களின் யோசனைகள் பெறப்பட்டதா என்பது சந்தேகமே. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவை பெற்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் யாராவது புதிய யாப்பு உருவாக்க விடயத்தில் பங்குகொண்டார்களா அல்லது அவர்களிடம் யோசனைகள் பெறப்பட்டதா என்பது குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

### அமைச்சர் கூறியது

எனினும் கூட்டமைப்பின் பேச்சாளர் சட்டத்தரணி சுமந்திரன் தலைவர் சம்பந்தனின் யோசனைக்கு அமைவாக புதிய அரசியல் யாப்பு விவகாரத்தில் பங்குகொண்டார் அல்லது யோசனை வழங்கினார் என்று மூத்த அமைச்சர் ஒருவர் நெருக்கமான ஊகவியலாளர் ஒருவரிடம் கூறியுள்ளார். ஆனால் அமைச்சர் கூறியதில் எந்தளவுக்கு உண்மையுள்ளது என்பது குறித்து கேள்விகள் எழுகின்றன. ஏனெனில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புதிய அரசியல் யாப்பு விவகாரத்தில் ஈடுபடுவதாக இருந்தால் அது தொடர்பாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் அல்லது கூட்டமைப்பின் ஐந்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலநதுரையாடியிக்க வேண்டும்

ஆனால் சுமந்திரன் புதிய அரசியல் யாப்புத் தொடர்பான விடயங்களில் பங்குகொள்வது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். எனினும் புதிய



திரு.இரா.சம்மந்தன்



திரு. சுமந்திரன்


அரசியல் யாப்புத் தொடர்பாக கடந்தவாரம் இடம்பெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் சம்பந்தன் விளக்கமளித்திருக்கிறார். அதாவது புதிய அரசியல் யாப்பில் இனப்பிரச்சினை தீர்வு உள்ளிட்ட விடயங்ளும் உள்ளடங்க வேண்டும் என்று அமெரிக்காவும் இந்தியாவும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதாகவும் எதிர்வரும் தை மாதம் ஒன்பதாம் திகதி நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றி புதிய யாப்பு தொடர்பாக பேசப்படும் என்றும் சம்பந்தன் கூறியிருக்கின்றார்.

### சுரேஸ் பிரேமச்சந்திரனின் கேள்வி

ஆனால் புதிய அரசியல் யாப்புக்கான ஏற்பாட்டு முயற்சிகளில் சுமந்திரன் ஈடுபடுவது அல்லது ஈடுபடப்போவது குறித்த எந்த ஒரு தகவல்களையும் சம்பந்தன் அந்த கூட்டத்தில் வெளியிடவில்லை என மூத்த உறுப்பினர் ஒருவர் கூறினார். அதேவேளை இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஜெனீவா தீர்மானத்தின்படி பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்துடன் அரசாங்கம் பேச வேண்டும் என்று சம்பந்தன் அரசாங்கத்திடம் ஏன் கேட்கவில்லை என்று கேள்வி எழுப்பினார். புதிய அரசியல் யாப்பை உருவாக்குவது என்றால் முதலில் தமிழ்மக்களுடன் பேச வேண்டும் வடக்கு இணைப்பு மற்றும் அதிகாரப் பங்கீடுகள் தொடர்பாக பேசி முடிவு எடுக்க வேண்டும்- பின்னர் புதிய அரசியல் யாப்பில் அந்த முடிவுகளை இணைக்க வேண்டும். அப்போதுதான் புதிய அரசியல் யாப்பு செல்லுபடியாகும் ஆனால் அவ்வாறான எந்த ஒரு பேச்சையும் அரசாங்கம் தமிழ் மக்கள் சார்பாக கூட்டமைப்புடன் பேசவில்லை என்று குற்றம் சுமத்திய சுரேஸ் பிரேமச்சந்திரன் கொழும்பு அனைத்து விடயங்களையும் தீர்மானிக்கின்றது என்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் சார்பாக பேச முடியாது எனவும் கூறினார்.

தொடர்ச்சி 12ம் பக்கம்...




அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்



# உதடுகளும் ஞாபக சக்தியும்...

நம்பமுடியவில்லை
ஆனால் உண்மை
உடல் தொடர்புகள் பற்றிய
சில சுவாரஸ்யமான விஷயங்கள்!

**கண்களும்.. மூளையும்..**

கண்களுக்கு பின்னால் இருக்கும் இரத்த நாளங்களைக் கொண்டு, மூளையின் ஆரோக்கியத்தைச் சொல்ல முடியுமாம்.

அதிலும் கண்களில் உள்ள நரம்புகள் பரந்த அளவில் இருந்தால், அது ஒருவரின் IQ குறைவாக இருப்பதை காட்டுகிறது.

**பற்களும்... மனநிலையும்...**

ஒருவரது பற்கள் அவர்களின் நினைவுத்திறன் மற்றும் மனநிலையை வெளிக்காட்டுமாம்.

இது எந்த ஒரு ஆய்விலும் நிரூபிக்கப்படாவிட்டாலும், மன வீழ்ச்சியின் போது வாய் ஆரோக்கியம் மோசமாகலாம் அல்லது மெல்லுவதற்கு சிரமமாக இருக்கும் போது மூளை பாதிப்பு ஏற்படலாம் என நிபுணர்கள் கூறுகிறார்கள்.

**குரலும்.. உயரமும்...**

ஒருவரின் குரலைக் கொண்டே அவரது உயரத்தைக் கணிக்கலாம். மேலும் ஆய்வு ஒன்றில் ஒருவரின் உயரத்தை, அவரது குரலைக் கொண்டே கணிக்க முடியும் என்று சொல்கிறது.

அதிலும் உரத்த குரல் உள்ளவர்கள் உயரமாகவும், மென்மையான மற்றும் தாழ்ந்த குரலைக் கொண்டவர்கள் சற்று உயரம் குறைவாகவும் இருப்பார்களாம்.

**சருமமும்... இரத்த அழுத்தமும்...**

ஒருவரின் சருமம் சுருக்கமின்றி இருந்தால், அவரது உடலில் இரத்த அழுத்தமானது கட்டுப்பாட்டுடன் இருப்பதோடு, இதய செயல்பாடும் ஆரோக்கியமாக உள்ளது என்று அர்த்தம்.

வயதானவர்களுக்கு வரும் நோய்கள் பற்றி ஆயும் துறை நடத்திய ஆய்வில் சருமத்தின் இளமைத்தன்மைக்கும், இதய நோய்க்கும் சம்பந்தமுள்ளது தெரிய வந்துள்ளது.

அதனால் தான் வயதாகி சருமத்தில் சுருக்கங்கள் ஏற்படும் போது, இரத்த அழுத்த பிரச்சனையும், இதய நோயும் அதிகம் வருகிறது.

**தூக்கமும்... கண்களும்...**

உடல் உழைப்பற்ற வாழ்க்கை முறை மற்றும் இதர காரணங்களால் தூக்கமின்மையால் ஏராளமான மக்கள் அவஸ்தைப்படுகிறார்கள்.

தூக்கத்தின் போது மூச்சுத்திணறல் உள்ள மக்களுக்கு இரண்டு மடங்கு அதிகமாக கண் நோய்கள் உருவாவதோடு, அதன் காரணமாக கண் பார்வையை இழப்பது, குளுக்கோமா போன்றவை வரும் வாய்ப்புள்ளது.

**உதடுகளும்... ஞாபக சக்தியும்...**

உங்கள் உதடுகளில் புண்களும், வெடிப்புக்களும் அதிக அளவில் ஏற்படுமாயின், உங்களுக்கு அல்சைமர் என்னும் ஞாபக மறதி நோய் வரும் வாய்ப்பு அதிகமாக உள்ளது என்று அர்த்தம்.

மேலும் ஆய்வு ஒன்றிலும், யாருக்கு அதிகமாக வைரஸ் தொற்றுகள் ஏற்படுகிறதோ, அவர்களின் அறிவாற்றன் திறன் மோசமாக இருக்கும் என்றும் தெரிய வந்துள்ளது.

**கால்களும்... விறைப்புத்தன்மையும்..**

பெண்களை விட ஆண்கள் தான் அதிக கால் சம்பந்தப்பட்ட பிரச்சனையால் அவஸ்தைப்படுவார்கள். இதற்கு அவர்கள் அதிகம் நடப்பதையும், கால்களுக்கு போதிய ஓய்வு அளிக்காமல் இருப்பதையும் காரணம் சொல்லலாம்.

ஆண்களுக்கு கால் பிரச்சனைகள் இருக்கும் போது, அதனை ஆரம்பத்திலேயே சரிசெய்யாவிட்டால், அதனால் விறைப்புத்தன்மை பிரச்சனை ஏற்படும் வாய்ப்புள்ளது.

ஏனெனில் போதிய ஓய்வு கிடைக்காததால், நல்ல மனநிலையை உணர வைக்கும் டோபமைன் என்னும் கெமிக்கல் குறைவாக இருக்கும்.




முற்பதிவுக்கு முந்துங்கள்

Bochum, Essen, Dortmund

# Lucky Fly Reisebüro

2016 ஆம் ஆண்டு கோடைகால விடுமுறையைக் கோலாகலமாகக் கொண்டாட Bochum, Essen, Dortmund ஆகிய நகரங்களை உள்ளடக்கிய Lucky Fly Reisebüro வழங்கும் சிறப்பு விலை

Summer holiday offers 2016

www.Lucky-fly.de
Email: info@lucky-fly.de




Lucky Fly Reisebüro வழங்கும் மற்றுமோர் தரமான நம்பிக்கையான சேவை!
உங்கள் தேவைகள் அனைத்தும் எம்மிடம்!

## வீட்டுக் கடன்

வீட்டுக் கடன்

1% தொடக்கம் வீட்டுக்கடன்
கடன் மறுக்கப்பட்டவர்களும் முயற்சிக்கலாம்.

யேர்மனியில் அனைத்துப் பாகங்களிலும் நீங்கள் இருக்கும் இடத்திலேயே வீட்டுக்கடனைப் பெற்றுத்தருவோம்.

யேர்மனியில் உள்ள பிரதான 10 வங்கிகளுடன் பேசி மிகக்குறைந்த வட்டியில் உங்கள் வீட்டை வாங்க நாமே அனைத்து உதவிகளையும் செய்து தருகின்றோம்.

வீடு வாங்கலாம்! கட்டலாம்!! அதற்கான உங்கள் கனவு இல்லங்களை ( Muster House) நேரில் பார்த்தும் தெரிவு செய்யலாம்.

## வாகனக் காப்புறுதி

மற்றும் வாகனக் காப்புறுதி
வீட்டுக் காப்புறுதி

குழந்தைகளுக்கான சேமிப்புத் திட்டம்

வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கான மருத்துவக்காப்புறுதி
அனைத்துக்கும் நாடுங்கள்

துரித பணமாற்றுச் சேவை

VALUTRANS MONEY TRANSFER · WESTERN UNION WU moving money for better · MoneyGram

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்

Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171

Helmholtz Str.07
45143 Essen
Tel: 0201-80093764
Fax: 0201-80093749

Rheinische Str 64
44137 DORTMUND

e.mail:siva 0108 @hotmail.com

0179 14 84 892
Tel:0234 23 990 32

Graphic Design Vettimaniy Ltd

# யாழ்ப்பாணப் பண்பாடு
# மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா



## ஆடை அணிகலன்கள்.

**சென்ற இதழ் தொடர்ச்சி....**

ஆங்கிலக் கல்வி அதன் வழி வந்த பதவிகள் காரணமாக யாழ்ப்பாணச் சமூக அடிநிலை மக்களின் ஆடை அணிகலன்களிலே பல மாற்றங்கள் உண்டாயின. சாதிப்பாகுபாடு பலமாக நிலவிய சமூகத்திலே இம்மாற்றம் ஏற்றுக்கொள்ள முடியாததாய் ஜீரணிக்க முடியாததாய் இருந்தமை பற்றி இலக்கியங்கள் நிறையவே பேசுகின்றன. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே எழுந்த இலங்கியமொன்றிலே

வண்ணார் வடுகர் பணிக்கர் பண்டாரம்
மடப்பளியார் பரதேசிகள் சட்டையும்
எண்ணுஞ் சரிகை யுறுமாலுப் போட்டிப்போ
யான் பிரபென்கிறார் பாருமடி

இவ்வாறு பாடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வேளாள சமூகத்தின் மேலாண்மை மெல்ல மெல்லக் கீழுறங்குவதைக் கண்டு சகிக்காத உள்ளத்தின் குமுறலாக இப்பாடலை அடையாளம் காணலாம்.

### பெண்களின் உடைகளும் அணிகலன்களும்

யாழ்ப்பாணப் பிரதேசத்திற் பெண்களின் உடைகள் எல்லாக் கிராமங்களிற்கும் ஒரேதன்மைத்தாக இருந்தது என்று கூற முடியாது. உடைகளை உடுக்கும் விதத்தில் வேறு பாடுகள் காணப்பட்டன. யாழ்ப்பாணச் சமூகத்திலே உயர் சாதிப்பெண்கள் உடுக்கும் உடைக்கும் அடிநிலைச் சமூகப்பெண்கள் உடுக்கம் உடைக்கும் உடுக்கும் முறைமையிலே வேறுபாடுகள் காணப்பட்டன. பெரும்பாலான உயர்சாதிப்பெண்கள் சேலை உடுத்து (சாறி) மேற்சட்டை அணிந்திருந்தனர். சிலர் சேலையை இடுப்பிலே கட்டித் தொங்கலை மார்பை மூடிப்போட்டுப் புறத்தாலே சுற்றிக் கட்டியிருப்பர்.

அடிநிலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் குறுக்குக்கட்டாகக் கட்டியிருப்பர் (இதற்கு புறநடையும் உண்டு) அடிநிலைச்சமூக ஏழைப் பெண்களின் உடை பற்றிக் காதலியாற்றுப்படை கந்தை உடையினர் குறுக்குக் கட்டினர் எனக் குறிப்பிடுவதை இவ்விடத்திலே நினைவு கூரலாம்.

யாழ்ப்பாணப் பெண்களின் உடைப் பாரம்பரியம் பற்றித் திருமதி கரியற் வின்சிலோ அம்மையார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

பெண்கள் சேலையை இடுப்பில் உடுத்து இன்னொரு பகுதியால் தங்கள் மார்பை மறைத்துக் கட்டுவார்கள். மிகுதியான துண்டால் தங்கள் தோளைப் போர்த்துவார்கள்.. தாழ்த்தப்பட்ட வகுப்பில் உள்ள பெண்கள் தங்கள் உடம்பின் மேற்பகுதியை மூடுவதற்குச் சமூகம் அனுமதி அளிப்பதில்லை.

தாழ்த்தப்பட்ட வகுப்பிலுள்ள பெண்கள் தங்கள் உடம்பின் மேற்பகுதியை மூட அனுமதிக்காமை குரூரமான சமூக அடக்கு முறை என்பதையே புலப்படுத்தி நிற்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவிலே தோன்றிய ஆக்க இலக்கியங்களில் இவ்விடயம் விவாதிக்கப்பட்டுள்ளடை குறிப்பிடத்தக்கது.

1830 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி திருமதி வின்சிலோ அம்மையார் தமது சகோதரனுக்கு எழுதிய கடிதத்தில் யாழ்ப்பாணத்துப் பெண்களின் உடையைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடுவது மிகுந்த அவதானிப்புக்குரியது.

சுதேச கிறிஸ்த்தவர்கள் எங்களைச் சேர்ந்ததும் தங்கள் உடையை மாற்றுவதில்லை. நாங்களும் அதனை விரும்புவதில்லை. பெண்கள் தங்கள் இடுப்பு வரை ஒரு சேலையைக் கட்டி அதன் ஒரு பகுதியால் தங்கள் தோள்களை மூடுவார்கள். எங்கள் கூட்டங்களுக்கு வரும்போது நாணயமாக உடுத்தி வருவார்கள் பொதுவாக அமெரிக்கப் பெண்களை விட இவர்களின் நடைத்துாய்மை குறிப்பிடத்தக்கது. இங்குள்ள பெண்கள் தங்கள் கைகளையும் கால்களையும் தவிர்த்து உடல் முழுவதையும் துணியால் முறைப்படி மூடிக்கொள்வார்கள். கடுங்காற்று வீசித் தங்களை விழுத்தினாலும் பிறர் பார்வைக்கு இவர்களின் உடல் தென்படாதவாறு இவர்களின் உடை சீராக இருக்கும்.

கிறிஸ்த்தவத்தின் செல்வாக்கு ஆரம்பத்தில் பெண்களின் உடையில் பெருமளவு மாற்றத்தைக் கொண்டு வரவில்லை. என்பதைத் திருமதி வின்சிலோவின் கூற்று மெய்ப்பிக்கின்றது. ஆனால் நாளடைவில் பெண்களின் உடையிலே கிறிஸ்த்தவத்தின் செல்வாக்குக் கணிசமான இடத்தைப் பிடித்துக்கொண்டது.

19 ஆம் நூற்றாண்டில் உயர் சாதிப்பெண்களும் கிறிஸ்த்தவத்தோடு இணைந்து கொண்ட பெண்களுமே மேற்சட்டை போடும் பழக்கமுடையவர்களாக இருந்தார்கள் என்பதை மிசனரிமார் பல்வேறு இடங்களிலும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணப் பிரதேசத்துப் பெண்கள் பொன் வெள்ளி செம்பு முதலானவற்றாலான ஆபரணங்களையே அணிந்தனர். பெண்களின் தகுதியை ( தராதரத்தை) அணிகலன்களே தீர்மானித்தன எனலாம்.

பொருளாதார வசதி படைத்தவர்களே பெரும்பாலும் பொன் ஆபரணங்களை அணிந்தனர். ஓரளவு வசதியுடையோர் வெள்ளி செம்பு (பித்தளை) முதலானவற்றை அணிந்தனர்.ஏழைகள் அடிநிலைச்சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆபரணங்களை அணிந்ததாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணச்சமூகத்தின் சேமிப்பாகப் பொன் ஆபரணங்களே இருந்தன. என்பதை ஏலவே குறிப்பிட்டோம்.

தொடர்ச்சி 06 ம் பக்கம்...












5ம் பக்கத் தொடர்ச்சி

## ஆடை அணிகலன்கள்.

பொன்னாற் செய்யப்பட்ட ஆபரணங்களைப் பட்டியல் இடுவது சாத்தியமற்றது. வகைமாதிரிக்கு பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படையில் வரும் பின்வரும் பகுதியைச் சுட்டிக் காட்டலாம்

**தாலியும்....**

அட்டியல் பதக்கம் பிலாக்கு மூக்குத்தி
கடுகு மணிக் கொலுசு கவுத்தோர் காதுப்பு..
வாளி சிமிக்கி வளையல் தோடு
பட்டணக்காப்பு பிலிக்காப்புப்
பாதசரமொடு சங்கிலிச் சிலம்பு
தூங்கு கடுக்கன் நட்டுவக்காலி
அரும்புமணி முருகு கொன்னைப் பூவும்
ஒட்டியாணம் ஒளிபெறுநுதலணி
அரைஞாண் கயிற்றொடு அரைமூடி சலங்கை





யாழ்ப்பாணப் பிரதேசப் பெண்கள் அணிந்த ஆபரணங்களின் பட்டியலைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை பிரக்ஞை பூர்வமாகவே பதிவு செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
மேலே குறிப்பிட்ட ஆபரணங்களிற் பல இன்று பயன் பாட்டில் இல்லை. அவற்றிற்குப் பதிலாக வெவ்வேறு வடிவில் வெவ்வேறு வகையில் அணிகலன்கள் வந்துவிட்டன. அரைமூடி சலங்கை என்ற அணிகலன் இப்பொழுது இல்லாமலே போய் விட்டது. அரைமூடி சலங்கை பற்றி மிசனரிமாரின் குறிப்பொன்று பின்வருமாறு:

சிறு பிள்ளைகள் ஐந்து அல்லது ஆறு வயது வரை பொதுவாக எவ்வித உடுப்பும் உடுத்துவதில்லை இப்பிள்ளைகளின் அரையில் கயிறு அல்லது வெள்ளிச் சங்கிலி கட்டி தங்கள் பிறப்புறுப்பை மறைக்க இரண்டு மணிகளை அணிவார்கள். அவர்கள் நடக்கும் போது இவை கலகலவெ ஒலிக்கும்.

அணிகலன்கள் எமது பண்பாட்டுத் தளத்தில் மிகுந்த பெறுமதி உடையனவாய் இருந்தன. என்பதை மறுக்க முடியாது. ஒருகாலத்தில் பெண்களின் அழகை மாத்திரமல்ல சமூகப்பெறுமானத்தையும் பொன் ஆபரணங்களே தீர்மானித்தன. இந்த பொன் அணிகலன்களுக்குப் பின்னால் கைவினைக் கலைஞர்களின் அழகியல் உணர்வும் ஆக்கத்திறனும் நுட்பமான விவேகமும் இருந்தன. என்பதை இலக்கியங்களோ வேறு ஆவணங்களோ பதிவு செய்யாமை எமது சமூகத் தளத்தின் பண்பாட்டுப் பலவீனத்தையே காட்டி நிற்கின்றது.



## கலாஜோதி பட்டமளிப்பு விழா லண்டன்

Oriental Examination Board London வருடா வருடம் வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், நடனம் போன்ற கலைகளில் பட்டம் பெற்ற மாணவர்களை கௌரவித்து வருகிறது. இம்முறை Harrow நகர பிதா சுரேஷ்கிருஷ்ணா, Councler சசிகலா சுரேஷ்கிருஷ்ணா அவர்களின் தலைமையில் Beck Theater,Grange Road, Hayes என்னும் நகரத்தில் 28.11.2015 நடாத்தப்பட்ட பத்தாவது பட்டமளிப்பு விழாவில் ஜேர்மனி முல்கைம் (Mülheim) நகரத்தைச் சேர்ந்த சங்கீத ஆசிரியை சங்கீத வித்தியா பூசணம் திருமதி மீரா நித்தியானந்தனின் மாணவர்களான கீர்த்தனா கேதீஸ்வரன், துஷாரியா குமாரசூரியர், நிவாசினி நித்தியானந்தன், கபினா துளசிகரன் ஆகியோரும் வாய்ப்பாட்டுக்கான சங்கீத கலாஜோதி பட்டம் பெற்றுக் கௌரவிக்கப்பட்டார்கள். இப்பெருவிழா ஐரோப்பா முழுவதிலுமிருந்து 200க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டு, அவர்களின் நடனம் மற்றும் இசைநிகழ்ச்சிகளுடன் வெகு சிறப்பாக நடைபெற்றது.



# நேரமில்லை என புலம்பிய மனது அடிக்கடி சொன்னது, ”அட அஞ்சு மணி தான் ஆச்சா!

### வெற்றிமணியின் பிரபல எழுத்தாளர் சேவியர் அவர்களின் அந்த ஈரமான மழை அனுபவம்

பூமியை விழுங்கி விடும் ஆவேசத்துடன் ஆக்ரோஷமாய் தனது அனகோண்டா நாக்குகளை நீட்டியது மழை. பெருமழை என்பதையும் பேய்மழை என்பதையும் வாசித்துப் பழகிய சென்னை வாசிகளுக்கு நேரில் பார்க்கும் வாய்ப்பு இப்போது தான் வாய்த்தது. அது பேரச்சம் கலந்த வாய்ப்பு.

நிமிடம் தோறும் ஒரு இஞ்ச், அரையடி என உயர்ந்த தண்ணீர் சாலைகளை விழுங்கி ஏப்பம் விட்டு, வீட்டு வாசல்படிகளில் அழையா விருந்தாளியாய் நுழையத் துவங்கியது. நதிகள் தங்கள் கழுத்துவரை நீர் வளையங்களை ஏற்கனவே மாட்டியிருந்ததால் துளிகளுக்கே அது தளும்பத் துவங்கியது.

நதிகளிடம் அனுமதிவாங்காமல் மனிதர்கள் காங்கிரீட் மரங்களை நட்டிருந்தார்கள். தண்ணீர், மனிதர்களிடம் அனுமதி வாங்காமல் நதிகளின் பாதையை உருவாக்கிக் கொண்டன. எங்கும் தண்ணீர். எங்கும் பதட்டம். சென்னையில் மழை பெய்யவில்லை என்பதே நீண்டநாள் கவலையாய் இருந்தது. ஏன் கடவுள் மழையை சென்னைக்கு அனுப்பவில்லை என்பது இப்போது தான் புரிகிறது.
மழை பல பாடங்களையும் கற்றுத் தந்தது. மனிதாபிமானத்தின் கதவுகளை அறைந்து சாத்தியிருந்த வீடுகள் கூரைகளையும் சேர்த்தே திறந்தன. தங்கள் பெயருக்குப் பின்னாலும், முன்னாலும் பட்டங்களையும், பதக்கங்களையும் குத்தி வைத்திருந்த மக்கள் கழுத்துவரை தண்ணீரில், சாக்கடைகளை உதாசீனப்படுத்தி நடந்தனர்.


போர்ட்டிகோவில் முழங்காலளவு நீரில் தெரு நதியை வேடிக்கை பார்த்தபடி வாசலில் நின்றிருந்த என்னிடம் ஒருவர் வந்து இரண்டு பால் பாக்கெட்களை நீட்டினார். ”உடனே காய்ச்சிடுங்க... இல்லேன்னா கெட்டுடும்” என்றார். யாரது.. நம்மைத் தேடி வந்து பால் பாக்கெட் தருவது ? பால் பாக்கெட் கிடைக்காமல் ஊரே நெட்டோட்டம் ஓடும் இந்த நேரத்தில் என மனதில் குழப்ப ரேகைகள்.

“... நீங்க ?...“ என இழுத்தேன்.

பக்கத்து வீடு தான். மாடில குடியிருக்கேன். என்றார். என் வீட்டை ஒட்டியபடி இருந்தது அந்த வீடு. நாலடி இடைவெளியில் இருந்தது வீட்டுச் சுவர். கூனிக் குறுகினேன்.
”நன்றி.. என்ன பண்றீங்க.. “ என முதன் முறையாக விசாரித்தேன். கால்களுக்குக் கீழே கிடந்த ஈரம் இதயங்களிடையே பரவியது.

மின்சாரம் செத்துப் போய் இரண்டு நாளாகியிருந்தது. நான்கு நாட்கள் அது உயிர்த்தெழவேயில்லை. வீட்டுக்குள் ஒற்றை மெழுகுவர்த்தியைச் சுற்றியமர்ந்து குழந்தைகளுடனும், மனைவியுடனும், வீட்டிலுள்ளவர்களுடனும் கதைபேசிய கணங்களில் உணர்ந்தேன் வெளிச்சம் எவ்வளவு தூரம் எங்கள் உறவுகளுக்குள் இருட்டை விரித்திருக்கிறது என்பதை. இருட்டு எங்களுக்கிடையே வெளிச்சத்தை அதிகரித்திருந்தது.

சுற்றியிருந்து கதைபேசி, விளையாடி, சாப்பிட்டு செலவிட்ட நான்கு நாட்கள் கால்நூற்றாண்டுகளுக்கு முன் நான் வாழ்ந்த வாழ்க்கைக்குள் என்னை இட்டுச் சென்றது. அம்மாவும், அப்பாவும், சகோதர சகோதரிகளும், எங்கள் கிராமத்துத் திண்ணையும் மனதுக்குள் இதமாய் வந்திறங்கியது.
வெளிச்சம் வீட்டில் மூலைகளுக்குள் மனிதர்களைத் துரத்தும். இருட்டோ, ஒற்றைப் புள்ளியில் எல்லோரையும் இணைக்கும் எனும் உண்மையை நான் உணரும் வாய்ப்பாய் அது அமைந்தது.






**வெற்றிமணி 1970 இல் வெளிவந்த அட்டைப்பட ஓவியம்**
**“மழையும் மனிதநேயமும்”**
**இப்பவும் பொருந்தும்!**

தொலைக்காட்சி அமைதியாய் மூலையில் கிடந்தது. லேப்டாப்கள் மரத் துண்டுகளைப் போல வீட்டில் மூலைகளில் கிடந்தன. வரிக்குதிரை போல கம்பீரமாய் நிற்கும் செல்போன் சிக்னல், வட்டத்திற்குள் விட்டம் வரைந்து வெறுமனே கிடந்தது. கைப்பிடிக்குள் இருந்த உலகம் சட்டென கைவிட்டுப் பறந்த ஒரு பட்டாம் பூச்சியைப் போல பறந்து மறைந்தது.

மீண்டும் ஒரு முறை தகவல் தொடர்புகள் இன்லென்ட் லெட்டர்களின் முதுகில் பயணித்த காலத்தில் பயணித்த அனுபவம். செல்போன்களும், வாட்ஸப்களும், மின்னஞ்சல்களும் இல்லாத நான்கு நாட்கள் வாசிக்கவும், நேசிக்கவும், எழுதவும் கிடைத்தவை குடும்ப உறவுகள் மட்டுமே. பாசமிகு மனங்கள் மட்டுமே.
அவசரமாய் ஓடிப் பழகிய கால்கள் ஓய்வெடுத்தன. நேரமில்லை என புலம்பிய மனது அடிக்கடி சொன்னது, ”அட அஞ்சு மணி தான் ஆச்சா.. வாங்க கதை சொல்லி விளையாடலாம்...”.
நேரம் எப்போதும் நம்மிடம் இருக்கிறது. அதை டிஜிடல் ஸ்ட்ராக்கள் உறுஞ்சிக் கொள்கின்றன என்பது புரிய வைத்த நிகழ்வாய் அது இருந்தது.

ஐந்து நாட்களுக்குப் பின் மீண்டும் மின்சாரம் வீட்டுக்குள் நுழைந்தபோது ஏதோ விரோதி வீட்டுக்குள் நுழைந்தது போல முதன் முறையாய் உணர்ந்தேன். மனைவி சொன்னார்,
”கரண்ட் இல்லாம இருந்ததே நல்லா இருந்துச்சு...”.
பிள்ளைகள் சொன்னார்கள், ”என்ன டாடி.. நெட்வர்க் வந்துச்சா... போச்சு.. இனிமே லேப்டாப்பைத் தூக்கிடுவீங்க...”


அது மழையல்ல,பிழைகளைப்
புரியவைத்த இறைவனின் இழை !
இந்த ஒரு பதிவை மட்டும்
எழுதிவிட்டு லேப்டாப்பை
ஒதுக்கி வைப்பதென
முடிவு செய்து விட்டேன்.

**சென்னையில்**
**இருந்து சேவியர்**

GTV
கரம் கொடுப்போம்
வடம் பிடிப்போம்
Tel: 0231 10 87 63 60

நம்பிக்கையும் நாணயமும்
சலுகையும் ஒரே இடத்தில்
Offnungszeiten:
Mo-Sa 90:00-20:00 Uhr
BCN·TRAVELS
Consulting Network
EMAIL:-bcntravels@hotmail.de
எமது துரித பணமாற்றுச்சேவை
இலங்கை - இந்தியா
VALUTRANS
MoneyGram

2016 கோடைகால விடுமுறைக்குரிய
விமானச்சிட்டைகள் முற்பதிவு ஆரம்பமாகி விட்டது.
உலகின் முன்னணி விமான நிறுவனங்களை ஒன்றிணைத்து சலுகை
விலையில் உத்தரவாதமான சேவையினை வழங்குகின்றோம்



BCN Travels// Consulting Network (TBW)
UG Inh.Rasan.Sivalingam
bcntravels@hotmail.de,consultingnetwork@hotmail.de
Rheinische str-72,44137 Dortmund Germany Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69






**யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஓவியர் ரமணியின் புத்தக அட்டைக் கண்காட்சி**

**அன்று ஓவியர் ரமணி அவர்கள் யேர்மனியில் வசித்தபோது தூண்டில் சஞ்சிகைக்கு வரைந்த அட்டடைப்படம் இது .**
**இப்படமும் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது.**

வி. சிவசுப்பிரமணியம் என்ற இயற்பெயரைக் கொண்ட ரமணி (1942 -) யாழ்ப்பாணம், அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓவியர், சிற்பக் கலைஞர். இவர் எஸ்.பொன்னம்பலம், ஓவியர் மாற்கு ஆகியோரிடம் ஆரம்ப பயிற்சியைப் பெற்று பின்னர் விடுமுறைக்கால ஓவியர் கழகத்தில் 1960 - 64ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் பயின்றதோடு அரசினர் நுண்கலைக் கல்லூரியிலும் 5 வருட காலம் பயிற்சி பெற்று டிப்ளோமா பட்டத்தை பெற்றுக்கொண்டார். தேசிய நூதன சாலையில் தயாரிப்பு உதவியாளராக 3ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.
பெயர் பெற்ற சிற்பங்கள் பலவற்றைப் படைத்துள்ள ரமணி அவர்கள் அவற்றின் உருவ நேர்த்திக்காகவும் கூட்டொழுங்கமைவிற்காகவும் பெயர் பெற்றவர். யாழ் பல்கலைக்கழகத்தில் தற்போது வருகை விரிவுரையாளராகப் பணிபுரியும் இவர் ஓய்வு பெற்ற வடமாகாண சித்திரக் கல்விப் பணிப்பாளர் ஆவார்.
இவர் சிலகலாலம் யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் வசித்தவர். அக்காலத்தில் தூண்டில் சஞ்சிகைக்கு வரைந்த அட்டைப்படத்தினையே மேல் காண்கின்றீர்கள். காலத்தின் பதிவுகள் புத்தகங்கள் ஓவியங்கள் என்பதனை மீண்டும் ஒரு முறை அடித்துச்சொல்லுகிறது இந்த அட்டைப்படம். இவரது ஓவியங்களில் கோடுகள் காட்டும் நேர்த்தி எவரையும் கவரும். சிறையாரும் மடக்கிளியே என்ற தேவாரத்தலைப்பில் ஒரு ஓவியம் பலாலி ஆசிரியர் கலாசாலை மலரில் அன்று இடம் பெற்றது. அது பலரது மனங்களைச் சிறைப்பிடித்தது.
பெரும்பாலனான ஓவியங்கள் புத்தகத்தின் அட்டைப்படமாக வந்து அவரது திறமைகளை சரித்திரமாகப்பதிவு செய்துள்ளது. அந்தவகையில் அவரது புத்தக அட்டைப்பட ஓவியக் கண்காட்சி கடந்த 2ம் திகதி முதல் 5ம் திகதி வரை(2.12.2015) யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. அக்காட்சியினை மேலே காணலாம்.
பி.குறிப்பு இப்பெரும் கலைஞனுக்கு ரமணி எனப்பெயர் வரக்காரணம். சிவசுப்பி(ரமணி)யம் அவரது முழுப்பெயரில் நடுவில் உள்ளதை எடுத்ததாக அவர் எனக்கு ஒருமுறை கூறினார்.

2ம் பக்கத் தொடர்ச்சி

**அதைச் சாப்பிடாதைங்கோ!**

கோளாறுகள் பலதைக் கொண்டுவருகின்றன என்று ஒரு ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதுவம் ரின்களில் வரும் தக்காளிகள் தான் இன்னும் ஆபத்து மிக்கவை ஏன் என்றால், தக்காளியில் அமிலங்கள் (scidity) இருப்பதனால் ரின்னுள் பூசப்பட்ட இரசாயணங்களை தக்காளியுடன் சேர்ந்துவிடும். ஆகையால் நீங்கள் fresh தக்காளிகளை வாங்கி உணவில் சேர்த்துக் கொள்ளவும்.

**பதப்படுத்தப் பட்ட இறைச்சிவகைகள்**



Hot dogs, bacon sausages இவை சிறுவர் முதல் முதியோர் வரை விரும்பி உண்ணும் உணவு! ஆனால் இவை எமக்கு நல்லது தானா?
இல்லவே இல்லை! ஏன் எனில் இவற்றை தயாரிக்கும் போது உப்பு மட்டும் அதிகம் சேர்த்துக் கொள்ளவது மட்டுமல்லாமல் அதோடு அதிக அளவில் இராசாயனங் களும் அதோடு preservatives சும் கலக்கப் படுகின்றன, உதாரணத்திற்கு சுவை கூட்டுவதற்காக sodium nitrates பாவிக்கப்படுகிறது!
ஆனால் இது புற்றுநோயை ஏற்படுத்தும்! புகைப்பிடிக்கப் பட்ட இறைச்சி வகைகள் அறவே கூடாது! புகைப் படுத்தப்படும் போது இறைச்சி தாரை (tar)உள் வாங்குகிறது!

**இன்னும் அடுத்த இதழில்...**



# தேன் இனியது மட்டுமல்ல! புண்களுக்கு மருந்தும் கூட!






**மனிதனுக்கு தெரிந்த மிகப் பழமையான உணவு வகைகளில் இதுவும் ஒன்று. ரட் மன்னரின் (King Tut) கல்லறையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட புராதன காலத் தேனானது, இன்றும் உண்ணக் கூடிய நிலையில் சற்றும் பழுதடையாது இருந்தது குறிப்பிடத்தக்கது.**


**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**


தேன் குடிப்பது குளவிகளுக்கு மட்டும் உவப்பானதல்ல. யானைகள் கரடிகள் முதலான மிருகங்கள் முதல் மனிதர்களான நாமும் அதன் இனிய சுவையில் மகிழ்கின்றோம். தேன் போசாக்குள்ள பதார்த்தமும்கூட. அதன் சிறப்பு சுவையுடன் மட்டும் முடிவடைவதல்ல, மருத்துவ குணங்களும் நிறைந்தது என இயற்கை மருத்துவம் கொண்டாடுகின்றது.

எமது பாரம்பரிய வைத்திய முறைகளிலும் வீட்டு வைத்தியத்திலும் தேன் நிறையவே பயன்படுத்தப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். வயிற்றுப் பிரச்சனைகளுக்கு நல்லது என நம்புகிறோம். பண்டைய காலம் முதல் தேனை காயங்களுக்கான மருந்தாகப்பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்.

கிறீக் மற்றும் ரோம நாடுகளில் இது மருந்தாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. வேத காலத்திலும் இஸ்லாமிய கலாசாரத்திலும் இது மருந்தாகப்பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. அரிஸ்டோடில் தேனின் சிறப்புப் பற்றி (384-322 BC) காலத்திலேயே சொல்லியுள்ளார்.

இருந்தபோதும் இவை யாவும் வெறும் நம்பிக்கைகளின் அடிப்படையில் மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகவே கொள்ள வேண்டும். அதற்கு மேலாக விஞ்ஞான பூர்வஆராய்வுகளாட்ட கண்டறியப்பட்ட மருத்துவ குணங்கள் எவையேனும் தேனுக்கு உள்ளதா?

## விஞ்ஞானபூர்வ தகவல்கள்

உரசல் காயங்களுக்கும், ஆழமற்ற வெட்டுக் காயங்களுக்கும், சீழ்ப் பிடித்தபுண்களுக்கும் மருந்தாக உதவக் கூடியது தேன் என சில ஆய்வுகள் கூறுகின்றன.

இருந்தபோதும் ஆழமான புண்களுக்கும் பூச்சிக் கடிகளால் ஏற்பட்ட புண்களுக்கும் ஏற்றதல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
அத்துடன் நாளப்புடைப்பு நோயால் (Varicose ulcer) ஏற்படும் புண்களுக்கும் ஏற்றதல்ல. இத்தகைய புண்கள் குணமடைவதைத் தேன் தாமதிக்கச் செய்யும் என்று கண்டறிந்துள்ளார்கள்.
மிகக் கடுமையான சில வகை தொற்றுகளைத் (MRSA) தணிக்க தேன் உதவும் என சில ஆய்வுகள் கூறியுள்ளன.
புண்கள் குணமாவதற்கு தேன் எவ்வாறு உதவுகிறது?

தேன் புண்களின் வலியைக் குறைக்கிறது
ஆறுதல் அளிக்கும் உணர்வைக் கொடுக்கின்றது
புண்களில் உள்ள சீழ், அழுக்குச் சவ்வு போன்றவை விரைவில் கரைய வைத்து புதிய ஆரோக்கியமான திசுக்கள் உருவாக உதவுகின்றது
புண் குணமாகியதும் விரைவில் ஆரோக்கியமான தோல் மேவி வளர்வதற்கு உதவுகின்றது

தேன் அசிடிக் தன்மையானது. அதன் Ph வலு 3.2 முதல் 4.5 ஆகும். இது கிருமிகள் பெருகுவதைத் தடுக்க உதவுகிறது.

இவைதான் மருத்துவ ஆய்வுகளின் முடிவுகளாகும். புண்கள் விரைவில் குணமாக இவற்றைவிட வேறென்ன தேவை?

தேன் எவ்வாறு குணமாக்குகிறது புண்ணைக் குணமாக்குவதற்கு தேனில் உள்ள எத்தகைய அம்சங்கள் உதவுகின்றன எனக்கேட்கிறீர்களா?

1. தேனில் உள்ள சீனியின் அதிக செறிவுத்தன்மையும், குறைந்த ஈரலிப்புத் தன்மையும் கிருமிகளை அண்டவிடாது தடுக்கின்றன.
2. இத்துடன் தேனில் உள்ள குளுக்கோனிக் அமிலத்தால் (Gluconic acid) உண்டாகும்

அமில ஊடகமும், அதிலுள்ள ஐதரசன் பெரோக்ஸைடும் இணைந்து சீழ்ப் பிடிக்கவைக்கும் கிருமிகள் பெருகுவதைத் தடுக்கின்றன என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

கிருமி தொற்றிச் சீழ்ப்பிடித்த புண்களுக்குதேன் இட்டு சிகிச்சை செய்தபோது அதிலுள்ள கிருமிகள் 3 முதல் 10 நாட்களுக்குள் முற்றாக அழிந்து கிருமிப்பற்றற்ற புண்களாக மாறியதாக மூன்றுவேறு ஆய்வுகளின் முடிவுகள் சொல்கின்றன.

3. அத்துடன் புண்ணிலுள்ள வீக்கத்தைத்தணிக்கும் ஆற்றலும் தேனுக்கு உள்ளது. புண்ணைக் குணமாக்க எவ்வளவு தேன் தேவைசரி. புண்களைக் குணப்படுத்த எவ்வளவு தேன் இடவேண்டும். மெல்லிய படையாக இட்டால் போதும் என இரு மருத்துவ அறிக்கைகள் கூறின. ஆயினும் ஏனைய பல மருத்துவ அறிக்கைகள தாராளமாகத் தேன் இடுவது பற்றியும் இன்னும் சில புண்களின் மேல் தேனை ஊற்றியதாகவும் கூறின.

எனவே எவ்வளவு தேன் இடவேண்டும் என்பது பற்றி தெளிவான, கருத்தொருமைப்பாடு இல்லை என்பது தெளிவாகிறது. புண் உலர்ந்து போகாத அளவுக்கு தேனின் அளவு இருந்தால் போதும் என்பது அறிவு பூர்வமான கருத்தாகும்.

தேனினால் புண்களைச் சுத்தமும் செய்யலாம்

பொதுவாக மருந்து கட்டும்போது சேலைனினால் அல்லது பொவிடின் போன்ற மருந்துகளால் முதலில் சுத்தம்
செய்கின்றோம். இதற்குப் பதிலாக தேனைக் கொண்டே சுத்தம் செய்த பின் அதனையே இட்டு மருந்து கட்டலாம்.

## நெருப்புச் சுட்ட புண்கள்

நெருப்புச் சுட்ட புண்களுக்கும் தேன் மிகவும் சிறந்ததாகும். நெருப்பு, சுடுநீர், கொதி எண்ணெய் போன்றவற்றாட்ட ஏற்படும் சூட்டுக் காயங்களுக்கு உடனடியாகத் தேன் இட்டால் வேதனை தணியும். காயமும் விரைவில் குணமாகும்.

## வாய்ப் புண்கள்

வாய்ப் புண்களையும், முரசு கரைதலையும் தேன் குணமாக்கும் எனச் சொல்லப்படுகிறது.

நியுசீலந்தில் வளரும் மனுக்கா (Manukaplant) என்ற தாவரத்திலட இருந்து பெற்றதேனைக் கொண்டு செய்யப்பட்ட ஒருவகை இனிப்புப் பண்டம் வாய்ப்புண்களையும் முரசு கரைதலையும் மாற்றுகிறது என சில ஆய்வுகள் கூறுகின்றன.

தொடர்ச்சி 10ம் பக்கம்...




**T.T.S.Brothers GmbH&Co.KG**

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd

09 பக்கத் தொடர்ச்சி

### தேன் இனியது மட்டுமல்ல புண்களுக்கு மருந்தும் கூட!

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திட்ட (1940களில்) நுண்ணுயிர் கொல்லி (Antibiotics) மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டிராவிட்டால் இன்று புண், காயம், மற்றும் சத்திர சிகிச்சை தேவைகளுக்கான முக்கிய பொருளாக தேன் பயன்படுத்தப்பட்டிருக்கும் என்பது திண்ணம்.
பிள்ளைகள் மருந்து கட்டுவதென்றால் அலறியடித்து ஓடுவது வழக்கம். முதலில் வாயில் சற்று தேனை ஊட்டிவிட்டு, தேனால் சுத்தம் செய்து தேன் இட்டு மருந்து கட்டுவதென்றால் தாங்களாகவே ஓடி வருவார்கள் என்பது திண்ணம்.

**தேனின் வேறு மருத்துவப் பயன்கள்**

தேனானது இரைப்பை அமிலங்கள் மேல் எழுவதைத் (Gastroesophageal reflux) தடுக்க உதவும் என காட்மண்டுவைச் சார்ந்த பேராசிரியர் Mahantayya V Math பிரபல மருத்துவ சஞ்சிகையான BMJ யில் எழுதியுள்ளார்.
குழந்தைகளில் ஏற்படும் வயிற்றோட்ட நோய்களுக்கு தேன் உதவும் என Mahantayya VMath யில் எழுதியிருந்தார். பக்றீரியா கிருமிகளால் ஏற்படும் வயிற்றோட்ட நோய்கள் குணமாவதை தேன் துரிதமாக்கும் என்பதே அவரது முக்கிய கருத்தாகும். மருந்தாகப் பயன்படுத்த முடியும் என்று கூறவில்லை.
குழந்தைகளைத் தொல்லைப்படுத்தும் இரவு இருமலைத் தணிக்க தேன் உதவும் என journal Pediatrics இல் ஒரு கட்டுரையில் தெரிவிக்கப் பட்டிருந்தது. "ஏனைய இருமல் மருந்துகளைவிட குழந்தைகளின் இரவு இருமலையும் அதனால் ஏற்படும் தூக்கக் குழப்பத்தையும் தணிக்கத்தேன் உதவியது" என சில பெற்றோர்கள் கூறியதாக மேலும் தெரிவித்திருந்தது.
சில வகை ஒவ்வாமைகளுக்குத் தேன் உதவும் எனச் சொல்லப்பட்டபோதும் தெளிவான ஆதாரங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**தேனின் சிறப்பு அம்சங்கள் எவை?**

சுத்தமான தேன் என்றுமே பழுதடையாது. பிரிட்ஜில் வைத்துப் பாதுகாக்க வேண்டிய தேவை எதுவும் இல்லை.
மனிதனுக்கு தெரிந்த மிகப் பழமையான உணவு வகைகளில் இதுவும் ஒன்று. ரட் மன்னரின் (King Tut) கல்லறையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட புராதன காலத் தேனானது, இன்றும் உண்ணக் கூடிய நிலையில் சற்றும் பழுதடையாது இருந்தது குறிப்பிடத்தக்கது.

**தேனின் போஷணை**

தேனில் உள்ள இனிப்பின் பெரும்பகுதி பழங்களில் இருந்து கிடைக்கும் புரக்டோஸ் (Fructose) வகையைச் சார்ந்தது. இதனால் நாம் வழமையாகப் பாவிக்கும் சீனியை விட 25 சதவிகிதம் இனிப்புக் கொண்டது.

ஒரு தேக்கரண்டி தேனில் 64 கலோரிச் சத்து உண்டு. இது எமது உடற் தசைகளின் இயக்கத்திற்கான சக்தியை வழங்குகிறது. தேனில் 17.1 சதவிகித நீர்ப்பற்றே உண்டு. மிகுதி 82.4 சதவிகிதமும் மாச்சத்தாகும். இந்த மாச்சத்துத்தான் இனிப்பாக எமக்குக் கிடைக்கிறது.

அதிக கலோரி வலு காரணமாக நீரிழிவு நோயாளருக்கு உகந்தது அல்ல என்பதையும் குறிப்பிட வேண்டும். மிச்சமுள்ள 0.5 சதவிகிதம் மட்டுமே புரதம், விட்டமின்கள் மற்றும் தாதுச்சத்தாகும். கொழுப்புச்சத்து, கொலஸ்டரோட்ட ஆகியன அடியோடு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.
இந்த மாப்பொருளில் பழவகை இனிப்பான புரக்டோஸ் 38.5 சதவிகிதமாகும் (fructose38.5%). குளுக்கோஸ் 31 சதவிகிதமாகும். மிகுதி 12.9 சதவிகிதம் மோல்டோஸ், சுகுரோஸ் போன்ற ஏனைய சீனிவகைகளாகும். இதனால் விரைவில் ஜீரணமடையும் தன்மை கொண்டது.

**பக்கவிளைவுகள்**

தேன் பொதுவாகப் பக்க விளைவுகள் அற்ற பொருளாகும். தேனுக்கு ஒவ்வாமை (Allergy) ஏற்படுவது அரிது. அதில் உள்ள பூக்களின் மகரந்தங்களுக்கும், தேனீ பூச்சியின் புரதங்களுக்கும் ஒவ்வாமை ஏற்படலாம் என எதிர்பார்த்தாலும் அவ்வாறு ஏற்பட்டதற்கான மருத்துவ அறிக்கைகளைக் காண முடியவில்லை.




**ஆதாரமற்ற நம்பிக்கை**

"தேனுடன் தண்ணீர் கலந்து வெறும் வயிற்றில் குடித்தால் உடல் மெலியுமாமே" என ஒரு நோயாளி என்னிடம் கேட்டார். இது பற்றி மருத்துவ இணைய தளங்களிட்ட தேடியபோது அதற்கான ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை.
ஆனால் தேனில் 82.4 சதவிகிதமும் மாச்சத்துள்ளது என்ற தகவலை வைத்து விஞ்ஞான பூர்வமாகவும், தர்க்க ரீதியாகவும் சிந்தித்தால் இதில் எந்தவித உண்மையும் இருக்க முடியாது என்பது தெளிவாகிறது. வெற்று நம்பிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு மருத்துவ விடயங்களில் தீர்மானிக்கக் கூடாது என்பதற்கு இது ஒரு ஆதாரம்..
நன்றி: தமிழர்தகவல் கனடா








# காதைக் குடையும் பீப் பீப் செய்திகள்!

**பீப் பாடல் விவகாரத்தால் சிங்கம் 3 மற்றும் 2 புதிய படங்களில் இருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறார் இசையமைப்பாளர் அனிருத்.**



மிகக் குறுகிய காலத்திலேயே தமிழ் சினிமாவில் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்தவர் அனிருத். கடந்த வாரம் இவரின் இசையில் வெளியான பீப் பாடலால் தற்போது அனிருத்தின் எதிர்காலம் கேள்விக்குரியதாக மாறியிருக்கிறது. இந்தப் பாடலால் நாளுக்குநாள் இவருக்கு நெருக்கடிகள் அதிகரித்து வரும் நிலையில் தற்போது இவர் இசையமைக்க இருந்த படங்கள் வேறு இசையமைப்பாளர்களின் கரங்களுக்கு செல்ல ஆரம்பித்து இருக்கிறது.
அனிருத் தனுஷின் மனைவி ஐஸ்வர்யா தனுஷ் இயக்கிய 3 படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் இசையமைப்பாளராக அறிமுகமானவர் அனிருத். இந்தப் படத்தில் இடம்பெற்ற கொலைவெறி பாடல் அனிருத்தை ஒரே நாளில் உலகம் எங்கும் கொண்டு சேர்த்தது.

மிகக் குறுகிய அனிருத் இசையமைப்பில் வெளியான எதிர் நீச்சல், மான் கராத்தே, வணக்கம் சென்னை, வேலை இல்லாப் பட்டதாரி,கத்தி, காக்கி சட்டை, மாரி, நானும் ரவுடிதான் மற்றும் வேதாளம் போன்ற படங்கள் ரசிகர்களிடம் நல்லதொரு வரவேற்பைப் பெற்றன. இசையமைப்பாளராக அறிமுகமான 4 வருடங்களில் விஜய், அஜீத் போன்ற முன்னணி நடிகர்களின் படங்களுக்கு இசையமைக்கும் அளவிற்கு அனிருத்தின் வளர்ச்சி இருந்தது.
அனிருத்தை தொடர்ந்து வளர்த்து விட்ட பெருமை நடிகர் தனுஷையே சேரும். 3 படத்தில் இருந்து தான் நடிக்கும் மற்றும் தயாரிக்கும் படங்களுக்கு அனிருத்தையே இசையமைப்பாளராக வைத்து அழகுபார்த்து வருகிறார் தனுஷ்.

பீப் பாடல் இந்நிலையில் சமீபத்தில் வெளியான பீப் பாடல் அனிருத்துக்கு நீங்காத அவப்பெயரை ஏற்படுத்தி விட்டது. பீப் பாடலால் தற்போது அனிருத்தின் எதிர்காலம் தமிழ் சினிமாவில் கேள்விக்குரியதாக மாறியிருக்கிறது.இந்தப் பாடலால் நாளுக்குநாள் இவருக்கு நெருக்கடிகள் அதிகரித்து வரும் நிலையில் தற்போது இவர் இசையமைக்க இருந்த படங்கள் வேறு இசையமைப்பாளர்களின் கரங்களுக்கு செல்ல ஆரம்பித்து இருக்கிறது.

சிங்கம் 2 படங்களைத் தொடர்ந்து சிங்கம் 3 படத்தை சூர்யாவை வைத்து எடுக்கவிருக்கிறார் இயக்குநர் ஹரி. இந்தப் படத்திற்கான முன்னேற்பாடுகள் தற்போது தொடங்கி இருக்கின்றன. சூர்யா நடிக்கும் இப்படத்தில் அனுஷ்கா, சுருதிஹாசன் ஆகியோர் நாயகிகளாக நடிக்கவுள்ளனர். இந்தப் படத்தில் சுருதிஹாசன் சிஐடி அதிகாரியாக நடிக்கவிருக்கிறாா். அனிருத்தை நீக்கி விட்டு தற்போது ஹாரிஸ் ஜெயராஜை படக்குழுவினர் ஒப்பந்தம் செய்திருக்கின்றனர்.
சிங்கம் 3 படத்தைத் தவிர வேறு 2 புதிய படங்களில் இருந்தும் அனிருத் நீக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

தங்கமகன் அனிருத்தின் கையில் இருந்த தங்கமகன் திரைப்படமும் இன்று வெளியாகி விட்ட நிலையில்,வேறு புதிய படங்கள் எதுவும் அனிருத் கைவசம் இல்லை. இந்த விவகாரத்தில் தனுஷ் இதுவரை எதுவும் வாய் திறக்காத நிலையில் தனது அடுத்தடுத்த படங்களில் தனுஷ், அனிருத்திற்கு வாய்ப்பு கொடுப்பாரா? என்பது மிகப்பெரிய கேள்வியாக வளர்ந்து நிற்கிறது.

கொலைவெறி மொத்தத்தில் கொலைவெறி பாடலால் வளர்ந்த அனிருத்தின் எதிர்காலம் தற்போது பீப் பாடலால் கேள்விக்குறியாக மாறியிருக்கிறது என்பதே உண்மை.



**அனிருத்தை வீட்டுப் பக்கம் வரவிடாதீர்கள்“**

# ரஜினியின் சீற்றம்!

ரஜினியாக இருப்பது ரொம்பவே கஷ்டம் என்பார்கள். காரணம் அவர் அமர்ந்திருக்கும் இடம் அப்படி. ரஜினி இப்படி ஒரு சிகரத்தில் இருக்கிறார்... அவரது நெருங்கிய உறவினர்களான நாம் செய்யும் எந்த செயலும் அவரைக் கடுமையாக, அதுவும் உடனடியாக பாதிக்குமே என்ற நினைப்பு அவரது உறவினர்களுக்கு பெரும்பாலும் இருப்பதில்லை. பல தீவிர ரசிகர்களுக்கு ரஜினியின் குடும்பத்தார் செய்யும் பல செயல்களில் உடன்பாடு இருப்பதில்லை.
உதாரணம், தனுஷ், அவர் தந்தை கஸ்தூரிராஜா, இப்போது ரஜினியின் மைத்துனர் மகன் அனிருத். முதல் முதலில் அனிருத் கேவலப்பட்டது, தன்னைவிட பல வயது மூத்த நடிகை ஆன்ட்ரியாவின் உதட்டோடு உதடு வைத்து போஸ் கொடுத்த படங்களை வெளியிட்ட போதுதான். அப்போதே அனிருத்தை அழைத்து, “பெரிய அளவுக்கு வரவேண்டிய பையன் நீ... பாத்து நடந்துக்கோ“ என்று அட்வைஸ் பண்ணதாக செய்தி வெளியானது. அடுத்து ஒரு படுமோசமான ஆங்கிலப் பாட்டு ஒன்றை அவரே வெளியிட்டார். இந்த பீப் பாட்டை விட மோசமான ஆபாசப் பாட்டு அது. வார்த்தைக்கு வார்த்தை 'Fu...g' என்று ஒலித்த அந்தப் பாடலை வெளியிட்டதே அனிருத்தான். உடனடியாக போலீஸ் சம்மன் பறந்தது. ஓடோடி வந்தார் அனிருத்தின் தந்தை ரவிச்சந்திரன் என்கிற ரவி ராகவேந்தர். கமிஷனரிடம் மன்னிப்புக் கடிதம் கொடுத்து பையனை மீட்டு வந்தார். அன்றே அனிருத்தை அழைத்த ரஜினி, “நான் முன்பே சொல்லிவிட்டேன். நாளை என் படத்துக்கே கூட இசையமைக்கும் வாய்ப்பு உனக்கு கிடைக்கலாம். ஒழுக்கமாக நடந்து கொள்ளாவிட்டால் இப்போது கிடைத்துள்ள வாழ்க்கையே பாழாகிவிடும்“ என்று எச்சரித்து அனுப்பியிருக்கிறார். அதெல்லாம் இந்த பீப் பாய் காதில் ஏறவே இல்லை என்பது இப்போது தெள்ளத் தெளிவாகிவிட்டது. இந்த பீப் பாட்டு விவகாரம் பரபரப்பு கிளப்பிய போது ரஜினி சென்னையில்தான் இருந்தார். லைகா தயாரிக்கும் 2.ஓ படத்தின் தொடக்க விழாவில் பங்கேற்றவர், பீப் விஷயம் கேள்விப்பட்டு கடும் கோபமடைந்ததாராம். அடுத்து தன் குடும்பத்தினருக்கு அவர் போட்ட உத்தரவு.. “எக்காரணம் கொண்டும் அனிருத்தை வீட்டுப் பக்கம் வரவிடாதீர்கள்“ என்பதுதான். இதை அனிருத் வீட்டுக்கும் சொல்லிவிட, அவர்கள் வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியேறிவிட்டார்களாம். அடுத்து தன் மகள்களை அழைத்து, ”அனிருத்துடன் இணைந்து பணியாற்றுவதைத் தவிருங்கள். வேறு இசையமைப்பாளர்களை அமர்த்திக் கொள்ளுங்கள்” என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாராம். இதில் ரஜினி மருமகன் தனுஃக்குதான் பெரும் சங்கடமாம். அடுத்தடுத்து மூன்று படங்களுக்கு அனிருத்தை அவர் ஒப்பந்தம் செய்துள்ளாராம். மாமனார் உத்தரவுக்கு கட்டுப்பட்டு அனிருத்தை மாற்றுவாரா... அல்லது பீப் பாயை கட்டிக் கொண்டு அழுவாரா.. பார்க்கலாம்!







3ம் பக்கத் தொடர்ச்சி

# தமிழ் மக்கள் பேரவை...

## நாடாளுமன்ற தெரிவுக்குழு

நாடாளுமன்ற தெரிவுக்குழுவினால் கூட புதிய அரசியல் யாப்புக்கான யோசனைகளை முன்வைக்க முடியாது என மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக பதவி வகித்தபோது சம்பந்தன் கூறியிருந்தார். இப்போது நாடாளுமன்றத்தையே அரசியலமைப்பு சபையாக மாற்றி புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் சம்பந்தன் எவ்வாறு கேட்க முடியும் என்றும் சுரேஸ் பிரேமச் சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார். ஆகவே புதிய அரசியல் யாப்பு விடயத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் சரியான இணக்கப்பாடுகள் அல்லது கொள்கைத் தீர்மானங்கள் இல்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. புதிய அரசியல் யாப்பு தொடர்பாக பேசுவது என்றால் முதலில் தமிழ் மக்களுடன் பேசி அவர்களின் 60 ஆண்டுகல அரசியல் போராட்டத்திற்கு தீர்வு காணப்பட வேண்டும் என முதலமைச்சர்

## விக்னேஸ்வரனும் கூறியிருக்கின்றார்.



முதலமைச்சர் விக்னேஸ்வரன்

ஆகவே தமிழ் மக்களை புறக்கணிக்கின்ற நல்லாட்சி அரசாங்கத்தின் தீர்மானங்களை சம்பந்தனும் சுமந்திரனும் தன்னிச்சையாக ஏற்பது என்பது தமிழ் மக்களின் ஒட்டுமொத்த முடிவு அல்ல. இவர்களின் நடவடிக்கை களை கண்டிக்காமல் அல்லது தமிழ் மக்களை புறம்தள்ளி புதியஅரசியல் யாப்பு உருவாக்கப்படுவது எதிர்கால அரசியலுக்கு நல்லதல்ல என்ற விழிப்புணர்வுகளை கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் மக்கள் மத்தியில் கொண்டு செல்லவில்லை என்ற சந்தேகங்களும் எழுகின்றன.

எதிர்வரும் 22 ஆம் திகதி புதிய அரசியல் யாப்பு தொடர்பாக கொழும்பில் நடைபெறவுள்ள கலந்துரை யாடல்களில் கூட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சார்பில் எவருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

## தனிப்பட்ட நபர்களின் முடிவுகள்

60 ஆண்டுகால அரசியல் போராட்டம் ஏன் நடைபெற்றது, அதன் தாக்கம் என்ன, கடந்த காலங்களில் செய்யப்பட்ட அரசியல் யாப்புக்களின் குறைபாடுகள் என்ன, வடக்கு கிழக்கு மாகாணம் இணைப்படுமா, வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதை எற்றுக்கொள்வதா, காணி பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் நிதி திட்டமிடல் போன்ற அதிகாரங்களை எவ்வாறு பங்கிடுவது போன்ற விடயங்களில் முதலில் அரசாங்கம் முதலில் இணக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா? அல்லது அது தொடர்பான கலந்துரையாடல்களையேனும் தமிழ் தரப்புடன அரசாங்கம் நடத்தியதா? இந்த நிலையில் தனிப்பட்ட நபர்களின் முடிவுகள் யோசனைகளுடன் எவ்வாறு புதிய யாப்பு தொடர்பான விடயங்களில்


## தீர்மானத்தை எடுக்க முடியும்?

மங்கள முனசிங்கவின் அறிக்கையையும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா 1996இல் தயாரித்த பிராந்தியங்களுக்கான அதிகாரப்பரவலாக்கம் என்ற யோசனைகளையும் மேசையில் வைத்துக் கொண்டு பேசினால் நல்லது என கூட்டமைப்பின் பிரதித்த தலைவர் மாவை சேனாதிராஜா அரசாங்கத்துக்கு ஆலோசணை வழங்கியதாக தகவல் ஆனால் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைவாக அரசியல் தீர்வை முன்வைப்பது என சந்திரிக்காவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தெளிவாக சொல்லிவிட்டனர் இந்த நிலையில் மாவை சேனாதிராஜா கூறிய யோசனை எந்தளவு துாரத்துக்கு செல்லுபடியாகும்? ஆகவே 1965ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை நம்பி அமைச்சுப் பொறுப்புகளை எற்று ஏமாந்து இன்று வரை அதேமாதிரியான ஏமாற்றங்களை சந்தித்து வரும் தமிழ் தலைமைகளுக்கு இன்னமும் பட்டறிவை இல்லை என்பதையே இது கோடிகாட்டுகின்றது.

இந்த ஏமாற்றங்களின் மத்தியில்தான் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் பேரவை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் விக்னேஸ்வரனை மையப்படுத்தி உருவான இந்த பேரவை தேசிய இயக்கமாக செயற்படுமா அல்லது வெறுமனே தமிழ்த் தேசிய கூட்டமைப்பை மட்டும் விமர்சிக்குமா என்பது கேள்வியே ஆனால் விமர்சனங்கள் குற்றச்சாட்டுக்களை விட செயற்திறன் மிக்க வேலைத்திட்டம் ஒன்றை பேரவை நகர்த்த வேண்டும்- அந்த நகர்வு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பேக்கில் மாற்றத்தை உருவாக்க வேண்டும்?




கனகதுர்க்கா பூசாரி
பண்டித் சீனிவாஸ் சாஸ்திரி
கருமாரி அம்மன் துணை
Face Reading
முகத்தைப் பார்த்து உங்கள்
எதிர் காலத்தைக் கணிப்பார்
அத்துடன் கைரேகையும் பார்க்கப்படும்



வியாபாரங்கள் எதிரிகள் உடல்நிலை
வேலை குழந்தைப்பாக்கியம் திருமணம் பணம் காதல்
விவாகரத்து வழக்குகள் கண்திருஷ்டி படிப்பு
வாகனப்பொருத்தம் மற்றும் பலபிரச்சினைகளுக்கும்
தீர்வுகாணலாம். காத்துக்கறுப்பு இருந்தாலும் நிவாரணம்
செய்து கொடுக்கப்படும்
வாரத்தில் 7 நாட்களும் 09.மணி முதல் 22.00 மணி வரை வரலாம்.
பேசும் மொழிகள் :தமிழ் தெலுங்கு,
ஒரு முறை நம்பிக்கையுடன் வாருங்கள் நலமடைவீர்கள்.
Tel:0231 33 89 72 90 -Handy: 015166182886 015214145738
Adler Ster.30, 44137 Dortmund

A.tu.Z Dolmetscher -
und Übersetzungsdienst
Für alle weltspracben
மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம். Lise-Meitner-Str.20
45144 Essen
e.mail:atuzuebersetzung@hotmail.com



அன்று யாழ் நகரில் ஓர் மொக்கன் கடை இன்று டோட்மூண்ட் நகரில் ஓர் நானா கடை!
Sweet Chilli
Original Srilankisches & Indisches Restaurant
100%Halal 100%Frisch 100%Naturgewürze 100%Naturkräuter
இலங்கை புரியாணி [ஒரிஜினால்] கொத்துரொட்டி, இடியப்பகொத்து, புட்டுக்கொத்து, தோசை,மட்டன்றோல். பற்றிஸ் மற்றும் ஊர் ஆட்டிறைச்சிக் கறி, ரோஸ்கறி, கோழிக்கறி.அத்துடன் இந்திய உணவுவகைகள், அறுசுவை மரக்கறிகளுடன் தினமும் வாழையிலையில் பரிமாறும் ஒரே கடை நானா கடை!!! தினமும் காலை 11.30 இருந்து மாலை 23.30 வரை
Sweet Chilli
சான்றிதழ்களை இருமுறை பெற்றவர்கள் நாம்!
50 இருக்கைகளைக் கொண்டது
Rheinische str.60- 44137 Dortmund
www.sweetchilli-do.de
Tel: 0231 315 46 84





# முகப் புத்தகத்தில் சுட்டவை

**ஒரு அதிகாலைப்பொழுது! கணவன் மனைவியை எழுப்பி கேட்டான்.**

"இஞ்சாரும்... யோகா பண்ணப்போறேன்... நீயும் வர்றியா?"
கணவனை வித்தியாசமாக பார்த்த அந்த மனைவி,



"ஓ... அப்படின்னா நான் குண்டா இருக்கேன்! உடம்பை குறைன்னு சொல்றீங்க..அப்படி தானே?"
கணவன்: "அதுக்கில்லைம்மா! யோகா பண்றது ஹெல்த்துக்கு நல்லது!"
மனைவி: "அப்போ என்னை நோயாளின்னு சொல்றீங்களா?"
கணவன்: "இல்லை இல்லை! நீ வரவேணாம். விடு!"
மனைவி: "அப்ப என்னை சோம்பேறின்னு நினைக்கிறீங்க!"
கணவன்: "ஐயோ இல்லை! ஏன் எல்லாத்தையும் தப்பாவே புரிஞ்சுக்கிற?"
மனைவி: "இவ்வளவு நாளா புரிஞ்சுக்காம தான் இருந்தேனா?"
கணவன்: "மறுபடி பாரு.. நான் அப்படி சொல்லலை!"
மனைவி: அப்படிதான் சொன்னீங்க! அப்ப என்ன நான் பொய் சொல்றேனா?"
கணவன்: "தயவு செஞ்சு விடு! காலங்காத்தால ஏன் சண்டை?"
மனைவி: "ஆமாங்க... நான் சண்டைக்காரிதான்!"
கணவன்: "Ok! நானும் போகலை. போதுமா?"
மனைவி: "உங்களுக்கு போக அலுப்பு! அதுக்கு என்னை குத்தம் சொல்றீங்க"
கணவன்: "சரி, நீ தூங்கு! நான் தனியா போய்க்கிறேன்! சந்தோஷமா?"
மனைவி: "அதானே... உங்களுக்கு எங்க போனாலும் தனியா போய் enjoy பண்ணனும்! அதுக்குதானே இவ்வளவும் பேசுனீங்க?"
வெறுத்துப்போன கணவன் எவ்வளவு யோசித்தும், தான் என்ன தவறு செய்தோம் என்று விளங்கவே இல்லை! களைத்துப்போய் படுத்துவிட்டான்.




# பணம் அரசுக்கு சொந்தமானது உயிர் உங்களுக்குச் சொந்தமானது!

ஐரோப்பாவில் நடந்த ஒரு வங்கி கொள்ளையின் போது ..... கொள்ளையர்கள் துப்பாக்கியுடன் அனைவரையும் மிரட்டினர் . ""இந்த பணம் அரசுக்கு சொந்தமானது , ஆனால் உங்கள் உயிர் உங்களுக்கு சொந்தமானது"" அனைவரும் அசையாமல் படுத்துவிட்டார்கள் ....

.

மனதை மாற்றும் முறை என்பது இதுதான் . ". This is called "Mind Changing Concept" Changing the conventional way of thinking."

.

அங்கே ஒரு பெண் கொள்ளையர்களின் கவனத்தை திருப்ப அநாகரிகமாக நடந்தாள் . அப்பொழுது கொள்ளையர்களில் ஒருவன் , இங்கு நடக்க போவது கொள்ளை, கற்பழிப்பு அல்ல என்று மிரட்டி அமர வைத்தான்....

.

இதை தான் செய்யும் தொழில்களில் கவனம் தேவை என்று சொல்கிறோம் "Being Professional & Focus only on what you are trained""

.கொள்ளையடித்துவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் கொள்ளையர்களுள் ஒருவன் கேட்டான் "" வாருங்கள் சீக்கிரம் பணத்தை எண்ணி விடலாம்"" என்று . மற்றாரொருவன் சொன்னான் , பொறு , அவசரம் வேண்டாம் . பணம் நிறைய இருக்கிறது நேரம் செலவாகும் அரசே நாம் எவ்வளவு கொள்ளை அடித்தோம் என்று நாளை செய்திகளில் சொல்லி விடும்.

.

இதை தான் படிப்பை விட அனுபவம் சிறந்தது என்போம்
This is called "Experience." Nowadays, experience is more important than paper qualifications! ""

.வங்கியின் மேலாளர் இச்சம்பவத்தை காவல்துறையிடம் சொல்ல முனைந்த போது அவனுடைய மேல் அதிகாரி தடுத்து அவனிடம் கூறினார் "" வங்கியில் கொள்ளை போனது 20 கோடி தான். நாம் மேலும் 30 கோடி பதுக்கி வைத்து மொத்தமாக ஐம்பது கோடி கொள்ளை போய்விட்டது என்று சொல்லி விடுவோம்" என்றார் .

.""காற்றுள்ள போதே தூற்றிக் கொள் ""என்பது இது தான் . This is called Swim along with the tide.... Converting an unfavourable situation to yours.

.

இதை கேட்ட மற்றொரு அதிகாரி "" வருடம் ஒரு கொள்ளை இவ்வாறு நடந்தால் மிக நன்றாக இருக்கும் "" என்றார் .

.

""கலியுகம் "" என்பது இது தான் . This is called Killing boredom World. Personal happiness is much more important than your job.

.

மறுநாள் செய்திகளில் வங்கியில் 100 கோடி கொள்ளை போய்விட்டது என்று அறிவிக்கபட்டது . கொள்ளையர்கள் அதிர்ந்து போய் பணத்தை எண்ண தொடங்கினர் . எவ்வளவு எண்ணியும் அவர்களால் இருபது கோடிகளுக்கு மேல் போக முடியவில்லை . கொள்ளையர்களில் ஒருவன் எரிச்சல் அடைந்து "" நாம் உயிரை பணயம் வைத்து இருபது கோடி கொள்ளையடித்தோம். ஆனால் இந்த வங்கி அதிகாரி சிரமம் இல்லாமல் எண்பது கோடி கொள்ளை அடித்து விட்டனர். படிப்பின் அவசியம் புரிகிறது இப்பொழுது .இதற்கு தான் படித்திருக்க வேண்டும் .""என்றான்.

.True. Knowledge is nowadays very important than money in this world.





Essen மாநகரில் Öffnungszeiten 14.00-19.00 Uhr

Oviyan textiles

ஒவியன் ஆடைகள் உலகம்

Tel:0201 330 99 464

அழகிய பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பெரியவர் சிறுமிகளுக்கான
அழகிய பஞ்சாபிகள்,இமிற்ரேசன் நகைகள் அனைத்தையும்
மலிவாகவும் தரமாகவும் பெற நாடுங்கள்,ஒவியன் ஆடைகள் உலகம்!

எசன் நகர பிரதான புகையிரத நிலையித்தில் (Hbf) இருந்து 5 நிமிட நடைத்தூரம்

Ihn.Balasundaram

Baedecker Str.11
45128 Essen

Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com






# Clinic

தங்களது சம்பளமும் child benefit ம்

Child benefit என்பது அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் tax-free gift எனக் கூறலாம். Child benefit பெறுவதற்று உரித்தானவர்களுக்கு பின்வரும் அடிப்படையில் அந்தத் தொகை கொடுக்கப்படும்

| பிள்ளைகள் | total benefit |
|---|---|
| 1 | £1,076 |
| 2 | £1,789 |
| 3 | £2,501 |
| 4 | £3,214 |

தங்களது பிள்ளைகள் 16 வயதை அடையும் வரை, அல்லது 20 வயதை அடையும் வரை GCSE, A level போன்ற relevant பாடங்களைப் படித்துக் கொண்டு இருந்தால் இந்த benefit ஐ பெற்றுக் கொள்ள முடியும்.

தங்களது வீட்டில் வருட சம்பளத்தின் அடிப்படையில் ஒருவர் £50,000ற்கு மேல் வருமானம் எடுத்தால் அவர் கிடைக்கும் child benefitý வரி செலுத்த வேண்டும்.

அதாவது £51,000 வருமானம் உடைய ஒருவர் இரண்டு பிள்ளைகளுக்கு child benefit எடுத்தால் அவர் £178 வரி செலுத்த வேண்டும் (£1789x10%) , அதே போல் £55,000 வருமானம் எடுப்பவர் 50விதம் வரியாக £894 செலுத்த வேண்டும். அதே சமயம் £60,000ற்கு மேல் வருமானம் கிடைத்தால் இந்த child benefit சலுகை முற்றாக நிறுத்தப்பட்டுவிடும்.

**Child benefit tax charge** ஐ எவ்வாறு தவிர்த்துக் கொள்ள முடியும்?

இது முக்கியமாக £50,000 தொடக்கம், £60,000 வரை தனிப்பட்ட வருமானம் எடுப்பவர்களுக்கே உரியது. அதாவது இவர்கள் pension பணத்தை செலுத்துவதன் மூலம் தங்களது வருமானத்தை குறைத்து காட்டி child benefit tax charge செலுத்துவதை தவிர்க்க முடியும்.

உதாரணம்: : குமார் என்பவரின் வருமானம் £55,000. அவரின் மனைவி ஒரு வருடத்திற்கு £30,000 உழைக்கிறார். மூன்று பிள்ளை களுக்கு £2501 child benefit பெறுகின்றார்கள். குமாரின் வருமானம் £55,000 இருப்பதால் அந்த அதிகமான £5000 வருமானத்திற்கு அவர் £2000 வரி செலுத்த வேண்டும், அத்துடன் £1250 (2501x50%) child benefit charge ம், கட்ட வேண்டும். ஆகவே குமாரின் வரிக்கு முன் கிடைக்கும் இந்த £5000 தொகையானது வரிக்கு பின் £1750 ஆக குறைக்கப்படுகிறது.

எனவே இந்த £5000 சம்பளத்தில் அதாவது 50,000ற்கும், 55,000ற்கு இடைப்பட்ட வித்தியாசமான சம்பளத்தில் எவ்வாறு child tax benefit charge செலுத்துவதை தவிர்க்க முடியும் என அவதானிப்போம்.

குமார் pension பணமாக £4000 செலுத்தினால் அரசாங்கம் £1000 tax credit ஆக கொடுக்க இவரின் gross pension £5000 ஆக அதிகரிக்கிறது. அது மட்டுமன்றி குமார் வருட இறுதியில் tax return சமர்ப்பிக்க இன்னும் ஒரு £1000 (5000x20%) higher rate tax relief ஆக இவருக்கு கிடைக்கும். இங்கு குறிப்பிட்ட இந்த உதாரணத்தில் குமாரின் சம்பளம் £50,000 ஆக குறைக்கப்படுவதால் (£55,000 less £5000) இவர் child tax credit charge ஆன £1250 செலுத்துவதை குறைத்துக் கொள்கின்றார்.

மொத்தமாக இவருக்கு £3250 tax relief கிடைக்கின்றது (£1000 + £1000 + 1250)
அடுத்த உதாரணமாக ராஜ் என்பவரை எடுத்துக் கொள்வோம். இவருடைய சம்பளம் வருடத்தில் £65,000,எனவே இவர் child benefit tax charge ஐ தவிக்க வேண்டும் என்றால் இவரின் வருமானம் £50.000ற்கு குறைவாக இருக்க வேண்டும்.

எனவே இவர் £12,000 பணமாக pension பணம் செலுத்தினால் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் £3000 tax relief யும் (சேர்த்து மொத்தமாக £15000) அவர் tax charge செலுத்துவதை தவிக்க முடியும்.

## Question and answer section

கேள்வி:
நான் என்னிடம் இருக்கும் £15,000 சேமிப்பு பணத்தை என் மகனுக்கு கொடுக்க திட்டமிட்டு இருக்கிறேன். இவ்வாறு கொடுக்கும் பணத்திற்கு வரி கட்ட வேண்டும் என எனது நண்பன் சொல்கின்றார். இதனைப் பற்றி சற்று விவரமாக கூற முடியுமா?



பதில்:

ஒரு கணவனுக்கும், மனைவிக்கும் இடையில் எந்த விதமான asset ஐயும் அது பொருளாக இருந்தாலும், அல்லது பணமாக இருந்தாலும் மாறுதல் செய்வதில் எந்த வரியும் செலுத்தத் தேவையில்லை. ஆனால் பணத்தை தவிர மற்ற எந்த பொருளையும் (Asset) உங்கள் மகனுக்கு கொடுத்து அந்த பொருள் பின்னர் விலை உயர்ந்தால் capital gains செலுத்த வேண்டும். ஆனால் பணமாக கொடுக்கும் பொழுது அதற்கு எந்தவித விரியும் செலுத்த தேவையில்லை. (Gifts of cash are tax-free). இந்த gift கொடுத்த பின் நீங்கள் ஏழு வருடத்திற்கு மேல் உயிர் வாழ்ந்தால் Inheritance tax ம் செலுத்த வேண்டி இருக்காது. தங்களுடைய வருமான வரி செலுத்தும் வீதம் உங்களின் மகனின் வருமான வரி வீதத்தை விட கூடலாக இருந்தால் இவ்வாறு பணத்தை மகனிடம் கொடுத்து அவரின் பெயரில் rental பணம் சம்பாதித்தால், மொத்தம் செலுத்தும் வரியை குறைத்துக் கொள்ள முடியும்.



### தைபிறந்தால்...

தைபிறந்தால்
தைபிறந்தால் வழிபிறக்குமென்று
விழிமூடித் தூங்கினால்
விடியல்தான் தோன்றுமா?
மனையிருள் துடைக்க
தீபங்கள் ஏற்றவேண்டும்
மனசிருள் களைய
ஆன்மீகம் துணைவேண்டும்
உன்வானம் வெழுக்க
ஓயாத அலைகள்போல்
உடைந்தாலும் கரைகள் தேடு!

இரா. சம்பந்தன்



# அடப்பாவிகளா.. இப்பத்தான் தெரியுதா ஆபாசம்?

## பீப் சாங் பற்றி பாடலாசிரியர் தாமரை ஆதங்கம்





சிம்பு பாடிய பீப் ஆபாச பாடல் பற்றி திரைபபாடலாசிரியர் தாமரையும் தனது கருத்தை தெரிவித்துள்ளார். தனது முகநூல் பக்கத்தில் அவர் இப்பாடல் குறித்து பதிவிட்டுள்ளதில் இருந்து. .

“கடந்த நான்கு நாட்களாக மாற்றி மாற்றித் தொலைபேசி அழைப்புகள். சிம்பு-அனிருத் தொடர்புள்ள பாடல் குறித்து என் கருத்து வேண்டும் என்று ஊடகவியலாளர்கள் கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். உண்மையில் எனக்கு ஒருவாரமாக இரவு பகல் பாராத வேலை. வீட்டுக்கும், பணியிடத்துக்குமாக ஓடிக்கொண்டே இருக்கிறேன். இதில் எங்கே போய் இதுபோன்ற பாடல்களையெல்லாம் கேட்பது ?

ஆனால் ஊடகங்கள் துரத்த ஆரம்பித்த பின்பு கேட்டு வைத்தேன். அப்புறம்தான் தோன்றியது, இதில் நான் கருத்துச் சொல்ல என்ன இருக்கிறது ? என்று. இப்படியெல்லாம் எழுதலாமா, பெண்களை இழிவுபடுத்தலாமா, சமூக சீரழிவு இத்யாதி இத்யாதி….

அடப்பாவிகளா, நானும் இதைத்தானே இருபது ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன், இப்போதுதான் ஏதோ புதிதாகக் கண்டுபிடித்தது போல பொங்குகிறார்களே என்று….. நான் சொன்னது மட்டுமல்ல , செய்தே காட்டியிருக்கிறேன். வெறும் வாய்ப்பேச்சில்லை, உத்தரவிடவில்லை, வாயால் வடை சுடவில்லை, செயலால் காட்டியிருக்கிறேன். நீண்ட நெடிய 18 ஆண்டுகள். ஆபாசமாக எழுதமாட்டேன், அருவருக்கத்தக்க வரிகள் தர மாட்டேன், சமூகத்தைக் கெடுக்கும் பாடல் எழுத மாட்டேன்…. பாடல்கள் மட்டுமல்ல , காட்சிகள், வசனங்கள், நடிகர்களின் உடல்மொழி எதிலும் ஆபாசம் கூடாது என்று வலியுறுத்தி வந்திருக்கிறேன்.

இதற்காகத் தனிப்பட்ட முறையில் எனக்குப் பல இழப்புகள் இருந்திருக்கலாம், ஆனால் என் ' கலை, கலைஞர்களின் பொறுப்புணர்வு ' தொடர்பான நிலைப்பாட்டில் எந்த சமரசமுமில்லை. நேற்று இப்படித்தான், இன்று இப்படித்தான் , நாளையும் இப்படித்தான்… எனவே, நானே கருத்தாக இருக்கும்போது, தனியாக இது குறித்துக் கருத்து வேறு சொல்ல வேண்டுமா ?…

சரி போகட்டும், நீங்கள் என்ன விரும்பினீர்களோ அதுதானே கிடைத்திருக்கிறது ?? அப்புறம் ஏன் இந்தப் 'பொங்கல்'?

நல்ல பாடல்கள் வரவேண்டும் என்று இந்த சமூகம் விரும்பியிருந்தால், தாமரை போல் இத்தனை நேரம் ஒரு பத்துப்பேராவது வந்திருக்க வேண்டாமா ? ' தாமரை சமூகத்தைச் சீரழிக்காத, ஆபாசமற்ற நல்ல பாடல்களை எழுதி வெற்றி பெற்றிருக்கிறார், நானும் அவரைப் பின்பற்றி எழுதப் போகிறேன் ' என்று ஊரிலிருந்து புறப்பட்டு வந்தவர்கள் எத்தனை பேர்? கை தூக்குங்கள் பார்க்கலாம்…

இல்லையல்லவா, ஒருவர்கூட இல்லையல்லவா ?? அப்புறமென்ன, ' ஐயோ திரைப்படப் பாடல்கள் சீரழிக்கின்றன ? ' என்ற ஒப்பாரி ??

உண்மை என்னவெனில் தாமரைகள் இந்த சமூகத்திற்குத் தேவையில்லை. தாமரைகள் ' பிழைக்கத் தெரியாதவர்கள், காலாவதியாகிப் போனவர்கள், நல்லனவற்றைக் கொண்டாடத் தெரியாத, பாதுகாத்து வைத்துக் கொள்ளாத சமூகத்திற்கு அல்லனதானே கிடைக்கும் ?? U asked for it, U got வை, அப்புறம் ஏன் புலம்ப வேண்டும் ?

அரசியல், ஆன்மிகம், இலக்கியம், குடும்பம், கல்வித்துறை, நீதித்துறை, ஊடகங்கள்….. என சமூகத்தின் எல்லாத்தரப்பிலும் சீரழிவு, சீரழிவு, சீரழிவு… சினிமா மட்டும் சீலத்தோடு இருக்க வேண்டுமெனில் எப்படி ? சிம்புவும் அனிருத்தும் எங்கே இருந்து வந்தார்கள் ? வானத்திலிருந்து குதித்தார்களா ? வேற்றுக்கோள் வாசிகளா ? இந்த சமூகத்திலிருந்துதானே அவர்களும் வந்தார்கள் ??

இணையத்தில் ஒருவர் எழுதியிருந்தார், குழந்தைகள் கெட்ட வார்த்தை பேசுவதில்லை, கேட்ட வார்த்தையைத்தான் பேசுகிறார்கள் என்று ! எவ்வளவு உண்மை !! குழந்தைகள் பட்டதைச் செய்வதில்லை, பார்த்ததைத்தான் செய்கிறார்கள்.தாமரை போன்றவர்கள் விதிவிலக்குகள், உதிரிகள். தனிமரம் தோப்பாகாது. தனிமரங்கள் தடையாகக் கருதப்படும் , வெட்டப்படும் , வீழ்த்தப்படும்.”

### எங்கள் இதய அஞ்சலி

தோற்றம் 08.02.1958



மறைவு 08.12.15

**அமரர் கோ.தர்மசிங்கம்**

அமரர் கோவிந்தன் தர்மசிங்கம்
தாயகத்தில் ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும்
யேர்மனியில் கிறிபீல்ட் நகரை
வதிவிடமாகவும் கொண்ட
அமரர் தர்மசிங்கம் கோவிந்தன் அவர்களின்
மறைவிற்கு எங்கள் இதயம்
கனிந்த அஞ்சலியைச் செலுத்துகின்றேம்
அவர் ஆத்மா சாந்தியடைவதாக
நீங்காத நினைவுகளுடன்
தர்மராஜா குடும்பம்

### மயக்கத்தை மறப்போம் ! மாற்றமாய் மாறுவோம் !!

உலகெலாம் உணர்ந்து,
ஓர் மனம் காணுவோம்..
தலைகளை நிமிர்த்தி
தனி நடைப் போடுவோம்.....

வா வா தமிழா..
உன் வாசல் இதுதான்...
உன்னால் இனி பிறக்கும் - புது
உலகம் இனிதான்...
நேரம் பார்த்து...
உன் திறமை காட்டு...
உந்தன்,
தனி திசையில்,
இந்த உலகை மாற்று....

விடியலைத் தேடியே,
வீதியில் ஓடினால்,
இரவுகள் போலவே
பகல்களும் மாறுமே...
நிலவினைத் தொடுவதும்,
கிரகங்கள் கடப்பதும்
கனவினைப் போலவே
கலைந்திடவில்லையே...

விடியல் வரும் வரை...
விழிகள் உறங்குவோம்...
இதுவரை கிடைத்ததை
இயல்பென கொள்ளுவோம்...
மாற்றம் வரும் என்ற
மயக்கத்தை மறப்போம்,
மாற்றமாய் மாறுவோம்....

இனி வருமே
புது வரமே

விக்கி விக்னேஷ் யாழ்ப்பாணம்






சேவியர்

# வீட்டில் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணா?

## வீட்டில் ஒற்றைக் குழந்தையா ?

குழந்தைகள் இறைவனால் அருளப்படும் கொடைகள். குழந்தைகள் வரமா இல்லையா என்பதை குழந்தை வரம் தேடி அலைபவர்களிடம் கேட்டால் புரியும். ஏக்கம் இல்லாமலேயே குழந்தை வரம் வாய்த்து விடுபவர்கள் பல வேளைகளில் குழந்தைகளின் அருமையைப் புரிந்து கொள்வதில்லை.

குழந்தைகள் கடவுளின் குட்டி வடிவம். மகா சக்தியின் மினியேச்சர். அதை கடவுள் நம்மிடம் கொடுத்திருக்கிறார். "குழந்தைகள் உங்களால் வரவில்லை, உங்கள் மூலமாய் வந்திருக்கிறார்கள்" என்கிறார் கலீல் ஜிப்ரான். அந்தக் குழந்தைகளை மிகச் சரியான வகையில் வளர்க்கும் பொறுப்பு நமக்குக் கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கிறது.
என் பெற்றோருக்கு ஏழு பிள்ளைகள். எனது பாட்டி ஒருவருக்கு பதினாறு பிள்ளைகள். இன்னொரு பாட்டிக்கு பதினோரு பிள்ளைகள் என முன்பெல்லாம் பிள்ளைகள் இறை ஆசீரின் அடையாளமாக கருதப்பட்டார்கள். இப்போது காலம் மாறிவிட்டது. நாம் இருவர் நமக்கு இருவர் வந்தது. அதுவும் காலாவதியாகி நாம் இருவர் நமக்கு ஒருவர் என்றானது. இப்போது நாமே குழந்தை, நமக்கேன் குழந்தை எனும் வாசகங்களும் காணக் கிடைக்கின்றன.

குழந்தைகள் இல்லாத வீடு, தேவதைகள் இல்லாத சொர்க்கம். என்னதான் இலட்சம் ரூபாய்க்கு வண்ண விளக்கு வாங்கி வைத்தாலும் அதில் மின்சாரம் பாய்ந்தால் தான் அழகாய் ஒளிரும். மழலையில் குரல் ஒலிக்காத வீடுகள் ஏகாந்தத்தின் துயரம். அதனால் தான் நம் மூலமாய் குழந்தை பிறக்கவில்லையேல், தத்து எடுத்து தனதாக்கிக் கொள்ளும் அற்புதமான பெற்றோர்கள் நம்மிடையே இருக்கின்றனர்.

குழந்தைகளை வரவேற்பது ஒன்று, வளர்த்துவது இன்னொன்று. அது ஒரு கலை. முன்பெல்லாம் நிறைய குழந்தைகள் இருந்த வீடுகளில் மூத்த குழந்தைகளே இளைய குழந்தைகளை வளர்த்தின. மூத்த அக்கா, தங்கைகளுக்கும், தம்பிகளுக்கும் இன்னொரு அம்மாவாகிப் போனார்.

ஒரு குழந்தை மட்டும் வீட்டில் இருந்தால் அந்தக் குழந்தை தலைக்கனம் பிடித்ததாக, கர்வம் கொண்டதாக, தன்னலம் நிறைந்ததாக, சமூக பழக்கம் இல்லாததாக இருக்கும் என ஏகப்பட்ட புகார்கள் உண்டு.எல்லாமே பொய். ஒரு குழந்தை எப்படி இருக்கிறது என்பதும், எப்படி இருக்க வேண்டும் என்பதும் பெற்றோரின் கையில் தான் இருக்கிறது. உலகம் வியந்த ஐன்ஸ்டீன், ஐசக் நியூட்டன் ஏன் இந்திரா காந்தி கூட பெற்றோருக்கு ஒற்றைக் குழந்தை தான்.

பொதுவாக ஒரே ஒரு குழந்தை வீட்டில் இருந்தால் பெற்றோரின் முழு கவனிப்பும் அந்தக் குழந்தைக்குக் கிடைத்து விடுகிறது. எப்போதும் கொஞ்சிக் குலாவி, கேட்பதையெல்லாம் கொடுத்து, செல்லத்தின் உச்சியில் அவர்களை உட்கார வைத்து விடுகின்றனர். அது தவறு.
குழந்தைக்கு அனுமதியையும், மறுப்பையும் சரி விகிதத்தில் கொடுக்க வேண்டும். வெற்றியையும், தோல்வியையும் சின்ன வயதிலேயே பழக்க வேண்டும். அரவணைப்பையும், கண்டிப்பையும் மழலைப் பருவத்திலேயே அறிமுகப்படுத்த வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் வாழ்க்கையின் இரண்டு பக்கங்களையும் பெற்றோரே அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும்.

அது தவறும் போது தான் சிக்கல் ஆரம்பமாகிறது. குழந்தைகள் பள்ளிக்கூடம் போகும் போது நினைப்பதெல்லாம் கிடைப்பதில்லை. எல்லோரும் அரவணைப்பதில்லை. வெற்றிகள் மட்டுமே வசமாவதில்லை. அங்கே அவர்கள் வாழ்வின் எதார்த்தத்தை அச்சத்தோடு எதிர்கொள்ள வேண்டிய சூழல் வருகிறது. குழந்தைகளுக்கு பெற்றோரே அவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தால் அவை மிக எளிதாக அத்தகைய சூழல்களை எதிர்கொண்டு விடுகின்றன.

ஒரு சின்ன உதாரணமாக, வீட்டில் இரண்டு குழந்தைகள் இருந்தால் ஒரு விஷயத்துக்காக குழந்தை காத்திருக்க வேண்டிய சூழல் உருவாகும். அக்காக்கு இப்போ, உனக்கு அடுத்த மாசம். அல்லது, நீ எக்ஸாம் முடி உனக்கு வாங்கித் தரேன். என காத்திருப்பு சூழல்கள் இயல்பாகவே உருவாக்கப்படும். அது குழந்தையை பக்குவப்படுத்தும். ஒற்றைக் குழந்தையெனினும் காத்திருக்கும் குணாதிசயத்தைப் பெற்றோரே கற்றுக் கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு "எமோஷனல் சூயிசைட்" அதிகம். காரணம் அளவுக்கு அதிகமாய் பிள்ளைகளைக் கொஞ்சி வளர்த்தும் பெற்றோர். அவர்களுக்கு தோல்வி என்ன என்பதை அறிமுகம் செய்து வைக்காத பெற்றோர். வாழ்க்கை மேடு பள்ளங்களின் கூட்டுத் தொகை என்பதைக் கற்றுக் கொடுக்காத பெற்றோர்.

இன்றைக்கு மண முறிவுகள் வெகு சகஜம். ஏன் ? வாழ்க்கையின் எதார்த்தத்தையும், நடைமுறை சிக்கல்களையும் அறிந்திராதவர்களே மணமகளாகவோ, மணமகனாகவோ வருகின்றனர். அவர்களுக்கு புதிய உறவும், பொறுப்புணர்ச்சியும் பதற்றத்தையும், மன அழுத்தத்தையும் தருகிறது.
சின்ன வயதிலேயே குழந்தைகளுக்குத் தேவையான சுதந்திரம் கொடுத்து, அவர்களை சுயமாய்ச் செயல்பட வைத்தால் குழந்தைகள் பக்குவமடைந்து விடுவார்கள். சின்ன வயதில் பெற்றோர் பிள்ளைகளுக்கு பொறுப்புகளைக் கொடுத்தால் அது அவர்களுக்குப் பழகி விடுகிறது.

"பொத்திப் பொத்தி வெச்சேன், இப்படி பண்ணிட்டாளே" என புலம்பும் பெற்றோர் புரிந்து கொள்வதில்லை, அவர்கள் செய்த தப்பே பொத்திப் பொத்தி வெச்சது தான் என்பதை. பிள்ளைகளுக்கு அளவுக்கு அதிகமான பாதுகாப்புக் கவசங்கள் போடுவது தவறு. ஒரே ஒரு குழந்தையெனில் இந்த சிக்கல் அதிகமாக வந்து விடுகிறது. அத்தகைய குழந்தைகள் திருமணத்தின் போது சட்டென அத்தனை கட்டுகளும் அவிழும் போது குழம்பி விடுகின்றனர்.



தொடர்ச்சி 17 ம் பக்கம்








வீட்டில் ஒற்றைக் குழந்தையா ?

ஒற்றைக் குழந்தையாய் வளரும் குழந்தைகள் பெரும்பாலும் பேசிக் கொண்டே இருப்பார்கள். கேட்கும் திறன் குறைவாக இருக்கும். அதை பெற்றோர் கவனத்தில் கொண்டு அவர்களிடம் அந்த திறமையை வளர்க்க முயற்சி எடுக்க வேண்டும். குழந்தையுடன் அன்பாகவும், நேசத்தோடும் இருக்க வேண்டும். அதே நேரம், அவர்களுக்குத் தேவையான கண்டிப்பை வழங்கத் தவறவே கூடாது.

ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால் வீட்டிலேயே பிள்ளைகள் பகிர்தல், மற்றும் இணைந்து வாழ்தலில் பழகி விடும். ஒரே குழந்தையெனில் அவற்றையெல்லாம் பெற்றோர் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அருகிலுள்ள குழந்தைகள், ஆலய குழுக்கள், சமூக குழுக்கள் போன்றவற்றில் இணைத்து விடலாம்.

கலைகளில் குழந்தையை நிச்சயம் சேர்த்து விடுங்கள். அதிலும் கிரிக்கெட், டென்னிஸ், டான்ஸ் போன்ற பலரோடு இணைந்து செய்யும் கலைகளில் ஈடுபடுத்துவது அதிக பயனளிக்கும். குழந்தையின் தனிமையை அது குறைக்கும். அது போல பெற்றோரும் அதிக நேரம் குழந்தையோடு செலவிட்டு தனிமையை இனிமையாக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் ஸ்மார்ட் போன், கணினி என டிஜிடலுக்குள் நுழைந்து நிஜ ஆனந்தத்தை இழந்து விடுவார்கள்.







"நீ எனக்கு ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு", "நீ தான் என் உலகம்" எனும் அதீத மனநிலையையோ, "இன்னொரு குழந்தை எனக்கு இல்லாம போச்சே" எனும் இயலாமை மனநிலையையோ குழந்தையிடம் எந்தக் காரணம் கொண்டும் நுழைக்கவே நுழைக்காதீர்கள். அது அவர்களை மன கிளர்ச்சிக்கோ, மன இறுக்கத்துக்கோ இட்டுச் செல்லும். இரண்டுமே நல்லதல்ல.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், எந்த ஒரு செயலை உங்கள் குழந்தைக்காகச் செய்ய நினைத்தாலும் ஒரு கேள்வியைக் கேளுங்கள். "எனக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்திருந்தாலும் இந்த நிலையைத் தான் எடுத்திருப்பேனா ?



குழந்தைகள் குயவன் கை மண் போல. அதை எப்படி வனைவது என்பதை பெற்றோர் தான் முடிவு செய்ய வேண்டும். பெற்றோர் வனையத் தவறினால் யாராரோ வந்து தப்புத் தப்பாய் வனைந்து விடும் அபாயம் உண்டு.







அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்



# தாஜ்மகாலில் ஒரு நிலா

**குரு அரவிந்தன்**

அவள் என்னைக் கடந்து சென்ற போது மெல்லிய சுகந்தம் காற்றில் கலந்து என்னைத் தழுவிச் சென்றது. என்னைத் தழுவிச் சென்றதா அல்லது எனக்குள் கலந்து விட்டதா தெரியவில்லை. அந்தக் கணமே அவளுக்கும் அந்த சுகந்தத்திற்குமான தொடர்பு எனக்குள் ஏற்பட்டு விட்டிருந்தது. சண்கிளாஸ் அணிந்திருந்த அவள் தாயாரின் தோளை ஒற்றைக்கையால் பற்றியபடி திடீரென கூட்டத்தில் மறைந்து போயிருந்தாள். அவள் நினைவு வரும்போதெல்லாம், அந்த சுகந்தம் நாசியில்கலந்து மூளைக்குள் நுழைந்து எனக்கு ஏதேதோ இன்ப உணர்வுகளை ஏற்படுத்தியது. அவளை மீண்டும் காணமுடியமா என்ற ஏக்கமும் எனக்குள் எழுந்தது.

என்னிடம் நல்ல விலை உயர்ந்த கமெரா இருந்தது. நான் தாஜ்மகாலை சூம் பண்ணி படம் எடுத்துக் கொண்டிருந்தேன். அந்த சுகந்தம் மீண்டும் காற்றில் கலந்து என்னைத் தொட்டது.

'எக்ஸ்யூஸ் மீ' என்ற ஆண்குரல் பின்பக்கமாகக் கேட்டது. வியூபைண்டரில் இருந்த பார்வையை குரல் வந்த திசை நோக்கித் திருப்பினேன். என் நினைவில் யாரைச் சுமந்தேனோ, அவளேதான் பின்னால் நின்றாள். அவளுக்கருகே பெற்றோராக இருக்கலாம், தாயும் தந்தையுமாக இருவர் நின்று கொண்டிருந்தார்கள். இப்பொழுதும் தாயின் தோளைப் பற்றியபடி அவள் நின்றுகொண்டிருந்தாள்.

ஆகா, எத்தனை அழகு என்று அவள் முகத்தைப் பார்த்து வியந்த எனக்கு, அப்போது தான் தெரிந்தது அழகைக் கொடுத்த இறைவன் அவளது கண்ணைப் பறித்து விட்டானே என்று. காரணம், அவளது கண்ணைக் கறுப்புத் துணியால் கட்டியிருந்தார்கள். அதை மறைக்க, அதற்கு மேல்தான் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தாள். அதற்கும் இறைவனைத்தான் திட்டித் தீர்த்தேன். வேறுயாரைத் திட்டமுடியம். ஏதாவது இப்படியான குறைகள் உள்ளவர்களைப் பார்க்கும் போதெல்லாம் ஆண்டவன் மேல்தான் எனக்குக் கோபம் வருகின்றது. இந்த அழகுத் தேவதையால் இயற்கை அழகைப் பார்க்க முடியாமல் போய்விட்டதே என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாமல் என் மனசு தவித்தது.

இங்கே தாஜ்மகாலைப் பார்க்க வருமுன், மும்தாஜ் மகாலைப் பற்றி ஏற்கனவே அறிந்து வைத்திருந்தேன். சில சமயங்களில் சிறுவயதில் படித்த அனார்க்கலியின் கதையும் நினைவில் வரும். சாஜகான், மும்தாஜ் மகாலின் நினைவாகக் கட்டிய மாளிகைதான் தாஜ்மகால் என்று கேள்விப்பட்ட போது அவர்களை இளம் காதலர்கள் என்றுதான் முதலில் எண்ணியிருந்தேன். ஆனால் அவர்களின் வரலாற்றை அறிந்த போதுதான் பதின்னான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தவள் மும்தாஜ் மகால் என்பதை அறிந்தேன். அப்போதுதான் காதலுக்கு வயதில்லை என்ற உண்மையும் எனக்குப் புரியலாயிற்று. எல்லோருக்கும் மும்தாஜ் மகாலுக்காகக் கட்டிய காதல் சமாதி தான் நினைவில் நிற்கும். ஆனாலும் தாஜ்மகாலை நேரடியாகப் பார்த்த போது எனக்குள் அது ஒரு சமாதி என்ற எண்ணமே ஏற்படவில்லை. கடந்தகால சரித்திரத்தை தாஜ்மகால் நினைவூட்டினாலும் காலம் விரைவாக ஓடிவிட்டதில் அது காதலர்களுக்கான ஒரு அழகு மாளிகையாகவே எனக்குத் தெரிந்தது.

காலையில் இருந்து அங்கே தான் இருந்தேன். அதிகாலையில் பார்த்தபோது பிங் நிறமாகத் தாஜ்மகால் காட்சி தந்தது. மதிய நேரம் உணவருந்திவிட்டு வந்தபோது, பால்போல வெள்ளை நிறமாகக் காட்சி தந்தது. நிலாக்காலத்தில் இரவிலே தங்க நிறத்தில் காட்சி தருமாம். புரியவில்லை, இந்த நிற மாற்றங்கள் எல்லாம் பெண்களின் மனவோட்டத்தை காட்டுவதற்காகவா?

'ஸார் எங்களை ஒரு படம் எடுக்க முடியுமா?' என்று தகப்பன் கேட்டார். சரி என்று சொல்லிப் படத்தை எடுத்தேன். படம் எடுக்கும்போது பார்வையற்ற அந்தப் பெண் மீது இரக்கம் ஏற்பட்டது. 'கடவுளே, யார் யாருக்கோ எல்லாம் எதையெதையோ கொடுக்கும் நீ இந்தப் பாவப்பட்ட பெண்ணுக்குப் பார்வையைக் கொடுக்கக் கூடாதா?' மனதார அவளுக்காக வேண்டிக் கொண்டேன்.

'ஸார் இவ்யூ டோன்ட் மைன்ட் இன்னும் ஒரு படம் எடுப்பீங்களா?'
உதவி என்று கேட்டவங்களுக்கு உதவி செய்யப் போனால், விடமாட்டாங்கபோல என்று நினைத்துக் கொண்டு 'சரி எடுக்கிறேன்' என்றேன்.
ஒரு நிமிஷம் என்று சொல்லிவிட்டுப் பெண் அணிந்திருந்த கண்ணாடியை அகற்றி கண்கட்டைக் கழற்றிவிட்டார் தந்தை.

அவளது இமைகள் பட்டாம் பூச்சியாய் படபடக்க, விழிகள் ஆச்சரியமாய் தாஜ்மகாலைப் பார்க்க, கமெராவோ கிளிக் கிளிக் என்று படம் பிடித்துக் கொண்டது.
எனக்குள் இன்ப அதிர்ச்சி. இருண்டு போன உலகத்தை இவளால் பார்க்க முடிகிறதா? அப்படி என்றால் இந்தப் பெண்ணுக்குக் கண் தெரியுமா?

வாய் மூடாது வைத்த விழி அசையாது, அவளையே பார்த்துக் கொண்டிருக்க அவள் சட்டென்று சதாரித்துக் கொண்டாள். வெட்கப்பட்டு உதட்டில் மெல்லிய புன்னகையோடு தலை குனிந்தாள். நான் வேடிக்கை பார்த்தேன். அவளால் நம்பமுடியாமல் 'வாவ்' என்றாள். கண்கட்டி கண்ணாமூச்சி விளையாட்டுப்போல, ஒரு கணம் ஏமாந்தது நானாக இருந்தேன். ஆனாலும் அவளது மகிழ்ச்சியில் நானும் கலந்து கொண்டு புன்னகை உதிர்த்தேன். ஆண்டவன் ஏதோ எனது வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தது போல, அவளைப் பார்த்து,

'ஸொறி, உங்களுக்குக் கண் தெரியுமா?' ஆச்சரியத்தோடு கேட்டேன்.
அவள் என்னை ஏறஇறங்கப் பார்த்தாள்.
'கண் தெரியாது என்று யார் சொன்னாங்க?' என்றாள்.
'இல்லை, கண் கட்டியிருந்ததால் நான் அப்படி நினைச்சு உங்களுக்காக ஆண்டவன் கிட்ட வேண்டிக்கிட்டேன்'


'வேண்டிக்கிட்டீங்களா.. எனக்காகவா? என்னவென்று? கேலியாகக் கேட்டாள்.
'உங்களுக்குப் பார்வையைக் கொடுத்திடு என்று'
இதுவரை வேடிக்கையாய் பேசியவள் ஒரு கணம் நிறுத்தி என்னை உற்றுப் பார்த்தாள்.
'உண்மையாகவே வேண்டிக்கிட்டீங்களா?'
'ஆமா..!' என்றேன்.
'தாங்ஸ்' என்றாள்
'எதுக்கு?'
'யாரென்றே தெரியாத எனக்காக வேண்டிக் கொண்டீங்களே அதுக்குதான்' என்றாள்.
அவள்மேல் தப்பில்லை, அவளுக்கு கண் தெரியாது என்று நானாகவே எடுத்த முடிவுதானே,

தொடர்ச்சி 20 ம் பக்கம்






# யாவகர் பயணிகளாக வந்து நாட்டின் ஒரு பகுதியையாவது ஆண்டார்கள்!!!



## யாவகர் இருந்த சேரியே சாவகச்சேரியாகும்

**நோர்வே நக்கீரா**




சாவகர் இந்தச் சொல்லைப் பலர் கேள்விப் பட்டிருக்க மாட்டார்கள். இவர்கள் இலங்கையின் வடபகுதியை ஆண்டவர்கள் என்று கருதப்படுகிறது இவர்கள் அடிப்படையில் யாவா நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்பட்டாலும் அதற்கான சரியான காரணங்களும் கருத்துக்களும் இன்னமும் முன்வைக் கப்படவில்லை. யாவாவைச் சேர்ந்தவர்கள் யாகவர் என்பது தமிழில் சாவகர் என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

கி.பி 1247ல் சந்திரபானு என்ற சாவகன் தெற்கு நோக்கி சிங்கள அரசின் மேல் படை எடுத்ததாகவும் அப்போ அங்கே ஆண்டு கொண்டிருந்தவன் இரண்டாம் பராக்கிரமபாகு என்றும் கருதப்படுகிறது. இந்த சாவகனான சந்திரபானு பராக்கிரமபாகுவினால் விரட்டியடிக்கப்பட்ட போது அவன் வடக்கே வந்து ஆட்சியைக் கைப்பற்றியிருக்கலாம் என்று ஒரு சிங்கள ஆய்வாளர் கூறியிருந்தாலும் அது வெறும் ஊகமாகவே உள்ளது. அதற்கான ஆதாரத்தையோ தரவுகளையோ அவர் முன்வைக்கவில்லை.

வடக்கை யாழ்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகளில் ஒருவனான காலிங்க ஆரியச்சக்கரவர்த்திக்குப் பின்னர் அவன் மகன் குலோத் துங்கசிங்கை ஆரியன் அரியாசனம் ஏறினாலும் இக்காலகட்டத்தில் ஒரு சாகவன் ஆண்டதாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. இவனுடன் வந்தவர்கள் குடியேறிய பகுதியே சாவகச்சேரி, சாவகன்சீமா, சாவகன்கோட்டை என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

இந்த சந்திரபானு என்ற சாகவன் பதவியா குருந்தனூர் போன்ற சிங்கள மாவட்டங்களிலிருந்த சிங்களவர்களைத் தன்பக்கம் திரட்டி இரண்டாவது தடவையாக பராக்கிரமபாகுவிற்கு எதிராகப் படை நடத்த முயன்றான் என்பதை சூழவம்சம் கூறுகிறது. இவன் சிங்கள இராட்சியத்திற்கு மேல் படை எடுப்பதற்கு முன்னர் மன்னர் சுந்தரபாண்டியன் சாவகன் சந்திர பானுவை வென்று திறை பெற்றுப்போனான். இது 1258ல் நடந்ததாகக் கருதப்படுகிறது.
சாவகமன்னன் பாண்டியனுக்கு சரியாகத் திறை செலுத்தாது இரண்டாம் பராக்கிரமபாகுபின் மேல் இரண்டாம் தடவையாகப் படையெடுத்துச் சென்றான். பராக்கிரமபாகுவிற்கு உதவுமாறும் சாகவனைத் தண்டிப் பதற்காகவும் பாண்டிய மன்னனான ஜடாவர்மன் வீரபாண்டியன் 1262ல் தன்படையை அனுப்பி சாவகமன்னனின் சிரம்கொய்தான். தன்வெற்றியைப் பொறிக்கும் முகமாக இரட்டை மீன் இலட்சணையை பாண்டியன் திருக்கோணமலையில் பொறித்துச் சொன்றான் என்று வரலாறுகள் கூறுகின்றன. இந்த இலட்சனையை திருகோணமலை கோட்டை வாயிலில் இன்றும் காணலாம்.

இதில் இருந்து நான் சிலவிடயங்களை ஊகித்துக் கொள்ளலாம். சிங்கையாரியர்கள் அடிப்படையில் யாழ்பாணத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். இவர்கள் முழுமையான அரசவம்சத்தைச் சேர்ந்தவர்களாக எங்கும் கருதப்படவில்லை. இவர்கள் சத்திரியர்களுடன் இணைந்த பிராமணர்களாகவும். வெறும் சத்திரியர்களாகவுமே காண முடிகிறது.
சிங்கை ஆயரியர்கள் என்று தம்மை அழைத்துக் கொண்டாலும் அவர்களுக்கும் ஆரியர்களுக்கும் எந்தத் தொடர்பும் இருந்ததில்லை.



பரராசசேகரன் செகராசசேகரன் சங்கிலியன் போன்றோர் சிங்கையாரிய வம்சாவளி என்றே கருதப்படுகிறது உ.ம் யாழ்பாண வைபவமாலை.

பராக்கிரமபாகு விஜயபாகு கஜ பாகு சிங்கபாகு போன்ற அரசர்கள் சிங்களவர்களாகக் கருதப் பட்டாலும் அவர்களின் அனைத்து தொடர்புகளும் சிகிரியா வரலாறும் பாண்டியர் சேரர்களுடன் தொடர்புள்ளதாகவே உள்ளது. இந்த "பாகு" என்றபெயர் அடிப்படையில் இலங்கைக்கு உரியது அல்ல. இது தொண்டை நாடு கலிங்கத்தைச் சேர்ந்தது.

இந்தச் சந்திரபானு என்பவன் தாயிலாந்து எனும் தாமிரலிங்கநாட்டை ஆட்சி செய்தவனாகக் கருதப்படுகிறான்.
மகாவம்சத்தின் இன்னொரு குறிப்பின்படி இவன் தாமிரலிங்க நாட்டை ஆண்ட தமிழ்கொள்ளையன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பெயரில் அவன் தமிழனாகவே காணமுடிகிறது.

இவன் கட்டிய கோவில் இன்றும் தாயிலாந்தில் உள்ளது.

இந்தச் சாவகர்கள் இலங்கையில் பலகாலம் ஆட்சி கொள்ளவில்லை எனினும் பயணிகளாக வந்து நாட்டின் ஒரு சிறுபகுதியையாவது கைப்பற்றி ஆண்டார்கள் என்பது சாமர்த்தியமே.

யாவகர் இருந்த சேரியே சாவகச்சேரியாகும்.


RKL IMMO.de IMMOBILIEN & BAUFINANZIERUNG



Sinnadurai.Kiritharan

Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan|Tel. 05723-914519| www.rklimmo.de|info@rklimmo.de

Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை

**நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!**
மேலதிகவிபரங்களிட்கு **Tel. 05723-914519** or www.rklimmo.de
or www.lankasri.com

**Akchaya Digital Photography& Decoration**

*Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration*

**உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும் ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.**

Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474







18ம் பக்க தொடர்ச்சி....



அதனாலே நானே என்னை சமாதானப் படுத்திக் கொண்டேன். யாரோ சொன்னார்கள் என்பதற்றாக, 'சேப்பிறைஸாய்' தாஜ்மகாலைப் பார்க்க வேண்டும் என்பதால்தான் அப்படிக் கண்ணைக்கட்டிக் கொண்டு வந்தாளாம்.

அப்புறம் அவள் தனது படங்களை அனுப்பிவிடும்படி தனது முகவரியைக் கொடுத்தாள். செல்பேசி இலக்கத்தையும் மாற்றிக் கொண்டோம். பிரிய மனமில்லாது பிரிந்தோம். காலம் விரைவாக ஓடியது. எங்கள் உறவு செல்பேசி மூலமும், முகநூல் மூலமும் நெருக்கமாகி மீண்டும் சந்திக்க விரும்பினோம். அவள்தான் சந்திக்கும் இடமாக தாஜ்மகாலைத் தெரிவு செய்தாள். ஏற்கனவே இருவரும் பார்த்த இடமாக இருந்தாலும் எங்களை ஒன்று சேர்த்து வைத்த இடம் என்பதால் இருவரும் ஆவலோடு அங்கே சென்றோம். நாள் முழுவதும் அங்கேயே செலவிட்டோம். தாஜ்மகாலின் பிரமாண்டமான யன்னலுக்குக் கீழே உள்ள படியில் உட்கார்ந்திருந்து எதிர் காலம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். ஒரு சந்தர்பத்தில் அவள்தான் கேட்டாள்,
'என்னைத் திருமணம் செய்வீங்களா?'

நான் நினைத்ததையே அவளும் கேட்டதில் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. 'நான் நினைப்பதும் நீ நினைப்பதும் ஒன்றானதில், நான் நீயாகவும் நீ நானாகவும் மாறி, நாமாகிவிட்டோம்!'
'நானும் அதைத்தான் கேட்க நினைத்தேன், நீ முந்திவிட்டாய்!' என்றேன்.
'அப்போ, சம்மதமா..?' என்றாள்.
'தாலி கட்டவா?' என்றேன்.

திருமணம் என்பது பாதுகாப்பான ஒரு பந்தம். அவ்வளவுதான், ஆனால் அதைவிட முக்கியமானது இருவரின் மனமும் ஒன்றுபடுவது. அதன் மூலம் ஒருவருக் கொருவரான புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வது. காதலர்களுக்கிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தால் அதுவே அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய வழிவகுக்கும். எங்கே எப்படி எத்தனை பேருக்கு முன்னால் திருமணம் செய்து கொள்கிறோம் என்பதெல்லாம் முக்கியமல்ல, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு திருமணம் செய்கிறோமா என்பதில்தான் எதிர்கால வாழ்க்கையின் சுபீட்சம் தங்கி இருக்கின்றது.

சாஜகானும் மும்தாஜ் மகாலும் உண்மையிலே ஒருவரை ஒருவர் காதலித்திருந்தால், சமாதியாகி இருக்கும் அவர்கள் எங்கள் காதலையும் வாழ்த்துவார்கள் என்பதில் எங்களுக்குச் சந்தேகமேயில்லை. எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை, 'கட்டுங்கள் தாலியை' என்பதுபோல, கழுத்தை அழகாக மெல்லச் சரித்தாள்.

ஒரு கணம் தயங்கிய நான் காதலைச் சொல்ல, மஞ்சள் கயிறாய் நினைத்துக் கொண்டு, எனது செயினைக் கழற்றி அவள் கழுத்தில் அணிந்து விட்டேன். கைகளில் கண்ணீர் துளி ஒன்று விழுந்து தெறித்தது. ஏனோ சுடவில்லை, ஜில் என்று குளிர்ந்தது. இருவர் மனசையும் குளிர வைத்த ஆனந்தக் கண்ணீர் அல்லவா அது. கைகளைப் பற்றியபடி வாசல் வரை நடந்து வந்தோமா இல்லை மிதந்து வந்தோமா தெரியவில்லை. வாசலில் நின்று திரும்பிப் பார்த்து தாஜ்மகாலின் அழகை ரசித்தோம். காதலுக்குக் கண் இல்லை என்பார்கள், எல்லோருக்கும் கல்லறையாகத் தெரிந்த தாஜ்மகால் எங்கள் கண்களுக்கு மட்டும் மணவறையாகத் தெரிந்தது.







# ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிடம்

**உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்**

**ஆதிவாசி பண்டித் கே.சுவாமி**





உறவுச்சிக்கல்கள் -
தவறாகப் புரிந்துகொள்ளல்
- நிதிச் சிக்கல்கள்
மன அழுத்தம் - காதல்பிரச்சினைகள்
- வேலை தேடுதல்
- குடும்பவாதங்கள்
குழந்தைகள் இல்லாத தம்பதிகள்
- வாகனப் பொருத்தம்

தலை முறை தலைமுறையாக ஜோதிடக் கலையை பயின்றுவரும் ஜோதிடவித்துவான்
பேசும் மொழி தமிழ் கிந்தி மற்றும் ஆங்கிலம்.

Tel: 015 21 46 02 865 / 0151 63 50 9059

கிழமை 7 நாட்களும் 09.00 முதல் 20.00 மணிவரை வரலாம்.


Make an Appointment
**Prapa Super Market**
**Hindenburg Straß 212**
**41061 Mönchengladbach**


## சிற்றூர் கறுப்பி

அழகு அவளைப் பொறுத்தது அல்ல
பார்ப்பவன் கண்களைப் பொறுத்தது
எட்டாம் வகுப்பில் வந்து சேர்ந்து
எல்லோராலும் வெறுக்கப்பட்ட
பட்டிக்காட்டு சிற்றூர் கறுப்பி
எல்லாப் பாடத்திலும் முதலாம்
இடத்தைப் பிடித்தபோது
எனக்குத் தேவதையாகத்
தெரிந்தாளே...



அமுதநதி சுதர்சன்.







உங்கள் ஆசையை
நிறைவு செய்ய
இதுவே தருணம்
விரையுங்கள்

15 வருட அனுபவம் மிக்க சேவையாளர்

Büro für Deutsche Vermögensberatung
Ram Mohan
Westwall 117
47798 Krefeld

Ram.Mohan@dvag.de
www.dvag.de/Ram.Mohan

## கதை சொல்ல ஓர் கதை...




### நமக்கோ ஒரே ஒரு கம்யூட்டர் மட்டுமே சொந்தம்

பணக்கார தந்தை தனது மகனுக்கு பணத்தின் அருமையை உணர வைப்பதற்கும், ஏழைகளின் வாழ்க்கையை நேரில் காண்பிப்பதற்கும் அவனை கூட்டிக்கொண்டு ஒரு கிராமத்திற்கு சென்றார். ஏழைகளின் வாழ்க்கை நிலையை பார் என்று ஒருநாள் முழுவதும் அந்தக் கிராமத்தை சுற்றிக்காட்டினார். இரவில் அவனிடம் ”இந்த ஏழைகளின் வாழ்வில் இருந்து நீ என்ன கற்றுக்கொண்டாய்” என கேள்வி எழுப்பினார்.





அதற்கு மகன், அப்பா நாம் வீட்டில் ஒரே ஒரு நாய் வளர்க்கிறோம். இவர்கள் தமது வீட்டில் பத்து, பதினைந்து பசுமாடுகள் வளர்க்கிறார்கள்.

நாம் நமது வீட்டில் உள்ள குளியளறையில் குளிக்கிறோம். இவர்கள் பெரிய ஏரி, குளங்களில் குளிக்கிறார்கள்.

நமக்கு நமது வீட்டளவு மட்டுமே இடம் சொந்தமாக உள்ளது. இவர்களுக்கு வீடும் பெரிய பெரிய வயல்களும் சொந்தமாக வைத்துள்ளனர்.

நாம் எங்கோ எப்போதோ பறித்து பேக்கிங் செய்து கொண்டுவரப்பட்ட காய்கறிகளை, உணவு வகைகளை சாப்பிடுகிறோம். இவர்களோ தமது வயலில் விளைந்த காய்கரிகளை அன்றாடம் பறித்து உண்ணுகிறார்கள்.

வாழ்க்கையில் மகிழ்ச்சியை வாங்க நம்மிடம் பணம் உள்ளது. ஆனால் இவர்களுக்கோ மகிழ்ச்சியே வாழ்க்கையாக உள்ளது.

உணர்வுகள் உணர்ச்சிகள் கொண்ட இரத்த சொந்த பந்தங்கள் இவர்களுக்கு நிறைய உண்டு. ஆனால் நமக்கோ ஒரே ஒரு கம்யூட்டர் மட்டுமே சொந்தமாக உள்ளது.
நன்றி அப்பா. நாம் எந்த அளவுக்கு, எப்படிப்பட்ட ஏழைகள் என்று உணர

## எல்லாத் திருக்கோயில்களும் இன்று இணைந்து செய்யவேண்டிய அரும் பணி!

(முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்)




2004 ஆண்டு கிளிநொச்சியில் இடம்பெற்ற அறக்கொடை நிகழ்வில்

ஈழத்துச் சமயவரலாற்றில் காலம் நமக்கு ஒரு கைவிளக்கைத் தந்துள்ளது. தெல்லிப்பளை துர்க்கைஅம்மன் கோயில் இன்று உலகம் வழிபடும் ஒரு திருக்கோயில். அக்கோயிலில் தொண்டராகி வாழ்ந்த அன்னை சிவத்தமிழ்ச் செல்வியை நினைத்து வாழும் பேறு பெற்றவர் நாங்கள். பெரியபுராணம் என்னும் பேரிலக்கியம் பாடிவைத்துள்ள பெண்ணடியார்களை நாம் நேரில் காண வில்லை.
ஆனால் நம்மோடு வாழ்ந்த சிவத்தமிழ்ச் செல்வியைக் காணும்போதெல்லாம் அவர்கள் நமது நினைவுத் திரையிலே வந்துநின்றார்கள். அவருடைய எண்பதாவது அகவை விழா மறக்கமுடியாத ஒரு மைல்கல். மனம் மகிழ ஒரு பணிசெய்த மனநிறைவு. பொன்மனச் செல்வியான அம்மாவுக்கு ஒரு நூலை எழுதிப் பிறந்தநாள் நினைவுப் பரிசாக வழங்கிய அந்த வேளை. அதுவே மன இருளைப் போக்கும் அகல்விளக்கைப் பெற்ற அற்புதமான வேளை.


பெண்ணின் குணநலன்களைப் பேணி வாழ அம்மா ஓர் எடுத்துக் காட்டாக விளங்கினார். நிறைவாழ்வு தேடிய பெண் குழந்தை களுக்கு நல்லதொரு நிழல்தரு மரமாகிப் பணிசெய்தார். உலகம் எல்லாம் வாழும் மெய்யடியாரின் கொடை பெற்று தாயாகிக் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை ஏற்றார். 'துர்க்காபுரம் மகளிர் இல்லம்' கோயிற் பணிகளில் ஒரு இன்றியமையாத கொடைப்பணியாக இன்றுவரை நடக்கிறது. துர்க்கை அன்னையின் குழந்தைகளாக அங்கு அக் குழந்தைகள் வளர்கிறார்கள். தெய்வக் குழந்தைகளாக வலம்வருகிறார்கள். தமிழர் மொழியையும் பண்பாட்டையும் நாளைய தலைமுறைக்குப் பயிற்றும் தாய்மார்களாக உருவாகி வருகிறார்கள். அன்னையின் இந்தப்பணி எல்லாத் திருக்கோயில்களும் இன்று இணைந்து செய்யவேண்டிய அரும் பணி. புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர் ஆற்றமுடிந்த ஓர் ஆலயப் பணி. அறப் பணி. துன்பமெனும் இருள் சூழும் வேளைகளில் இப்பணி அகல் விளக்காய் நின்று ஆற்றுப் படுத்தும். அந்த விளக்கே நமக்குக் காலம் தந்த கைவிளக்கு.

இந்த ஆண்டு அன்னை பிறந்து 91 வது அகவை காணும்வேளை 07.01.2016 சிவத்தமிழ்ச் செல்வியை இங்கு இல்லை என்றாலும் அவரை நினைக்கும்போது அவருடைய முத்து விழா நடந்த நாள் மனத்திரையில் ஓடிவந்து நிற்கிறது. அன்னையின் அருமையை அறிந்தவர்கள் அவருடைய பெருமையைப் பின்னவர் அறியப் பல உரைகள் ஆற்றினர். அத்துடன் அன்னையின் வாழ்வும் சைவப் பணியும் உலகம் அறிய வேண்டும் என வெற்றிமணி சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் சிவகுமாரன் ஒரு சிறப்பிதழை வெளியிட்டு அம்மாவுக்கு அளித்தார். வெற்றிமணி இதழ் யாழ்ப்பாணத்தில் அவர் தந்தையால் தொடங்கப் பெற்றது. தந்தையாரின் மறைவின் பின்னர் மகன் புலம்பெயர்ந்து ஜேர்மன் நாட்டிலே வாழ்ந்தபோதும் வெற்றிமணி இதழ் தொடரப் பணியாற்றுவது அன்னை சிவத்தமிழ்ச் செல்விக்கு அளவில்லாத மகிழ்ச்சி தந்ததை அவர் முகநகை காட்டிநின்றது இன்றும் நினைவில் பசுமையாக உள்ளது.

நமக்கு வழிகாட்டியாய் வாழ்ந்தவர்களை உலகம் அறிய ஊடகப் பணியே வழிசெய்யும். வெற்றிமணியின் தமிழ்ஒலிப்பில் அம்மாவை ஆண்டுதோறும் புலம்பெயர் மக்களும் நினைந்து வாழ வாய்ப்புண்டு. குறிப்பாகத் தமிழர் இளைய தலைமுறையும் அன்னை என்னும் காலம் தந்த கைவிளக்கை உள்ளத்தில் சுமந்து வாழ்வர் என்பதில் ஐயமில்லை.



# ஹிட்லரைக் கிண்டலடிக்கும் ஒரு பீப்கூட இல்லாத பாட்டு!





பெர்லின்: இங்கிலாந்து நாட்டில் ஒரு பாடல் உண்டு. அது ஹிட்லரைக் கிண்டலடிக்கும் பாட்டு.. அந்தப் பாடல் தற்போது உண்மையாகி விட்டது.

இந்தப்பாடல் கிட்லரைப் பற்றியது என்றாலும், பச்சையாக எந்த பீப்பும், இன்றி வெளியாகி, இன்றுவரை பாடப்படும் ஒரு பாடல். இது கிட்லரைக் குறித்தாலும், 'ஒட்டுமொத்த ஆண்வர்க்கத்தையும் இழிவு படுத்துவதாக உள்ளது" என்று எந்த ஆண்மகனும் போர் தொடுக்கவில்லை. அந்தப்பாடல் பாடசாகளில் கூட மாணவர்கள் பாடும் அளவிற்கு சுதந்திர கீதமாக ஒலிக்கின்றது.
ஒவ்வொருவர் மனதிலும் எங்கோ ஒரு மூலையில் ஒரு பீப் இருக்கத்தான் செய்கிறது.
'வருகிற ஆத்திரத்திற்கு சொல்வேன் ஆனால் சொல்லவில்லை" என்னும் வாத்தைகளுக்கு இடையில் ஒரு பீப் உள்ளதல்லவா?
இந்தப் பீப் ஆண் பெண் பாகுபாடு இன்று எப்போதோ எங்கேயோ தலைகாட்டும். இங்கே இதோ கிட்டலரைப்பற்றி பீப் கூட இல்லாமல் வெளி வந்த பாடலைப்பாருங்கள். இது இன்றும் இங்கிலாந்தில் பாடும் ஒரு பாட்டாக உள்ளது. இப்பாடலை தந்தை மற்றும், தாத்தாமார் மூலம் பிள்ளைகள் தெரிந்து பாடுகின்றனர்.
பாடல்:

*Hitler has only got one ball*
*Göring has two but very small*
*Himmler has something similar*
*And poor old Goebbels has no balls at all.*

இந்தப் பாடல் வரிகள் சரியாவிட்டன என இப்போது செய்திகள் வந்துள்ளன. அவருக்கு ஒரு விதைதான் உள்ளதாம்.


சமீபத்திய ஹிட்லரின் மருத்துவ அறிக்கைகள் குறித்த ஒரு ஆய்விலிருந்து அவருக்கு ஒரே ஒரு விதைதான் (testicle) இருந்தது தெரிய வந்துள்ளது. இந்தக் குறைபாட்டுக்கு உசலிவழசஉானைளைஅ என்று பெயராகும். அதாவது வலது பக்கம் விதை இவருக்கு இல்லை. இல்லை என்றால், விதையே இல்லை என்று அர்த்தம் கிடையாது. மாறாக உள்ளிருந்து வெளியே இறங்கவில்லை (undescended) என்று பொருளாகும். இந்த விவரத்தை ஜெர்மனியைச் சேர்ந்த வரலாற்று நிபுணர் ஒருவர் வெளிக் கொணர்ந்துள்ளார். ஹிட்லரின் பல்வேறு மருத்துவ ஆவணங்களைப் பரிசீலித்து இந்த முடிவுக்கு அவர் வந்துள்ளார். நீண்ட காலமாகவே ஹிட்லருக்கு ஒரு விதைதான் இருந்ததாக கூற்றுகள் உண்டு. இதை வைத்துத்தான் இங்கிலாந்தில் கிண்டல் பாட்டும் பல காலமாக இருந்து வருகிறது.

1923ல் சோதனை 1923ம் ஆண்டு ஹிட்லர் கைது செய்யப்பட்ட சமயத்தில் மருத்துவ சோதனை நடந்தது. அப்போது தயாரிக்கப்பட்ட ஆவணத்தில்தான் அவருக்கு விதைப் பையில் ஒரு விதை மட்டுமே இருந்தது தெரிய வந்து அதைப் பதிவு செய்துள்ளனர்.
வேறு பிரச்சினை இல்லை இதுதவிர அவருக்கு உடலில் வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று ஹிட்லரைப் பரிசோதித்த லான்டர்ஸ்பெர்க் சிறையின் மருத்துவ அதிகாரியான (Dr Josef Brinsteiner) டாக்டர் ஜோசப் ஸ்டெய்னர் பிரின் என்பவர் எழுதியுள்ளார். அவரது உயரத்திற்கு எற்ப 78 கிலோ எடையுடையவராக இருந்துள்ளார்..

ஏலத்தில் வந்த மர்மம் இந்த மருத்துவ ஆவணங்கள் எங்கே என்பது தெரியாமல் இருந்த நிலையில், கடந்த 2010ம் ஆண்டு பவேரியாவில் நடந்த ஏலத்தில் இது ஏலம் விடப்பட்டது. ஆனால் பவேரிய அரசு உடனடியாக இதைப் பறிமுதல் செய்து விட்டது. சமீபத்தில்தான் இந்த ஆவணங்களை (Bavarian archive by University of Erlangen history Professor Peter Fleischmann.) எர்லாங்கன் -நூரம்பர்க் பல்கலைக்கழக வரலாற்று ஆய்வுப் பேராசிராயிர் பீட்டர் பிளீச்மேன் விரிவாகப் படித்து ஆய்வு செய்து விஷயத்தை வெளியில் கூறியுள்ளார்.

இறங்காமல் உள்ளேயே தங்கியதால் வழக்கமாக பிறப்புக்கு முன்பாக ஆண்களின் விதைகள் உடலுக்குள்ளேதான் இருக்கும். பிறக்கும்போது விதைகள் இரண்டும் வெளியே இறங்கி விதைப் பையோடு ஆணுறுப்புக்குப் பின்புறமாக வந்து விடும். சிலருக்கு வலது புற விதை மட்டும் இறங்காமல் போகும்போது இந்தக் குறைபாடு ஏற்படுகிறது.

குண்டு பட்டு சேதமாகவில்லை முன்பு ஹிட்லரின் ஒரு பக்க விதை, துப்பாக்கிக் குண்டு பட்டு சேதமடைந்து விட்டதாக கூறப்பட்டு வந்தது. முதல் உலகப் போரின்போது இது நடந்ததாகவும் கூறப்பட்டது. ஆனால் அது உண்மை அல்ல என்று இப்போது தெரிய வந்துள்ளது.



# என்னை மறக்கவேண்டாம்

அ.முத்துலிங்கம்.



கடவுள் ஒருநாள் எல்லாப் பூக்களையும் அழைத்து அவற்றுக்குப் பெயர் சூட்டினார். பூக்களுக்கு மகிழ்ச்சி. தங்கள் பெயர்களை தாங்களே சொல்லிப் பார்த்துக்கொண்டன. ஒரேயொரு பூ நிலத்தோடு வளர்ந்த செடியில் ஆடியபடி தன் முறைக்காகக் காத்திருந்தது.

கடவுள்கவனிக்கவில்லை. எல்லாப் பூக்களுக்கும் பெயர் கொடுத்து முடிந்துவிட்டது என்று அவர் நினைத்தார். 'என்னை மறக்கவேண்டாம், என்னை மறக்கவேண்டாம்' என்று கீச்சுக் குரலில் இந்தப் பூ கத்தியது. கடவுள் எட்டிப்பார்த்துவிட்டு 'சரி. உன்பேர்அதுவாகவே இருக்கட்டும்' என்றார்

நான் கனடாவுக்கு வந்த சமயம் புதிதாக ஒரு வீட்டுக்குகுடிபெயர்ந்தேன். நான்தான் புதிது, வீடு பழையது. தோட்டமோ ஆகப்பழையது. செடிகளும் கொடிகளும் பற்றைகளும் தாறுமாறாக வளர்ந்து புதர் மண்டிக் கிடந்தது.

அதை செப்பனிடுவதற்கு ஒரு தோட்டக்காரன் வேண்டுமென்று நண்பர் ஒருவரிடம் சொல்லிவைத்தேன்.
ஒருநாள் காலை ஒருவர் வந்து அழைப்பு மணியை அடித்தார். அவர்தான் நண்பர் அனுப்பிய தோட்டக்காரர். கோமஸ் என்ற 40 வயதுக்காரர் முறுகிய இரண்டு கைகளை சும்மா ஆட்டியபடியே நின்றார். 'எங்கே உங்கள் ஆயுதங்கள்?' என்று கேட்டேன்.
அவர் முதலாம் வகுப்பு பள்ளிச் சிறுவன் முதல் நாள் பள்ளிக்கூடத்தில் புதுச் சாப்பாட்டுப் பெட்டியை திறப்பதுபோல் பெருமையுடன் தன் பக்கெட்டுக்குள் கையை விட்டு ஒரு சுவிஸ் ராணுவ வில்லுக்கத்தியை எடுத்து விரித்துக் காட்டினார்.

ராவணனுடைய பத்து தலைபோல பலவிதமான ஆயுதங்கள் காணப்பட்டன. ஆனால் தோட்ட வேலைக்கு ஒன்றும் உதவாது.

வந்தவருக்கு தோட்டம்பற்றிய ஞானம் போதவில்லை. பூமியில் இருந்து ஏதாவது வளர்ந்தால் அதை வெட்டவேண்டும் என்பதுதான் அவருடைய ஆகக்கூடிய அறிவு பக்கத்து வீட்டில் புல்வெட்டும் கத்தி ஒன்றைக் கடன் வாங்கி அவரிடம்கொடுத்தேன்.
அவர் அதை தடவிப் பார்த்துவிட்டு நல்லாய் பயிற்சி பெற்ற ஒரு வாள்சண்டை வீரர்போல செடிகள் கொடிகள் பற்றைகள் யாவற்றையும் துவம்சம் செய்ய ஆரம்பித்தார். இயற்கையாகவே அவருக்கு அழிப்பதில் ஆர்வம் இருந்தது. இரண்டு மணிநேரம் தொடர்ந்து வேலை செய்தார். திடீரென்று மழை விட்டதுபோல நிறுத்திவிட்டு ஓர் இடத்தை குனிந்து கவனித்தார். பின்னர் பிரார்த்திக்கப் போவதுபோல முழங்காலில் உட்கார்ந்தார். ஐந்து நிமிடம் கழிந்திருக்கும், மனிதர் எழும்பவில்லை. அவருக்கு முன்னால் நிலத்தோடு ஒட்டி வளர்ந்த சிறியசெடி ஒன்று நின்றது. நடுவில் மஞ்சளும் சுற்றிவர நீலமுமாக சின்னச்சின்னப் பூக்கள். இதை மாத்திரம் வெட்ட வேண்டாம்' என்றார்.

அவர் கையிலேதான் வெட்டும் ஆயுதம் இருந்தது. நான் எப்படி வெட்டப் போகிறேன். இது என்ன பூ?' என்றேன். கோமஸ் என் கேள்வியை பொருட்படுத்தவில்லை. அந்தப் பூக்களையே வருடிக்கொண்டிருந்தார். இப்பபாருங்கள், இதன் அழகைப் பாருங்கள். வருடா வருடம் எப்படியோ தன்னை புதுப்பித்துக் கொள்கிறது. நீங்கள் மறந்தாலும் அது உங்களை மறக்காது. அமெரிக்காவில் ஒரு எழுத்தாளர் இதை 'எலியின் காது' என்று வர்ணித்திருக்கிறார். பாருங்கள் சின்னச் சின்னதாக எலியின் காதுபோலவே இருக்கிறது.' சரி பெயரைச் சொல்லுங்கள்.. இது என்ன பூ?' கோமஸ் என் கேள்வியை கேட்டதாகவே காட்டிக்கொள்ளவில்லை. 'என்னுடைய அப்பா மானிடோபா மாநிலத்திடட பிறந்து வளர்ந்தவர். அது ஒரு அலுப்பான இடம். எங்கே பார்த்தாலும் சமதரை. மனிதர்களிலும் பார்க்க மாடுகளின் எண்ணிக்கை அதிகம். பத்து வீடுகள் இருந்தால் அருகே ஒரு குளம் இருக்கும். அங்கேதான் நான் பிறந்தேன். படித்தேன்.

ஆனால் செய்வதற்கு ஒன்றுமே இல்லை. பலவருடங்களுக்கு முன்னரேயே ரொறன்ரோவுக்கு குடிபெயர்ந்துவிட்டேன். என்னுடைய அப்பா என்னை அங்கே திரும்ப வரச்சொல்லி 12 வருடமாக மன்றாடினார், கெஞ்சினார். நான் தட்டிக் கழித்தேன். ஓரளவுக்கு அவரை மறந்தும் விட்டேன். சென்ற வருடம் அவரைப் பார்க்கப் போனேன். அவர் என்னைப் பார்த்து 'நீ யார்?' என்று கேட்டார். அவருக்கு என்னைத் தெரியவில்லை. மறதி வியாதி' என்றார்.

'அப்படியா, ஐயோ பாவம்' என்றேன்.
'நான்தான் பாவி. அவர் கூப்பிட்டபோது போயிருக்கவேண்டும். என்னைப் பெற்றவர் அல்லவா? 'பிறகு என்ன நடந்தது?'



'நான் யார் என்று தெரியாமலே இறந்து போனார். மறதி வியாதி சங்கத்தின் (Alzheimer) சின்னம் இந்தப் பூதான். இதற்குப் பெயர் Forget me not. என்னை மறக்க வேண்டாம். நன்றி: தமிழர்தகவல் கனடா.




### நரகத்திற்கு

சிவநாயகத்திற்கு அவுஸ்திரேலியாவில் பல பிள்ளைகள் இருந்தார்கள். இருப்பினும் கடைசி மகன் தினேசுடன்தான் அவருக்குக் கூடுதல் ஒட்டுதல்.
தந்தையர் தினம் வந்தது. தினேஸ் அவரை சினிமாவுக்கு ஹோட்டலுக்கு கூட்டிச் சென்றான். இரவு உணவு முடிந்து திரும்புகையில் அவருக்கு குளிருடுப்பு, சப்பாத்து, 'சிவாஸ் றீகல்' வாங்கிக் குடுத்தான்.

போத்தல் உள்ளே இறங்க, நாதம் பிறந்தது.

"இதைப் போல ஒவ்வொரு வருஷமும் நீ செய்யாட்டில் நரகத்துக்குத்தான் போவாய்" என்றார் அவர்.

நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு
சுபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள் புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!

வீட்டுக்கடன் 1,6% வட்டிவீதத்திலிருந்து
உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், 60.000€ வரை உடனடி கடன் உதவி!
தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"

தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/13029415
0231/10876361
0152/53961138
Th. Gobinath

## Thushi -Deko

உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்.....

Christal mandapa Set round
Rada Krishna Stage
and Raja Gopuram






Elephant Stage

Thushiyanthan.
Thiruselvam

Tel:02305 - 85945 - 0176 608 108 13

KIRI VIDEO
Cinematic Storytelling
KIRI VIDEO
Professional Filming and Production Service



Follow us on facebook

Home: 02171 948036
Mob: 01786709612
01777076958

## திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
**45127 Essen**
Tel: 0201-652450

உங்கள் தாய் மொழியில்....

## HK Hammacher

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: **0172 57 35 454**

**HK Hammacher**
Schleswiger Str .5
**44145 Dortmund**
**0231 81 55 94**
**0173 56 46 651**

MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!



உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.



Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb³
VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN

rmb³ ist Partner der Gothaer

15 வது ஆண்டு நிறைவான சேவை

## Kaneen Electronics

Internet-sat,
Receiver,Camera-Alam
கருவிகள் மலிவு விலையில்
பெற்று பயனடையுங்கள்

அனைத்து தொலைக்காட்சியில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெறவேண்டுமா!
மற்றும் உங்கள் கலைநிகழ்ச்சிகள் பெருவிழாக்கள் திருவிழாக்கள்
ஒளிபரப்பவேண்டுமா!எம்மை நாடுங்கள்.

Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal

## Nirubagini Magendiran LL.M.

Vereidigte Dolmetscherin und Übersetzerin

Tamil- Deutsch
Deutsch- Tamil

மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்

Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

## Nimal வீடியோ அன் போட்டோ

Professional Video Movie




கலை விழாக்கள்...
உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள்
எதுவானாலும் மனதோடு நிற்க
நமது ஒளிப்பதிவு கைகொடுக்கும்...

சிறந்த முறையில் உங்கள் மங்கல விழாக்களை
வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்க எம்மை
நாடுங்கள்

தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55
Tel:01776794261

உங்கள் புதிய விளம்பரங்களை ஒவ்வொரு மாதமும் 15ம் திகதிக்கு முன் தந்து பிரசுரிப்பதை உறுதிப்படுத்துங்கள்!
vettimaniy@hotmail.com- (49)01575 83 94 325

KSR BRIDAL

## KSR BRIDAL ARTIST

தங்கத்தில் வைரம் பதித்ததுபோல் உங்கள் அழகுக்கு
அழகூட்ட எம்மை நாடுங்கள்.
மணப்பெண் அலங்காரம்.
மாலைகள் மற்றும் பூச்செண்டுகள் அனைத்தும் ஓர் இடத்தில்.

**Make up**......
Bridal, wedding, pupery, party
Christian Make up......
**Threading** Eye brow Face.....
**Facial**..........

**hair style**
**hair straightening**
**hair curls**

E-mail : **kajas.makeup@hotmail.de**
facebook : **KSR Bridal Artist**
**KSR BRidal**
Tel:02323 39 88 470
contact : **015236649870**





# அடுப்படி 15






**முக்கிய குறிப்பு**

இந்த 30 நிமிஷநேரத்தில் பூரணம் தயாரிக்கலாம்.

பூரணம் தயாரிக்க தேவையான பொருட்கள்

சன்னா கடலை 1/2 கப் (மஞ்சள் கடலை)
சக்கரை 1/2 கப்
தேங்கய்ப் பூ 2 மே.க
ஏலக்காய் 5
உப்பு சிறிது

**செய்யும் முறை**

கடலையை ஊற வைத்து, அவித்து தண்ணீர் இல்லாமல் வடித்து ஆறிய பின், கடலையுடன், சக்கரை,தேங்காய்ப் பூ, ஏலக்காய்,உப்பு எல்லா வற்றையும் சேர்த்து கிரைண்டரில் அரைத்து எடுத்து வைக்கவும்.
பின் உருட்டி வைத்தஉருண்டைகளை ஒவ்வொன்றாக எடுத்து பூரிக்குத் தட்டுவது போல் மெல்லியதாகத் தட்டி நடுவில் அளவான பூரணம் வைத்து மோதகம் பிடிப்பது போல் பிடித்து மூடி மறுபடியும் பூரிக்குத் தட்டுவது போல் மெல்லியதாகத் தட்டி ஒரு Pan இல் எண்ணெய் தடவி ஒவ்வொன்றாக சப்பாத்திப் பதம் போல் இரண்டு பக்கமும் வெந்த பின் எடுத்துப் பரிமாறவும். விரும்பினால் போளிக்கு மேல் நெய் விட்டு வெந்ததும் எடுத்துப் பரிமாறலாம்

## பூரண போளி



**தேவையான பொருட்கள்**

மைதா மா 1 கப்
மஞ்சள் பவுடர் 1/4 தே.க
எண்ணெய் 2 மே.க
உப்பு சிறிது

**செய்யும் முறை**

ஒரு பாத்திரத்தில் மைதா மா,மஞ்சள் பவுடர், எண்ணெய், உப்பு எல்லாவற்றையும் சேர்த்து கலந்து பூரி பதத்திற்கு குழைத்து பூரி தட்டும் அளவிற்கு சிறு, சிறு உருண்டைகளாக உருட்டி 30 நிமிஷம் வைக்கவும்.



## எங்கள் இதயம் கலந்த நன்றிகள்

கடந்த 01.11.2015 சுவெற்றா நகரில் நடந்தேறிய எமது மகன் செல்வன் சங்கர்ஷண் ஜெயந்திநாதக்குருக்களின் மிருதங்க அரங்கேற்றம் சிறப்புற நடதேறியமைக்கு உதவிய எங்கள் அன்புக்குரிய யாவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவ்வண்ணம்
**சிவஸ்ரீ சிவ.ஜெயந்திநாதக்குருக்கள்.**
குடும்பத்தினர்
ஸ்ரீகனக துர்க்கா அம்பாள் ஆலயம்
சுவெற்றா-யேர்மனி 11.12.2015

# பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கௌரவிப்பு விழா




புலமைபரிசு பெற்ற பிள்ளைக்கு கமுகம் பிள்ளை பரிசு!




### நம்ம ஊரு அல்டி அல்லவா அன்று இந்தச் சங்கக்கடைகள்!

இன்று ஐரோப்பா எங்கும் அல்டி ஒரு தரமான மலிவான கடை! இதுபோல்தான் அன்று தாயகத்தில் இந்தச் சங்கக்கடைகள் ஊருக்கு ஊர் இருந்தது. பலசரக்குப்பொருட்கள் முதல் சீமெந்து வரை அங்கு கிடைக்கும். சீத்தைதுணி மற்றும் பண்டத்தரிப்பு (இயந்திர நெசவு) லோங்ஸ்துணி இவை எல்லாம் கிடைத்தது ஒரு காலம்.அங்கு வேலை செய்பவர்களுக்கு வேலை அதிகம், சம்பளம் குறைவு. இருந்தாலும் நிரந்தர வருமானம். அதுதான் அன்று மக்களின் விருப்பம். பத்தோ இருபதோ! மாதம் மாதம் நிரந்தரமாக வரவேண்டும். இன்னுமொன்று ஊர்மக்களுக்கு தம்மால் இயன்றதைச் செய்கின்றோம் என்ற ஒரு திருப்தியும் அவர்களிடம் இருந்தது.
மக்கள் சேவையை மனதில் நிறுத்தி லாபம் பெரிது எனக்கொள்ளாமல் அரிசிக்கு வழங்க ஒவ்வொரு குடும்பத்தினரதும், கூப்பன்களை வெட்டியும், அதைப் பின்பு பேப்பரில் ஒட்டியும், அந்த அரிசிச்சாக்கு மூட்டைகளுக்கு நடுவில் இருந்து வேலை செய்வது என்றால் வியர்வை வடிந்து ஓடும். கணனியும் இல்லை எயக்கொண்டிசனும் இல்லை. நினைத்துப்பாருங்கள் இப்படியான காலத்தை எல்லாம் கடந்து ஒருவர் 25 வருடங்கள் சேவை புரிவது என்றால் எவ்வளவு பொறுமையும், சேவை உள்ளமும் ஊர்பற்றும் இருக்கவேண்டும்.

அப்படியானவர்களை கௌரவித்து மகிழ்ந்தது பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம். மேலதிக விபரம் தருகிறார் வெற்றிமணி யாழ் நிருபர் சுபா.
பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பண் கோப் மலர் வெளியீடும், கௌரவிப்பு விழாவும் சனிக்கிழமை 28.11.2015 அன்று சங்கத்தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் சங்க தலைமை அலுவலக மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. பிரதம விருந்தினராக விவசாய, கமநல சேவைகள், காலநடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு கௌரவ பொ. ஐங்கரநேசன் அவர்களும்,சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.பாலச்சந்திரன் அவர்களும், முன்னைய நாள் கூட்டுறவுக் கல்லூரி அதிபர் பொ. சண்முகசுந்தரம் அவர்களும், கூட்டுறவு சபைத் தலைவர் சுந்தரலிங்கம் அவர்களும்,கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சு.கணேசு அவர்களும், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.கைலைநாதன் அவர்களும்,அன்றைய தினம் 25 வருட சேவையை பூர்த்தி செய்த பணியாளர்கள் கௌரவிப்பும், பண் கோப் மலர் வெளியீடு, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு, மாணவர்களுக்கு கமுகம் பிள்ளை கொடுத்து பிள்ளைகள் கௌரவிக்கப்பட்டனர். இது முன்மாதிரியான செழிப்பான கௌரவம்.

VTM MiniMarkt und Kiosk



துரித பணமாற்றுச் சேவை!

Ria MONEY TRANSFER

உலருணவுப் பொருட்கள்
கடலுணவுப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள்

இலங்கை, இந்தியா உட்பட உலகின் எந்தப்பாகளுக்கும் அதிகூடியவீதத்தில் பணப்பரிமாற்றம் செய்ய இன்றே நாடுங்கள் NSB,BOC,HNB போன்ற வங்கிகளில் நேரடியாகவும் மற்றும் அனைத்து வங்கிக்கணக்குகளுக்கும் பணமாற்றம் செய்யலாம்.

Tel 0203/98418781
E.mail :- vtm2012@hotmail.de
Neudorferstr 173
47057 Duisburg inh:Pon.Vijayakumar

Buschhausener Str.16/18
46049 Oberhausen
Tel:0208 468 444 21



# காதோடு காதாக

**கலைக் கதிர் கதிர்.துரைசிங்கம்**

செல்லர்: சைவத் திருமணங்களில் ஆரம்பம் முதல் இறுதிவரை தவில் நாதஸ்வரக்கலைஞர்கள் வாத்திய இசை அல்லது இறுவெட்டில் தவில் நாதஸ்வர இசை அல்லது பாடல்கள் என்று ஒலித்துக்கொண்டே இருக்கும். கன்னிகாதனம் என்று சிவாச்சாரியர் நடத்தும் நிகழ்ச்சியின் போது மட்டும் எல்லா இசையின் ஒலியும் நிறுத்தப்படுகின்றது. இந்தக் கன்னிகா தானத்தின் தாற்பரியமும் முக்கியமும் என்ன?





சோமர்: திருமண வைபவத்திற்கு அழைப்பு, மின்னஞ்சல் முகநூலில் அழைப்பிதழில் என்று பலவிதமாக இடம்பெறுகின்றது. தொலைபேசியில் அழைக்கும் போது திருமணத் தம்பதியகளின் பெயர் பெற்றோரின் பெயர் என்ன என்பதை அழைப்பவரிடம் கேட்பது நாகரிகம் இல்லை என்று கேட்காமல் விட்டுவிடுவோம்.

அழைப்பிதழ் கையில் கிடைத்ததும் தேதியை மட்டும் கவனித்துவிட்டு எங்காவது அழைப்பிதழை வைத்துவிடுவோம்.

மின்னஞ்சல், முகநூல், மூலம் வரும் அழைப்பிதழ்களைப் பாத்துவிட்டு அழித்துவிடுவோம், வைபவத்தன்று காகித உறைக்குள் பெயர் எழுதப்படாத வாழ்த்து மடலுடன் பணம் அல்லது பெயர் இடப்படாத காசோலையை வைத்துக்கொண்டு, திருமணமண்டபம் செல்வோம்.

அருகில் இருப்பரைக்கேட்டு பெயர் நிரப்பலாம் என்றால் அவர்களில் அநேகர் இதேரகம்தான். எங்கள் சிக்கல் நிலையை அறிந்து ஏனைய ஒலிகள் அனைத்தை யும் நிறுத்திவிட்டு சிவாச்சாரியார் மணமகன், மணமகள் இருவரின் பெயரையும் அவர்களின் தந்தைவழி மூன்று தலைமுறைகளையும், மூன்றதரம் ஒலிவாங்கியில் சொல்லி கன்னிகாதானம் செய்வார். இந்த நேரத்தில் மணமகன் மணமகள் பெற்றோர் ஆகியோரின் பெயர்களைக் கிரகித்துக்கேட்டு வாழ்த்துமடல் காசோலை பரிசுப்பொருட்கள் இவற்றில் உள்ள வெற்றிடத்தை நிரப்புவோம்.

செல்லர்: கன்னிகாதானத்தின் காரணமும் காரியமும் மாறுகின்றதோ என்னமோ! ஆனால் நம் சடங்குகள் என்று சங்கடமான நேரத்தில் ஏதோ விதத்தில் கைகொடுக்கத் தவறுவதில்லை

# வெள்ளம் திறந்த உள்ளம்

சீரியல் தாண்டி
வெளியே வந்தனர் பெண்கள்.




விளம்பர இடைவேளைகளில்
பேசிக்கொண்ட குடும்பம்
நாள் முழுதும்
ஒற்றை விளக்கைச் சுற்றி
ஊர் கதை பேசியது.

"அங்கே தண்ணியே ?
இங்கே வாங்களேன்"
சீரியல் தாண்டி
வெளியே வந்தனர் பெண்கள்.

சேவியர்





# 2 திருமந்திரமும் வாழ்வியலும்

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**

திருமந்திரத்தில் காப்புச் செய்யுளுடன் இறைவணக்கம் உட்பட 113 பாடல்களை விட 2935 பாடல்கள் ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன அவற்றில்

முதற் தந்திரம் முப்பொருள் உண்மையை அதாவது பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் என்றும் உள்ளவை எனும் சைவசித்தாந்தக் கருத்தை விளக்கி, அவற்றின் இயல்புகளை விளக்குகிறது. அத்துடன் யாக்கை, செல்வம், இளமை, உயிர் ஆகியவை நிலையற்றவை என விளக்குகிறது. மேலும் ஒழுக்கம் அதாவது கொல்லாமை, புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை, பிறர் மனைவியை நாடாமை, அறம், அன்பு, கல்வி போன்ற பொதுவான அறங்களை வலியுறுத்துகிறது.



இரண்டாம் தந்திரம் புராணக்கதைகள் மூலம் நல்லொழுக்கம், உண்மைப்பொருள் விளக்கம், ஐந்தொழில்களின் செயற்பாடுக்கேற்ப உயிர்களின் செயற்பாடுகள் பற்றி விளக்குகிறது.

அகத்தியம், அட்டவீரட்டம் (1.அந்தகாசுரனை அழித்த தலம் 2.தக்கன் தலை எடுத்த தலம், 3.பிரமன் அகந்தை அழிந்த தலம், 4.சலந்திராசுரனை அழித்த , தலம், 5.திரிபுரம் எரித்த தலம், 6.யானைத் தோல் போர்த்த தலம், 7.காலனை உதைத்த தலம், 8.மன்மதனைக் கொன்ற தலம்), இலிங்கபுராணம், தக்கன்வேள்வி, பிரளயம், சக்கராயுதம், எலும்பும் கபாலமும், அடிமுடி தேடல் என்பனவும் இதில் அடங்குகின்றது.

மூன்றாம் தந்திரம் அட்டாங்க யோகம், இயமம் (முதற் தந்திரத்தில் கூறிய ஒழுக்கம்), நியமம் (தவம், செபம், ஆத்திகம், மனநிறைவு, தானம், விரதம், ஞானநூற் கேள்வி, சிவ வேள்வி, சிவபூசை, நற்பண்பு முதலியனவற்றை நியமமாகச் செய்தல்.) மூலம் பலப்படுத்திய உள்ளத்தையும், உடலையும் ஒருமுகப்படுத்தி மேலும் பலப்படுத்தச் செய்யும் ஆசனம்ஸ அட்டமாசித்தி, சோதிடம், மற்றும் பிராணாயாமம் (மூச்சுப்பயிற்சி) போன்ற விடையங் களுடன் ஆறு ஆதாரங்கள் (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை) பற்றியும் விளக்குகிறது.

நான்காம் தந்திரம் மந்திரங்கள் மூலம் ஞானத்தை அடையும் வழி, அசபா மந்திரம் (உச்சரிக்கப்படாத மந்திரம்), சக்கரங்கள், நடனசபை (சிற்றம்பலம், பொன்னம்பலம், வெள்ளியம்பலம், தாமிரசபை, சித்திரசபை), திருநடனம் (அற்புதத் தாண்டவம், ஆனந்தத் தாண்டவம், அனவரதத் தாண்டவம், பிரளயத் தாண்டவம், சங்காரத் தாண்டவம்), ஐந்தெழுத்து, எல்லாம் சிவமே எனும் தத்துவம், சிவசக்தி வழிபாடு என்பன பற்றியும் விளக்குகிறது.

ஐந்தாம் தந்திரம் அன்பாலும், அருளாலும் சிவப்பரம்பொருளை அடைய முயலும் வழிபாட்டு முறையான சைவம் (சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடும் சுத்த சைவம்) பற்றியும், இறைவனை அடையும் வழிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் பற்றியும், அவற்றால் கிடைக்கும் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் பற்றியும், சத்திநிபாதம் பற்றியும் விளக்குகிறது.

ஆறாம் தந்திரம் இறைவனே மானுடச் சட்டை தாங்கிக் குருவடிவாக வருவதனையும், ஞானம் பெறும் மார்க்கங்களையும், துறவு, தவம், வேடம், திருநீற்றின் மகிமை பற்றியும் விளக்குகிறது.

ஏழாம் தந்திரம் இறைவன் திருவடிகளைக் காணும் வழிகளான ஆறு ஆதாரங்கள் பற்றியும், இறைவனின் அடையாளமான சிவலிங்கங்கள் (அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம்) பற்றியும், சிவபூசை, சிவதீட்சை, குருபூசை, மகேஸ்வரபூசை, அடியார் பெருமை, போசனவிதி, சற்குரு, சமாதி பற்றியும், ஐம்புலன்களை அடக்கும் முறை பற்றியும் விளக்குகிறது.

எட்டாம் தந்திரம் பதி, பசு, பாசம் பற்றியும், பாசம் அகலப் பசு பதியை அடைவது பற்றியும், சிவன் கோயில் அமைப்பு பதி, பசு, பாசம் (சிவலிங்கம், நந்தி, பலிபீடம்) பற்றியும், மூவகை ஆன்மாக்கள் (விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்) பற்றியும், ஐந்தொழில் ஆற்றும் ஈசான மூர்த்தி பற்றியும், முக்குற்றம் (காமம், வெகுளி, மயக்கம்), முப்பதம் (தத்பதம், தொம்பதம், அசிபதம்), பற்றியும், அசிபதநிலை (தத்துவமசி) அது நீயாய் இருக்கிறாய் என்ற விளக்கம் பற்றியும் விளக்குகிறது.

ஒன்பதாம் தந்திரம் பஞ்சாக்கரம் (தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், அதிசூக்கும பஞ்சாக்கரம்), திருக்கூத்து, முப்பத்தாறு தத்துவங்களும் ஆன்மாவுக்குள் அடங்கிய பின் சிவப்பரம்பொருள் ஆன்மாவைத் தன்வசப் படுத்தும் முறை, ஒளி வடிவில் இறைவனைக் காணல், ஊழ் வினை, சிவதரிசனம், சித்தி மார்க்கம், முத்தி மார்க்கம், சிவபதி சேரும் வழி போன்ற பல விடையங்கள் விளக்கப்பட்டுள்ளன.

இவற்றை விரிவாகப் பார்க்குமுன்பு சில பாடல்களை சுருக்கமாகப் பார்ப்போம்.
திருமந்திரத்தின் இறை வழிபாடு பற்றிய கொள்கை


உலகில் உள்ள மக்கள் அனைவரும் சாதி, சமய வேறுபாடற்ற ஒரு சமுதாயமாக வாழவேண்டும் என்று மனித குலத்திற்கு நல்வழி காட்டிய திருமூலநாயனாரின் உயர்ந்த சிந்தனையான, திருமந்திரத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றான ஒன்றே குலம் ஒருவனேதேவன் என்னும் தத்துவத்தைக் கூறும் பாடல் எண் 2104

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே."

இப்பாடலின் பொருள் "மனித குலம் முழுமையும் ஒன்றுதான், இறைவனும் ஒருவன்தான். எப்பொழுதும் நல்லதையே நினையுங்கள், எவருக்கும் நல்லதையே செய்யுங்கள் இப்படி வாழ்பவர்கள் இறவாப் புகழுடன் வாழ்வார்கள். வெட்கப்படாமல் துணிந்து நீங்கள் செல்லத்தக்க வழி வேறு இல்லை. எனவே மனத்துள்ளே சிவனை நினைத்து அவனருளுணர்வோடு பொருந்தி, தடுமாற்றம் இன்றி அவன் திருவடி நினைந்து நற்கதி அடையுங்கள்." என்பதாகும்.
இக்கருத்திற்கு பொருத்தமாக கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கணித மேதையும், சங்க காலப் புலவருமான கணியன் பூங்குன்றனார் புறநானூற்றில் 192 ஆம் பாடலில் யாதும் ஊரே யாவரும் கேளிர் ( எல்லா ஊரும் எம் ஊர், எல்லா மக்களும் எம் உறவினர் ) என பாடியுள்ளார்.


திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!






**ஸ்ரீ துர்க்காதே உபாசகர் கிருஷ்னா**

01.01.2016, வெள்ளிக்கிழமை அன்று ஆங்கில புத்தாண்டு பிறக்கிறது. வெள்ளி என்றாலே ஸ்ரீமகாலஷ்மிக்கு விருப்பமான நாள். அருமையான தினத்தன்று புத்தாண்டு பிறக்கிறது. இந்த புத்தாண்டு பிறப்பின் விசேஷம் என்னவென்றால், 12 இராசிகாரர்களுக்கும் "கெஜகேசரி யோகம்" என்கிற சிறப்புக்குரிய யோகத்தை கொடுத்து மகிழ்விக்க போகிறது. சிம்ம இராசி, கன்னி லக்கினம், உத்திரம் நட்சத்திரத்தில் பிறக்கும் ஆங்கில புத்தாண்டு, அமோகமாக இருக்கும். செவ்வாய், சுக்கிரன் பரிவர்த்தனை பெறுவதால், நாட்டில் தொழில் வளம் விருத்தியாகும். மக்களுக்கு தேவையான வசதிகள் பெருகும்.. இப்படி மகிழ்ச்சியான புத்தாண்டாக இருப்பினும், இலக்கின இராகு நோய் நொடிகளை கொடுக்கும். ஆனாலும் பெரிய பாதிப்பு இல்லாமல் தக்க நடவடிக்கையால் அமுங்கி விடும். ஸ்ரீதுர்காதேவி அனுகிரகத்தால் குருவும், சந்திரனும் அனுகூலமான சேர்க்கையால் யோகத்தை தரும். எப்படிபட்ட பிரச்னையாக இருந்தாலும் தாக்காது. ஸ்ரீதுர்காதேவியை வணங்குவோம், ஆனந்தம் அடைவோம். நல்வாழ்த்துக்கள்!

**மேஷம்:**

இந்த 2016-ஆம் ஆண்டில், உங்கள் இராசிக்கு பஞ்சஸ்தானத்தில் குரு, சந்திரன் இணைந்து, கெஜகேசரி யோகத்தை தந்திருப்பதால், எதிர்பாரா யோகம் வந்தடையும். தடைபட்ட காரியங்கள் கைக்கு வந்து சேரும். 5-க்குரிய சூரியன்,9-ஆம் இடத்தில் உள்ளார். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. 12-ஆம் இடத்தில் உள்ள கேது, தெய்வ ஸ்தலங்களுக்கு சென்று வரும் பாக்கியத்தை தருவார். 6-இல் இராகு இருப்பதால், கடன் பிரச்னை சற்று குறையும். 10-ஆம் இடத்தில் உள்ள புதன், தடைபட்ட கல்வியை தொடரச் செய்யும். புதிய தொழில் துவங்குவீர்கள். தளர்ந்த தொழில் புத்துயிர் பெறும். அஷ்டம சனியாக இருப்பதால், ஜாமீன் கையெழுத்து, கூட்டாளி விஷயங்களில் கவனம் தேவை.

**ரிஷபம்:**

இந்த 2016-ஆம் ஆண்டில், உங்கள் இராசிக்கு சுகஸ்தானத்தில் குரு, சந்திரன் இணைந்து கெஜகேசரி யோகத்தை தந்திருப்பதால், தடைபட்ட கட்டட வேலை வேகமாக கட்டி முடிக்கப்படும். வாகனம் விருத்தி உண்டு, குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். வெளிநாட்டில் வேலை வாய்ப்பு அமையும். நீண்ட நாட்களாக வாட்டி வதைத்த நோய் நொடி நீங்கும். விரோதியும் அடி பணிவான். அஷ்டமஸ்தானத்தில் சூரியன் உள்ளதால், குடும்பத்தில் சற்று சிறு,சிறு பிரச்னைகள் எழலாம். ஆனாலும் பெரிய பாதிப்பு வராது. பஞ்சமஸ்தானத்தில் இராகு அமையப்பெற்றுள்ளார். பூர்வீக சொத்தால் லாபம் வரும். சப்தமத்தில் சனி, சுக்கிரன் இருப்பதால், கூட்டு தொழில் லாபம் பெறும். 2016-ஆம் ஆண்டு உங்களுக்கு முன்னேற்றமான வாழ்க்கையாக அமையும்.

**மிதுனம்:**

இந்த 2016-ஆம் ஆண்டில், உங்கள் இராசிக்கு 3-ஆம் இடமான வெற்றி, புகழ்-கீர்த்தி ஸ்தானத்தில் குரு, சந்திரன் அமர்ந்து, கெஜகேசரியோகத்தை தந்துள்ளனர். இந்த கெஜகேசரி யோகமானது உங்களுக்கு புகழ், கீர்த்தி ஸ்தானத்தில் அமைந்திருப்பதால், மற்றவர்கள் பெருமைபட வாழ்வீர்கள். சகோதரவர்கத்தால் நன்மை கிடைக்கும். இருப்பினும், சுகஸ்தானத்தில் இராகு இருப்பதால் உடல் நலனில் கவனம் தேவை. 6-ஆம் இடத்தில் சனி, சுக்கிரன் இணைந்து இருக்கின்ற காரணத்தால், எடுத்த காரியத்தை வெற்றி பெறச் செய்யும். திருமணம் நடைபெறும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடக்கும். அஷ்டமஸ்தானத்தில் புதன் உள்ளதால், அயல் நாட்டு தொழில் தொடர்பு வர வாய்ப்புண்டு. வெளிநாட்டில் வேலை வாய்ப்பு வரலாம். 10-ஆம் இடத்தில் கேது இருப்பதால், செய்யும் தொழிலில் நிதானம் தேவை. அகலகால் வைக்கக் கூடாது.

**கடகம்:**

இந்த 2016-ஆம் ஆண்டில், உங்கள் இராசிக்கு தனஸ்தானம் என்கிற இரண்டாம் இடத்தில் குரு, சந்திரன் இணைந்து கெஜகேசரி யோகத்தை உண்டாக்குவதால், மண்ணும் பொன்னாகும். குடும்பத்தில் சுபிட்சமான செலவுகள் ஏற்படும். கடன் சுமை தீரும். புதிய தொழில் உருவாகும். எதிர்பார்த்த நற்காரியங்கள் நிறைவடையும். சுகஸ்தானஸ்தில் செவ்வாய் உள்ளார். வாகன விஷயங்களில் செலவுகள் வரலாம். புதிய வாகனம் வாங்கும் யோகமும் உண்டு. பஞ்சமஸ்தானத்தில் சனி, சுக்கிரன் அமையப்பெற்றுள்ளதால், கவலையே வேண்டாம். வழக்கு பிரச்னை அனைத்தும் பஞ்சு போல் பறந்து விடும். பணம் தாராளமாக வந்தடையும். பாக்கிய ஸ்தானத்தில் ஞானகாரகனான கேது அமையப்பெற்றுள்ளார். குலதெய்வம் அருளால் நன்மைகள் தேடி வரும். 6-ஆம் இடத்தில் குடும்பாதிபதியான சூரியன் இருப்பதால், யாருக்கும் பெரிய அளவில் கடன் கொடுக்கும் வேலை வேண்டாம். மற்றபடி இந்த 2016-ஆம் ஆண்டில் உங்கள் குலதெய்வத்தின் அருளால் மகிழ்ச்சியான வாழ்க்கையாக அமையும்.

**சிம்மம்:**

இந்த 2016-ஆம் ஆண்டில், உங்கள் ஜென்ம இராசியில் சந்திரனுடன், குருவும் இணைந்து, கெஜகேசரி யோகத்தை உண்டாக்குவதால், புதிய உத்வேகம் எழும். குடும்பத்தில் சுபிட்சம் பெருகும். தடைப்பட்டு வந்த திருமணம், தடை இல்லாமல் நடக்கும். தனஸ்தானத்தில் இராகு இருக்கின்ற காரணத்தால், குடும்பத்தினரை மகிழ்ச்சி அடைய செய்வீர்கள். கீர்த்தி ஸ்தானத்தில் செவ்வாய் உள்ளார். மற்றவர்கள் பாராட்டும் படி சாதனை படைப்பீர்கள். சுகஸ்தானத்தில் சனி, சுக்கிரன் இணைந்திருப்பதன் காரணத்தால், சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. 6-ஆம் இடத்தில் புதன் உள்ளார். கடன் பிரச்னை சற்று இருக்கலாம். தேவை இல்லாமல் விரோதம் வளர்க்க வேண்டாம். பரபரப்பு அவசரம் கூடாது. காரணம், இந்த தன்மைகளை புதன் உருவாக்குவார். ஆகவே கவனம் தேவை

**கன்னி:**

இந்த 2016-ஆம் ஆண்டில்,குரு, சந்திரன் இணைந்து கெஜகேசரி யோகத்தை தருவார்.. முக்கியமாக வெளிநாட்டில் தொழில் தொடர்புகளும், வேலை வாய்ப்பும் தரும் யோகம் இது. ஜென்மத்தில் இராகு உள்ளார். தேவைக்கு அதிகமாக கடன் வாங்காதீர்கள். குடும்பஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், இதுநாள் வரையில் குடும்பத்தில் இருந்த குழப்பம் தீரும். கீர்த்தி ஸ்தானத்தில் சனி, சுக்கிரன் உள்ளனர். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. சுகஸ்தானத்தில் சூரியன் அமைந்ததால், கல்வியில் தடை ஏற்படுத்தச் செய்வார். இறைவன் அருளால், குரு பார்வை இருப்பதால் எப்படியும் கல்வியை தொடர்வீர்கள். பஞ்சமஸ்தானத்தில் புதன் இருக்கின்ற காரணத்தால், பூர்வீக சொத்தில் சிறு வாக்கு வாதம் உருவாகி பிறகு சுமுகமாகும். சப்தமஸ்தானத்தில் கேது அமைந்ததால், கூட்டு தொழில் விஷயத்தில் சற்று எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிக்காக சிறு கடன் ஏற்படும்.

**துலாம்:**

இந்த 2016-ஆம் ஆண்டில், குரு, சந்திரன் இணைந்து லாபத்தில் உள்ளனர். ஆகவே, இந்த கெஜகேசரி யோகத்தால் முன்னேற்ற பாதைக்கு வழி தெரிந்து விட்டது. இனி யோக காலம்தான். தொழில்துறையில் மாற்றம் உண்டு. உத்தியோகத்தில் இடபெயர்ச்சி ஏற்படுத்தும். திருமணம் நடைபெற சாத்திய கூறு உண்டு. ஜென்ம இராசியில் செவ்வாய் இருப்பதால், உடல்நலனில் கவனம் தேவை. முன்கோபம் வேண்டாம். ஏழரை சனி உள்ளதால், குடும்பத்தில் சலசலப்பு ஏற்படுத்தும். ஆகவே மௌனம் தேவை. கீர்த்தி ஸ்தானத்தில் சூரியன் அமைந்த காரணத்தால், எடுத்த காரியத்தை போராடி நிறைவேற்றுவீர்கள். சுகஸ்தானத்தில் புதன் உள்ளார். கல்வியால் பலன் உண்டு. உறவினர் வருகையால் சிறு பிரச்னை உருவாக்கும். 6-ஆம் இடத்தில் உள்ள கேது பகவான், வழக்கில் சற்று இழுப்பறி தருவார்.மனதை இறைவழிபாட்டில் செலுத்தி வெற்றிகொள்ளவும்.

தொடர்ச்சி 29 ம் பக்கம்






# எனக்குள்ளும் ஒரு வில்லன்!




மைசூர் மகராஜாவின் அரண்மனை முன்பு நானும் அவளும் அந்த அற்புத அழகை இரசித்து நடந்தோம்.அவன் எங்களைப் பின்தொடர்ந்த வண்ணம் இருந்தான். எம்மை ஏமாற்றிப்பிழைப்பவன் அவன். அவனுக்கு இடம் கொடுத்தால் எம்மை மடக்கிப்போடுவான், திரும்பி பார்க்காதே என்று அவளையும், எச்சரித்தபடி அவனை அசட்டை பண்ணியதாக நடந்தோம்.
அவன் எதோ வழியில் எம்மை குறுக்கிட்டு, நிறுத்தி இந்த செப்புவளையலை வாங்குங்கள் 500 ரூபாதான் என்றான். நாம் "இது தேவை இல்லை எமக்கு" என்றோம். அவன் விடுவதாக இல்லை.

நாம் வேகமாக நடந்தோம். அவன் மீண்டும் குறுக்கிட்டு இந்த வளையலை நீங்கள் சொல்லும் விலைக்கு தருகின்றேன். எனக்குப் பணம் அவசியம் தேவை என்றான். அவன் முகத்தில் ஒரு தேவையின் ஏக்கம் தெரிந்தது. இருந்தாலும் இவங்கள் சுற்றுலாப் பயணிகளை ஏமாற்றிப் பிழைப்பவர்கள் என்ற முத்திரை எம்மனதில் ஆழக்குத்தப்பட்டு விட்டதால் நம்மால் எதுவும் செய்ய முடியவில்லலை.
அவன் திரும்பிவிட்டான். நாம் திரும்பித் திரும்பிப் பார்த்தோம். அவனைக் காணவில்லை. அந்த ஏக்கமான முகம் மட்டும் எமக்குத் திரும்பத் திரும்ப தெரிந்த வண்ணமே இருந்தது.

அரண்மனை பார்த்து முடித்துவிட்டு திரும்பினோம். அதே முகப்பில் அவன் நின்றான். என்னவள் சொன்னாள் "அவன் பாவமாக இருக்கிறன் ஒரு 200 ரூபாவை சும்மா கொடுத்துவிட்டு வாருங்கள்" என்று.

நான் அவனிடம் சென்றேன் கொடுத்தேன். அவனுடைய அந்த முகத்தில் சோகம் இருந்தது ஏக்கம், இருந்தது. ஆனால் .... அவன் சொன்னான் எனக்கு பொருள் விற்காமல் காசு வேண்டாம். இரக்கத்தால் வேண்டாம். அது நோயுடன் இருக்கும் என் தாய்க்குப் பிடிக்காது என்று.
அவன் என்னை விட்டு வேகமாக அடுத்த சுறுலாப் பயணியிடம் சென்றான்.
அவன் மைசூர் மன்னனானன் . நானோ சைபர் ஆனேன்.
பத்து ஆண்டுகள் ஆகியும் இன்னும் அவன் முகம் என்நெஞ்சில் ஆழப்பதிந்தே உள்ளது. அவனை என் வாழ்வில் என்றுமே சந்திக்க மாட்டேன் என்பது மட்டும் நிச்சயமாக இந்த வில்லனுக்குத் தெரிந்தது.

---

# அவள் ஒரு பைரவி மறக்கமுடியாத பாத்திரம்

## கமல் –ஸ்ரீவித்தியா



முத்தக் கட்சியில் தொடங்கி காதல் ரசனையை ரசிகனுக்கு நடிப்பால் உணரவைக்கும் காதல் வித்தகன் தான் கமல்ஹாசன். அவருடன் நடித்த கதாநாயகிகளில் இன்றும் நம் நினைவுகளில் முதலில் நிற்கும் கமலின் ஜோடிகள் யார் யாரென்று ஒருமுறை திரும்பிப் பார்த்தால் அவள் அதிசய ராகம். ஆனந்தராகம் அழகிய ராகம் அபூர்வராகம்.

கமலின் நெஞ்சை விட்டு நீங்காத் தோழி ஸ்ரீவித்யா

கமல்ஹாசனும் ஸ்ரீவித்யாவும் இணைந்து நடித்த முதல் திரைப்படம் " சொல்லத்தான் நினைக்கிறேன்". 1973ல் இயக்குநர் கே.பாலசந்தர் இயக்கத்தில் வெளியான செல்லுலாய்டில் பூத்த க்ளாசிக் காதல். அதன் பின் 1975ல் அபூர்வ ராகங்கள் திரைப்படம் கமல்- ஸ்ரீவித்யாவின் நட்பை உறுதி செய்த திரைப்படம். இருவருக்குமான ஜோடி திரைப்படத்தில் பெரும் எதிர்பார்ப்பையும் வெற்றியையும் தந்தது.
இப்படத்தின் அதிசய ராகம் என்ற பாடல் காட்சி இன்று வரையிலும் பேசப்படுகிறது. தொடர்ந்து 1976ல் சமஸ்யா என்ற மலையாளப் படத்திலும் பின்னர் ஸ்ரீவித்யாவுடன் உணர்ச்சிகள், அன்னை வேளாங்கண்ணி படத்திலும் இணைகிறார்.

வாணியுடன் கமலுக்கு திருமணம் நடைபெறுகிறது. அதன்பின் எட்டு வருடங்கள் கழித்து 1986ல் புன்னகை மன்னன் படத்தில் நடிக்கிறார்கள். இப்படத்தில் பத்மினியாக வரும் ஸ்ரீவித்யா, சாப்ளின் செல்லப்பாவாக வரும் கமல்ஹாசனுடன் நட்பையும் நடிப்பையும் மீண்டும் உறுதிசெய்கிறார். தொடர்ந்து 1989ல் அபூர்வ சகோதரர்கள், இந்திரன் சந்திரன், நம்மவர், கடைசியாக காதலா காதலா என்று அவருக்கும் கமலுக்குமான படங்கள் இருக்கின்றன. தொடர்ந்து சில படங்கள், மீண்டும் கேரளாவிற்கே திரும்புகிறார் ஸ்ரீவித்யா. நோயால் அவதிப்படும் ஸ்ரீவித்யாவின் கடைசி நாட்களில் அவரை மருத்துவமனையிலேயே சென்று சந்தித்து பாசத்தையும், நட்பையும் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டனர் நடிகர்களில் கமல்ஹாசன் முக்கியமானவர். மற்வர்களை நோயுற்ற வேளை பார்க்க அனுமதிக்கவும் இல்லை.

ஸ்ரீவித்யாவின் அந்திமக் காலத்தில் உங்களைச் சந்திக்கவேண்டும் என்று அவர் விரும்பியதாகவும், நீங்கள் சந்தித்ததாகவும் கேள்விப்பட்டேன். அந்த நட்பு பற்றிக் கூறுங்கள் என்று கமலிடம் கேட்டபோது, " அவள் இறந்தாலும் இறவா நட்பு" என்று கூறினார். கமலின் மறக்கமுடியாத ஒரே தோழி ஸ்ரீவித்யாவாகத்தான் இருக்கும். இப்பொது ஒரு முறை அபூர்வராகத்தை மீண்டும் நினைத்துப் பாருங்கள் அவள் ஒரு பைரவி.அவள் ஒரு பைரவி.






Vodafone
Power to you
இதோ!
தைப்பொங்கல்
விஷேட சலுகை!
குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே!
Einmalpreis
1€
Galaxy S6 edge
5,1" Display
16,0 MP Kamera
32 GB interner Speicher
SAMSUNG
Lebara play
Nur solange Vorrat reicht!
FREE
Inkl.
2GB
Datenvolumen
Smart XL
SUB 10 inkl. Smartphone
✓ Allnet Flat Telefonie
✓ Allnet Flat SMS
✓ 2 GB bei 21,6 Mbit/s
49,99€ * /Mon.
one
DISTRIBUTION
Rheinische Str. 70
44137 Dortmund
Tel: 0231 330 16 114
Mobil: 0151 685 77777
email: v-one@outlook.de
* Vodafone Smart XL Smartphone: Bei Abschluss eines Smart XL Tarifs inklusive Smartphone gilt für Neukunden mtl. Paketpreis mit Smartphone (Substufe 10) im Tarif Smart XL für 49,99€. Mindestlaufzeit 24 Monate, einmaliger Anschlusspreis 29,99€. Flatrate für Standardgespräche in alle dt. Mobilfunknetze und ins dt. Festnetz inkl. Konferenz- Verbindungen und Anrufe zu Sondernummern ausgenommen. SMS-Flat in alle dt. Netze inkl. (SMS und MMS zu Sondernummern und im Internet ausgenommen). Bis zu einem Datenvolumen von 2 GB/Mon. bis zu 21,6 MBit/s. Nach Verbrauch des Inklusivdatenvolumens wird die Bandbreite auf 32 KBit/s beschränkt. 24 Mon. Laufzeit. Alle Preise inkl. MwSt.

28ம் பக்கத் தொடர்ச்சி....

# ௨௦16 புதுவருட இராசி பலன்கள்

**விருச்சிகம்:**

இந்த 2016-ஆம் ஆண்டில், உங்கள் இராசிக்கு 10-ஆம் இடத்தில் குரு, சந்திரன் இணைந்து, “கெஜகேசரி யோகம்” அமைந்ததால், மனமகிழ்ச்சி ஏற்படும். தடைகள் நீங்கும். பொன் பொருள் சேரும். குடும்பத்தில் சுபகாரியம், திருமணம் நடைபெறும். தனஸ்தானமான இரண்டாம் இடத்தில், சூரியன் உள்ளார். இதனால், செலவுகள் அதிகம் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. விரயஸ்தானத்தில் செவ்வாய் அமைந்ததால், முன் கோபத்தை தரும். பஞ்சமஸ்தானத்தில் கேது உள்ளார். அயல்நாட்டுக்கு செல்லும் வாய்ப்பு வரும். தொழில்துறை வாய்ப்புகளும், உத்தியோகமும் அயல் நாட்டில் அமையலாம். உங்கள் இராசிக்கு லாபஸ்தானமான 11-ஆம் இடத்தில் இராகு இருப்பதால், அரசாங்க ஆதரவு கிடைக்கும். இதுநாள் வரை இருந்த கடன் தொல்லை நீங்கும். சகோதர வர்க்கத்தால் சற்று மனக்கசப்பு வரலாம். ஆகவே சகோதர-சகோதரிகளிடம் பொறுமை தேவை.

**தனுசு:**

இந்த 2016-ஆம் ஆண்டில், குரு, சந்திரன் இணைந்து உங்களுக்கு கெஜகேசரி யோகத்தை தந்திருப்பதால், தடைபட்ட காரியங்கள் இனி தடை இல்லாமல் நடைபெறும். பொன், பொருள் வீடு, மனை அமையும். ஜென்ம இராசியில் சூரியன் உள்ளதால் உழைப்பு அதிகமாகும். தனஸ்தானத்தில் புதன் இருக்கிறார். குடும்ப செலவு அதிகமாகும். சுகஸ்தானத்தில் கேது அமைந்ததால், உடல் நலனில் கவனம் தேவை. உங்களுக்கு தற்போது விரய சனி நடைப்பெற்று வருகிறது. ஆகவே, யாரிடமும் வாக்கு வாதம் வேண்டாம். லாபஸ்தானத்தில் செவ்வாய் உள்ளார். சோதனை எல்லாம் சாதனையாக மாற வாய்ப்புண்டு. சுபகாரியங்கள் நடைபெறும். 10-ஆம் இடத்தில் இராகு அமைந்து தொழில் துறையில் வளர்ச்சி கிடைக்க காரணமாக இருப்பார். வேலை வாய்ப்பு அமையும். ஆனாலும், கடன் சுமை இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். காரணம் இப்போது உங்களுக்கு 7½ சனியில் விரய சனி நடக்கிறது. வம்பு வந்தாலும் ஒதுங்கிக் கொள்ளுங்கள். நண்பர்களால் ஆதாயம் உண்டு.

**மகரம்:**

இவ்வாண்டு அஷ்டமத்தில் குரு, சந்திரன் இணைந்து, கெஜகேசரி யோகத்தை தந்திருப்பதால், பல நாட்களாக இழுத்துக் கொண்டு வந்த சுபகாரியங்கள், சுபிட்சமாக நிறைவடையும். வாகன விருத்தி, வீடு அமையும் யோகம் அத்தனையும் நடைபெறும். உடன் பிறப்பால் பலன் உண்டு. லாபஸ்தானத்தில் சனி, சுக்கிரன் அமைந்ததால், படிப்படியாக வாழ்க்கை உயரும். உறவினர்களால் நன்மைகள் ஏற்படும். ஜீவனஸ்தானத்தில் செவ்வாய் இருக்கிறார். வியபாரம் வளரும். புதிய வருமானத்திற்கு வழி பிறக்கும். தடைபட்ட கல்வி தொடரும். கடன் சுமை குறையும். பாக்கியஸ்தானத்தில் இராகு உள்ளார். பூர்வீக சொத்தில் சற்று வில்லங்கம் ஏற்படுத்தும். வழக்கு இருந்தால் வெற்றி அடையும். விரயஸ்தானத்தில் உள்ள சூரியன், சற்று குடும்பத்தில் பிரச்னையை உருவாக்குவார். ஆகவே நிதானம் தேவை.

**கும்பம்:**

இந்த 2016-ஆம் ஆண்டில், உங்கள் இராசிக்கு சப்தமதில் குரு, சந்திரன் இணைந்து, கெஜகேசரி யோகத்தை ஏற்படுத்தி தருவதால், தொட்டது துலங்கும். மண்ணும் பொன்னாகும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கான காரண காரியங்கள் உருவாகும். தனஸ்தானத்தில் உள்ள கேது பகவான், விரயங்களை அதிகரிப்பார். அஷ்டமத்தில் உள்ள இராகு விரோதத்தை தேடி தருவார். ஆகவே, எதிலும் கவனமாக இருக்க வேண்டும். பாக்கியஸ்தானத்தில் செவ்வாய் அமைந்த காரணத்தால், வீடு, மனை வாங்கும் வசதி கிடைக்கும். லாபஸ்தானத்தில் உள்ள சூரியன், கல்வி, தொழில்துறை, உத்தியோகம் இவற்றில் நன்மை ஏற்படுத்தும். விரயஸ்தான்த்தில் உள்ள புதன், உறவினர் வருகையால் சற்று செலவுகளை அதிகரிப்பார். உடல் நலனில் கவனம் தேவை. தாய்மாமன் விஷயத்தில் பொறுமை தேவை. தேவை இல்லாமல் குழப்பம் ஏற்படுத்தும். ஜீவனஸ்தானத்தில் சனி, சுக்கிரன் இருப்பதால் நன்மைகளும் தேடி வரும்.

**மீனம்:**

இந்த 2016-ஆம் ஆண்டில், குரு, சந்திரன் இணைந்து, கெஜகேசரி யோகத்தை தந்திருப்பதால், நீங்கள் கண்ட கனவு பலிக்கும். விட்டது, விலகியது அனைத்தும் கைக்கு வந்தடையும். குடும்பத்தில் சுபகாரியம், திருமண விஷயங்கள் பிரமாதமாக நடைபெறும். பாக்கியஸ்தானத்தில் அமைந்துள்ள சனி, சுக்கிரன், புதிய கட்டடம் கட்டும் யோகத்தை தருவார்கள். பொன், பொருள் வாங்கும் பாக்கியம் கிடைக்கும். வீடு, மனை அமையும். உறவினர் வருகை அதிகரிக்கும். கடன்கள் தீரும். வேலை வாய்ப்பு அமையும். நசிந்த தொழில் நிமிர்ந்து நிற்க உதவிகள் கிடைக்கும். நண்பர்களால் யோகம் உண்டு. லாபஸ்தானத்தில் புதன் அமைந்திருப்பதால், நோய் நொடி நீங்கும். 10-ஆம் இடத்தில் அமைந்துள்ள சூரியன், மனமகிழ்ச்சியை வாரி வழங்குவார். பொதுவாக இந்த ஆண்டு உங்களுக்கு மகிழ்ச்சி பொங்க செய்யும் ஆண்டாக அமையும்.




கொழும்பு இரத்மலானை விமானநிலையத்தில்..

**இலங்கைக்கு விஜயம் செய்த ஒரு ஒரு தமிழக முதல்வர் மக்கள்திலகம் எம்.ஜி.ஆர் அவர்களே 17.01.1917 அவர் இலங்கையில் நாவலப்பிட்டியில் பிறந்தார்**

வைத்த விழி வாங்காது, நின்ற இடம் நகராது யாருக்காக நின்றார்கள்? எதற்க்காக நின்றார்கள்?நாடாளும் மன்னனுக்காக நிற்கவில்லை நாட்டின் பிரதமருக்காக நிற்கவில்லை அரசியல் தலைவருக்காக நிற்கவில்லை சமயத்தின் காவலருக்காக நிற்கவில்லை. சர்வாதிகாரிக்காகவும் நிற்கவில்லை. பின், யாருக்காக நின்றார்கள்? ஒரு மனிதனின் வரவை எதிர்பார்த்து நின்றார்கள் எம்.ஜி.ராமச்சந்திரனை எதிர்பார்த்து நின்றார்கள், ஆம்! எம்.ஜி.ஆர். ஒரு மனிதன். மனித உருவில் மிருகங்கள் உலாவும் இவ்வுலகில் - மனிதரைப் போன்ற கயவர்கள் மலிந்துள்ள இவ்வுலகில் - மனிதம்“ என்ற உணர்ச்சி நிறைந்த , உயர்ந்த பண்புகளும் சிறந்த குண்நலன்களும் நிறைந்து விளங்கும் மனிதன் என்ற நிறைகுடம் எம்.ஜி.ஆர். அந்த மனிதனை எதிர்பார்த்துத்தான் ஆயிரம் ஆயிரமாகக் கூடி நின்றார்கள் மக்கள். கண்டவுடன் களிபேருவகை கொண்டார்கள் கடவுளைத் தொழுவதைப்போல் கை கூப்பி வணங்குகின்றார்கள்.கொழும்பிலும், கண்டியிலும், மட்டுநகரிலும், மாத்தளையிலும், யாழ்ப்பாணத்திலும், நுவரெலியாவிலும் இதே காட்சி இதே நிகழ்ச்சி! சரித்திரம் கண்டறியாத சனத்திரள் ஒவ்வொரு நகரத்திலும் கூடியது....





ஸ்ரீ கனகதுர்க்கா
அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721
Robert koch Str.5- 58239 Schwerte

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main





நெடுந்தீவு முகிலனின்
முழுப்பக்கம்

# கதையும் கவிதைகளும் 1

கதை -

## ஒரு கல்லில் இரண்டு மாங்காய்

இடம் பெயர்ந்து அகதியாய் வாழும் மக்களுக்கு உதவி செய்வதற்கொன்று பல நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன. இதில் சில நிறுவனங்கள் மக்களுக்கு என்ன தேவை என்பதை தெரிந்து கொள்ளாமல் தங்களிடம் இருக்கும் பொருட்களை மக்களுக்கு வழங்கி வருகின்றனர். குறிப்பாக விவசாயம் செய்யும் வயலை நம்பிவாழும் மக்களுக்கு மீன் வலையையும்.. கடலை அண்டி வாழும் மீன் பிடி மக்களுக்கு மண்வெட்டியையும் வழங்கி தங்கள் நிறுவன பெயரை தக்கவைத்து கொள்கின்றனர்.

பல மாதம்களின் முன்னர் கணவரை இழந்த ஒரு விதவை பெண்ணுக்கு ஒரு நிறுவனம் கோழிக்கூடு ஒன்றை வழங்கியது. கோழியோடு சேர்த்து கோழி கூட்டின் விலை நாற்பதாயிரம் ருபா. அந்த பெண்ணிடம் இருந்து நிறுவனம் வெறும் ஐந்தாயிரம் ருபாவை தவனை கட்டணமாக கேட்டது.

கோழிக்கூடு கொடுத்த அடுத்த நாளே புகைப்படங்கள் பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்பட்டது. நிறுவனத்தின் பணியை பாராட்டி பல புத்திஜீவிகளும் நல்ல கருத்துகளை தெருவித்தார்கள். லைக் கொடுத்தார்கள்.

சில மாதங்கள் கழித்து அந்த நிறுவன ஊழியர்கள் தவணை கட்டணத்தை வாங்குவதற்கு அந்த பெண்வீட்டுக்கு சென்றனர். அந்த பெண்ணுக்கு மூன்று குழந்தைகள். கோழி இடுகின்ற முட்டை குழந்தைகளின் சாப்பாட்டுக்கே சரியாக போகிறது. இந்த மாதத்தில் இருந்து முட்டைகளை கடைக்கு கொடுத்து பணத்தை சேமிக்கிறேன் பணத்தை கட்டுவதற்கு இன்னும் ஒருமாத தவணை கேட்டாள்.

ஒருமாதம் கழித்து நிறுவன ஊழியர்கள் திரும்பவும் அந்த பெண் வீட்டுக்கு சென்றனர். கோழி கூட்டில் ஒரு கோழி கூட இல்லாமல் இருந்தது. எல்லாக்கோழிகளையும் கீரி பிடித்து தின்றுவிட்டதாக அந்த பெண் கண்ணிரோடு கதை சொன்னாள். இருந்தாலும் நிறுவனம் ஐந்தாயிரம் ருபாயை விடவில்லை. அந்த பெண் தனது காதில் இருந்த தோட்டினை அடகு வைத்து பணத்தை கொடுத்தாள்.

சிலமாதம் கழித்து நிறுவன ஊழியர்கள் அந்த பெண்விட்டுக்கு சென்று கோழிக்கூடு சும்மா தானே உங்கள் விட்டில் இருக்கிறது. அதை தாருங்கள் நாம் வேறு பயனாளிகளுக்கு அதனை வழங்குகிறோம் என்றார்கள். அந்த பெண்ணும் கோழி கூட்டை கொடுத்தாள். அந்த நிறுவனம் சில கோழிகளை வாங்கி வேறு ஒரு விதவை பெண்ணுக்கு கோழிக்கூட்டை வழங்கினார்கள்.

கோழிக்கூடு வழங்கிய புகைப்படங்களை இணையத்தில் பிரசுரித்தார்கள் கருத்து தெரிவித்து லைக் பண்ணுவோரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. நிறுவனம் நிறைவாக வளர்ந்தது. பாவம் அந்த விதவை பெண். அடகு வைத்த தோட்டினை மீட்க முடியாமல் போக வங்கி தோட்டினை ஏலத்தில் விற்றது.

கவிதை 01

### வயதுக்கு வந்த பிறகும் வாழ்வு செழிக்கவில்லை....

நான் வயிற்றில் இருக்கையில் ஆண்மகன்
என்று அம்மா கனவு கண்டாளாம்

பிரசவத்தின் பிற்பாடு அப்பாவின் வருமானத்தில்
இருந்து பத்து விகிதம்
வரதட்சணைக்காய் வங்கிக்குப் பறந்தது

என் பூப்பெய்தல் காலத்தில் சேமிப்பில் இருந்த சில
பகுதி தீட்டுக்குச் செலவானது.

பட்டப்படிப்பே என் கனவான போதிலும்
பள்ளிக்கூடம் கூட
பாதியிலே தலைமறைவாக்கப் பட்டது.

கொஞ்ச நாளாய் என் படுக்கை விரிப்பில்
சிதறிக்கிடந்தன. வெளிநாட்டு மாப்பிளைகளின்
“கோட்” அணிந்த புகைப்படங்கள்.



அவர்களை தெரிவு செய்வதற்குள்
பலர் தேர்வு எழுதிப்போனார்கள்.

“மணமகன்” தேவைக்கு பத்திரிகைகளில்
விளம்பரம் எழுதியும் ஊனமுற்றவனேனும்
உதவ முன்வரவில்லை

காதலிக்க பின்னால் வந்தவனும் செவ்வாய்
தோசத்தால் திரும்பிப் போனான்.

கல்யாணமே வேண்டாம் என்கிற முடிவுக்கு
வந்துவிட்டேன் - காரணம்
சிலவேளை எனக்கும் பெண்குழந்தை பிறந்து விட்டால்.

கவிதை 02

### சொல்கிறார்கள்...

என் சகோதரியை விசாரித்தேன்.
புதைகுழியை தோண்ட சொல்கிறார்கள்.

என் துண்டு நிலத்தை கேட்டேன்.
காவலரண்களை
புதுப்பித்திருக்கிறார்கள்.

என் பனந்தோப்பை பார்த்தேன்.
அரசமரங்களை நாட்டியிருக்கிறார்கள்.

என் வாகனங்களை தேடினேன்.
இரும்புகளை காண்பித்தார்கள்.



Dortmund
நகரில்
Milin Impex GmbH
தமிழர்களுக்குத் தேவையான எல்லா உணவுப்பொருட்களின் மொத்த மலிவு விற்பனையாளர்கள்
Geschäftszeiten: Dienstag, Mittwoch, Freitag 10:00
bis 19:00 UhrMontag & Donnerstag 07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 UhrSonn.
und Feiertags: Geschlossen


மேலதிக விபரங்களுக்கு
Web :www.milinimpex.de
அனைவருக்கும் எங்கள்
இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்
பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள் இவற்றின் இறக்குமதியாளர்கள்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288

# மீண்டும் சிம்ரன்.



புதிய போட்டோஷூட் ஒன்றை நடத்தியுள்ளார் சிம்ரன். இதில், பிரபல புகைப்படக்கலைஞர் சுபா, சிம்ரனை விதவிதமாக அழகாக புகைப் படங்களாக எடுத்துள்ளார். தமிழகத்தை வெள்ளம் வந்து கொண்டுபோனது. இப்போ அந்தவெள்ளம் சினிமாமூலம் காசாகத் தயாரகிறது. தண்ணீரை மையப்படுத்தி இந்தப் போட்டோஷூட் நடத்தப்பட்டுள்ளது. இதற்கென 7 செட்கள் போடப்பட்டதாம்.

இதுவரை தண்ணீரை மையப்படுத்தி யாரும் அவ்வளவாக போட்டோஷூட் நடத்தியதில்லை என்பதால், இந்த வித்தியாசமான முயற்சியில் ஈடுபட்டாராம் சிம்ரன். பூவுடன்... இதன் ஒவ்வொரு புகைப்படத்திலும் தண்ணீர் மற்றும் பூ தவறாமல் இடம் பெற்றிருக்கிறது. விதவிதமான அலங்காரத்தில் அழகாக ஜொலிக்கிறார் சிம்ரன்.




சிம்ரன் கரையோரம் என்ற படத்தை அவரே தயாரித்து, நடித்து வருகிறார். இந்தப் படத்தில் அவருக்கு போலீஸ் வேடம்.

பேய்ப்படம்... இது தவிர அறிமுக இயக்குநர் பாலா இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்க இருக்கிறார் சிம்ரன். பேய்ப் படமான இதில், இரண்டு குழந்தைகளுக்கு தாயாக நடிக்கிறார் சிம்ரன்.

சவாலான படப்பிடிப்பு வித்தியாசமான களம் என்ற போதும், பாதி தண்ணீரில் மூழ்கியவாறு, உடலை விறைப்பாக வைத்துக் கொண்டு போட்டோக்களுக்கு போஸ் கொடுத்தது கொஞ்சம் சவாலானதாக இருந்ததாகவும் சிம்ரன் கூறியுள்ளார். உங்களுக்கு சவால்.. உங்களது ரசிகர்களுக்கு சந்தோஷம்! உங்கள் உள்ளம் பெரிது இல்லை என்றால் வெள்ளம் காசாகுமா?

# இப்போ நானும் நடிகன்தான்!!!






பிட்சா படத்தில் பக்கத்துவீட்டு பையன்போல் தோற்றத்துடன் வந்து இவன் நம்மபையன் என தம்முடன் நட்பாக்கி கொள்ளும் அளவிற்கு உங்களில் ஒருவனாகிவிட்டவர் இந்த விஜய்சேதுபதி.

அலட்டிக்கொள்ளாத இயல்பான நடிப்பும் கதைக்கு ஏற்றால் போல் தோற்றமும் கொண்ட நடிகர் இவர்.

யாருக்கு என்ன திறமை இருந்தாலும் சந்தர்ப்பம் அமைவதைப்பொறுத்தே திறமை பளிச்சிடும். அறிவிப்பாளராக விஜய் ரீவியில் கலக்கி வந்த சிவகாத்திகேயன், தனுஷ் படம் 3 இல் ஒரு சிறுபாத்திரத்தில் வந்து நுழைந்தார்.

பின் மெரினா அதனைத் தொடர்ந்து தனுஷ் தயாரிப்பில் எதிர்நீச்சல் படத்தில் ஒரு நடிகனானார். பின் வருத்தப்படாத வாலிபர் சங்கம், அதனைத் தொடர்ந்து தனுஷின் காக்கிச்சட்டை, இப்படி சிவகாத்திகேயன் வளர்ந்தார். தனுஷ் சிவா உறவு முற்றுப்பெற்றது.

இது அவரவர் திரையுலக வாழ்வுக்கு சிறப்பானதே. தற்போது சிவகாத்திகேயன் இடத்திற்கு தனுஷ் இனங்கண்ட நடிகர் விஜய் சேதுபதி. முதல் கூட்டு பெரும் வெற்றி. நானும் ரவுடிதான் ஒரு வித்தயாசமான கலக்கல். சும்மா சொல்லப்படாது ராஜா ராணிக்கப்பின் நயன்தரா நடிக்க ஆரம்பிச்சிட்டா! என்று சொல்லும் அளவிற்கு அப்படத்தில் நயன்தராவின் நடிப்பு இருந்தது.

நயன்தாராவைத் தொடர்ந்து அடுத்ததாக தமன்னாவுடன் காதல் பண்ணப் போகிறார் நடிகர் விஜய் சேதுபதி. நானும் ரவுடிதான் படத்தைத் தொடர்ந்து மீண்டும் வெற்றி நாயகனாக மாறியிருக்கிறார் விஜய் சேதுபதி. தற்போது இயக்குநர் சீனு ராமசாமியின் தர்மதுரை படத்தில் விஜய் சேதுபதி நடிக்கவிருக்கிறார்.

இந்தப் படத்தில் முதன்முறையாக நடிகை தமன்னாவுடன் விஜய் சேதுபதி நடிக்கிறார். சீனு ராமசாமி இயக்கிய தென்மேற்குப் பருவக்காற்று படத்தின் மூலம் நாயகனாக அறிமுகமானவர் விஜய் சேதுபதி. சீனு ராமசாமியின் இயக்கத்தில் 2 வது முறையாக விஜய் சேதுபதி நடித்த இடம் பொருள் ஏவல் திரைப்படம் வெளியீட்டிற்குத் தயாராக உள்ளது. இந்நிலையில் 3 வது முறையாக விஜய் சேதுபதி - சீனு ராமசாமி இருவரும் இணைந்திருக்கின்றனர். இப்படத்தில் தனது கதாபாத்திரம் மிகவும் கவர்ந்ததால் தமன்னா உடனே ஒத்துக் கொண்டுவிட்டாராம். தை மாதம் தமன்னா சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்படவுள்ளதாக படக்குழுவினர் கூறுகின்றனர். நானும் ரவுடிதான் படத்தைத் தொடர்ந்து "நானும் நடிகன்தான்" என்பதால் விஜய் சேதுபதியின் மதிப்பு கோலிவுட்டில் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
Emirates
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com


SATISFACTION 100% GUARANTEE
Online: asiamarkt24.com
ANDROID APP ON Google play
Phone: +49 231 330 46 798
asiamarkt 24
அனைவருக்கும்
எங்கள் இனிய
தைப்பொங்கல்
நல் வாழ்த்துக்கள்
Go shop online: Desktop / Mobile / App
வேகமான டெலவரி - சிறந்த விலை உத்தரவு - சகல பொருட்கள் - சுலபமான ஆர்டர்செய்தல்
fast delivery - best price guarantee - wide selection - easy ordering


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...
VALUTRANS MONEY TRANSFER
உரிமையாளர்:
பா.கணேஷ்
நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


புதிய இலங்கை உணவகம்
Dortmund நகரில்...
NEW CEYLON IMBISS
நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
இலங்கை உணவை
சுத்தமாக
சுவையாகச்
சுவைக்க
நாடுங்கள்
திங்கள் முதல்
சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும்
விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை
Tel: 0231 72 52 859
0171 6157 130
Annen Str.1
44137 Dortmund


என்றும் மலிவாக
தரமாக திருமணப்
பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள்,
சிறுவர்களுக்கான ஆடைகள்,
பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம்,
புது டிசைன்களில்,
எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக்
காரணம், அதுவே!
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
Jasmine Silk House
08.12.2015 திகதி முதல் 09.02.2016 வரை
எமது நிறுவனம் திருத்வேலைகளுக்காகப்
பூட்டப்பட்டு இருக்கும்வாடிக்கையாளர்கள்
உங்கள் தேவைகளுக்கு முந்துங்கள்
10.02.2016 புதுப்பொலிவுடன்
ஆரம்பமாகும்
HP:0173 1937 325
Tel:02102 844744
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
T.Mohanadas
நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்


யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
StaR - Impex
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய தைப்பொங்கல்
நல் வாழ்த்துக்கள்
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Kipper Str.3 44147 Dortmund Germany